# சபரீச கானம்

## பக்திப் பாமாலை



வெளியீடு

சபரீச ஐயப்பன் தேவஸ்தானம்

கோண்டாவில்

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
சாமியே சரணம் ஐயப்பா

கோண்டாவில்
யாழ். சபரீச ஐயப்ப சுவாமி
தேவஸ்தானம்.

சபரீச ஐயப்பன்
தேவஸ்தான வெளியீடு

# சபரீசகானம்

## பக்திப்பாமாலை

சபரீச ஐயப்பன் தேவஸ்தானம்,
இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்,
இலங்கை.
T.P : 021 222 7688
0777 110629


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : சபரீசகானம் பக்திப் பாமாலை
பதிப்பு : ஐப்பசி 2004 (04.11.2004)
பிரதிகள் : 500
வெளியீடு : சபரீச ஐயப்பசுவாமி தேவஸ்தானம்.
இருபாலை வீதி.
கோண்டாவில் கிழக்கு.
யாழ்ப்பாணம்.
இலங்கை.
தோ.பே.இல 021 222 7688
0777 110629
அச்சிட்டோர் : சிவரஞ்சனம் ஒவ்செற் பிறிண்டேர்ஸ்.
இல. 183.
பலாலி வீதி.
கோண்டாவில்.
தொ.பே.இல : 222 6722

BooK : "Sabareesakanam Pakthippamalai.
Edition : October 2004 (04.11.2004)
Copies : 500
Published By : J/Sapareesa Iyappan Temple,
Irupalai Road,
Kondavil East,
Jaffna,
SriLanka.
T.P : 021 222 7688
0777 110629
Printed By : Sivaranjanam Offset Printers,
No 183, Palaly Road,
Kondavil.
Jaffna.
T.P : 222 6722


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுவாமியே சரணம் ஐயப்பா"



# வெளியீட்டுரை

"என் கடன் உன் பணி செய்து கிடப்பதே" இக் கலியுகத்தின் கண் கண்ட தெய்வமாக விளங்கி நாடி வருவோர்க்கு கோடி இன்பம் தந்தருளும் சபரிமலை ஸ்ரீ ஐயப்ப சுவாமியின் பாதம் பணிந்து இலங்கைத் திருநாட்டில் வீணாகானம் எனும் பெயர் விளங்கும் புண்ணிய பூமி சப்த தீவுகளின் தலைநகராக விளங்குகின்ற யாழ்ப்பாணத்தில் கோண்டாவில் எனும் பதியில் 18 படிகளோடு கொடிஸ்தம்பம் மற்றும் பரிவாரமூர்த்திகளோடு கோவில் கொண்டு எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் யாழ் சபரீச ஐயப்பன் தேவஸ்தானத்தில் தேவஸ்தான வெளியீடாக சபரீசகானம் பக்தி பாமாலை என்னும் நூல் தேவஸ்தான வெளியீடாக பல பஜனைப் பாடல்கள், தத்துவங்கள், வரலாறு, மந்திரங்கள் போன்றன உள்ளடக்கி எங்களுடைய ஐயப்ப பக்தர்கள் நலன்கருதி எல்லோருக்கும் பயன் உள்ளதாக உபயோகப்பட வேண்டும். ஐயனின் மகிமை உலகெங்கும் பரவ வேண்டும். பக்தர்கள் அதிகரித்து ஐயப்பன் வழிபாடு எங்கும் நடைபெற வேண்டும் என்ற ஒரே நோக்கோடு இந்த சபரீசகானம் எனும் பக்திபாமாலை நூல் தொகுத்து ஆலய வளர்ச்சிக்காக தேவஸ்தானத்தால் வெளியிடுகிறோம். இந்நூல் புதிதாக ஐயப்பன் விரதம் ஆரம்பிக்கும் கன்னிசாமிகள் மற்றும் பக்தர்களுக்கு சகலவிரத விதிமுறைகளும் அடங்கிய புத்தகமாக வெளிவந்து உள்ளது. இந்நூல் கடந்த மூன்று வருடங்களாக முயற்சி எடுத்து இவ்வாண்டிலே நிறைவேறி உள்ளது. எல்லாம் அவன் செயல் இந்த பூ உலகிலே ஜாதிமத பேதம் இல்லாத தெய்வம் ஐயப்பன். அதுபோல் மனிதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வமாக்கும் கடவுள் ஐயப்பன். பூ உலகுக்கு பூதநாதனாக விளங்கும் இறைவன் ஐயப்பன். இதை நாம் ஒருபோதும் மறக்கக் கூடாது. வருடந்தோறும் எமது ஆலயத்தில் விரத அனுஸ்டானங்கள் முறைபடி நடைபெற்று சபரி யாத்திரை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. போக இயலாத பக்தர்கள் எமது ஆலயத்தில் இருமுடி கட்டி 18 ம் படி ஏறி நெய் அபிஷேகம் செய்யலாம்.

இந்த ஆலயம் அமைத்ததன் நோக்கமே யாத்திரை மேற்கொள்ள முடியாத பக்தர்கள் இங்கு இருந்தே அங்கு நடைபெறுவது போல் சகலவிதமாக விடயங்களும் இங்கே செய்வதற்காக இந்த மகரஜோதி மண்டல பூஜையில் கலந்து உபயங்கள், தொண்டுகள், உதவிகள், சேவைகள் செய்த மெய்அன்பர்கள் சாமிமார்கள் குருசாமிகள் அனைவரும் இந்த வெளிவரும் நூலை வாங்கிப் படித்து பாடி காலையும், மாலையும் பாராயணம் செய்து ஐயனின் அருள்பெற்று பெருவாழ்வு வாழ்வீர்களாக இந்நூல் தொகுத்து வெளி வருவதில் நாமும் எனது குடும்பத்தினரும், நண்பர்கள், அடியார்கள் எல்லோரும் பெரும் ஆனந்தம் அடைகின்றோம். இந்த நூலில் பொருட்பிழை, சொற்பிழை இருப்பின் அனைத்தையும் மன்னித்து இந்நூலினை வெளியிட அடியார்கள் ஆகிய உங்களின் ஒத்துழைப்பை நாடுகிறோம். இந்நூல் சபரீசகானம் என்ற பக்திபாமாலை சபரீச ஐயப்பனின் பாதார விந்தங்களில் சமர்ப்ப ணமாகின்றது.

**இங்ஙனம்,**
**தேவஸ்தான பிரதம குருவும்,**
**அறங்காவலரும், ஆலய குருசாமியும்,**
**பிரம்மஸ்ரீ கி. அரிகரசுதசர்மா,**
**ஐயப்பன் தேவஸ்தானம்.**

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு
யாழ்ப்பாணம்.
TP : **0777 110624**
**077 6247073**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை



கல்வியினால் ஏற்படும் இடர்களையும் களைந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் கண்கண்ட தெய்வமாக விளங்கும் ஐயனார் ஹரிஹரபுத்ரன், ஐயப்பன் சாஸ்தா எனும் நாமங்களுடன் அருள்பாலித்து வருகின்றார். சபரிமலையிலேயே எழுந்தருளி இருக்கின்ற ஐயனைத் தரிசித்து அருள்பெற வருடா வருடம் பல்லாயிரக்கணக்கான ஐயப்பசுவாமிகள், பக்தர்கள் சபரிமலை யாத்திரை செய்வது அனைவரும் அறிந்ததே.

அனலைதீவிலே பழைமையும், மகிமையும், புகழும் மிக்க ஐயனார் கோவிலிலே பாரம்பரியமாகப் பணிபுரியும் குரு பரம்பரையில் பிறந்து பூசனை செய்பவரும், பிள்ளையார் பட்டியில் வேதாகமக் கல்வி கற்றுத் தேர்ச்சி பெற்றவரும், பக்தர்களின் பெரு மதிப்பைப் பெற்றவருமான ஸ்ரீ.கி. ஹரிஹரசுதசர்மா அவர்கள் அகிலப் புகழும் ஐயனின் அருமை பெருமைகளை விளக்கி பக்தர்களின் உள்ளத்தை பரவசப்படுத்திப் பக்தி வலையிற் படச்செய்யவல்ல சிறந்த பாமாலைகளை தொகுத்து "சபரீச கானம்" எனும் பெயரில் வெளியீடவிருப்பதனையறிந்து பெருமிதமடைகின்றோம். இந்நூல் தொகுப்பாசிரியரின் முயற்சி போற்றத்தக்கது.

பக்தர்கள் அடியார்கள் அனைவரும் இந் நூலைப் பெற்றுப் பாராயணஞ் செய்து சரண கோஷப்பிரியன் ஐயப்ப சுவாமியின் திருவருளினாலே நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம் மன அமைதி முதலாம் விரும்பிய பேறுகளைப் பெற்று வாழ்வாராக.

இந்நூலாசிரியர் இது போன்ற பல நூல்களை வெளியீட ஐயன் ஹரிஹர புத்ரன் அருள் புரிவாராக ஆசிகள் பல.

**இப்படிக்கு,**
**பூரண தியாகராஜக் குருக்கள் (B.A.Hons)**
**அண்ணாமலை சர்வகலாசாலை**
**சிவாசார்ய கலாநிதி,**
**மட்டக்களப்பு (கனடா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"சாமியே சரணம் ஐயப்பா"

# ஆசிச்செய்தி

சபரீசகானம் எனும் பக்திப் பாமாலையின் சந்தோச பலன்.

இலங்கை திருநாட்டினிலே யாழ்ப்பாணத்தில் கோண்டாவில் எனும் பதியில் 18 படிகளோடு சபரீசனாகப் பக்தர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டு இருக்கின்றார். இவ்வேளையிலே பக்தர்களுக்காக "சபரீச கானம்" என்னும் பக்தி பாமாலை நூலை தேவஸ்தான வெளியீடாக அச்சிட்டு வெளியிட முன் வந்துள்ளார்கள். இதனை எண்ணி நான் பேரானந்தம் அடைகின்றேன். பிரார்த்தனை ஒரு மனிதனை பூரணத்துவம் ஆக்குகின்றது. இறைவன் அருள் அவனை நல்வழியில் கொண்டு செல்கின்றது. அதற்கு இந்த சபரீசகானம் எனும் பக்திபாமாலை ஒரு வழிகாட்டியாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. பாலும், தேனும், நெய், முக்கனியும் சேர்ந்து தித்திப்பது போன்று இந்த சபரீசகானம் எனும் பத்திபாமாலை எனும் நூலில் ஐயனின் பத்தி பரவசமாக பாதச் சுவடுகள் ஒவ்வொரு பக்கத்திலும் பட்டு மிளிர்கின்றது.

மனிதனை தெய்வமாக்குகின்ற ஒரே தெய்வம் ஐயப்பன், இந்த ஐயப்பனின் பாடல்கள் அடங்கிய நூல் அடியார்கள் நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கி தினமும் காலை மாலை பாராயணம் செய்து ஐயனின் மகிமைகளைத் தெரிந்து கொள்வதற்கு இந் நூல் மிகவும் உகந்ததாக உள்ளது. இப்படி ஒரு நூல் வெளியீடு பற்றி நல்ல எண்ணங்கள் தோன்றி அடியவர்களின் நலன்களுக்கு ஏற்ப அன்பு பணியாக செய்த ஆலய குருவும், அறங்காவலருமான சபரீசன், அருள் பெற்ற குருசுவாமியுமான கி. அரிகரசுதசர்மா அவர்களுக்கும் எனது நல்லாசிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எல்லா அடியவர்களும் இந்நூலைப் பெற்று ஐயனின் அருள் கிடைக்க நல்லாசி வழங்குகின்றேன்.

**இங்ஙனம்,**

**ஸ்ரீ கைலாசநாத வேத சிவாகம பாடசாலை**

**"ஸ்ரீவித்யா குரு" குருஜீ.ஸ்ரீ.ந.பரமேஸ்வர சிவாச்சாரியார்.**

**தென்னிந்தியா, தமிழ்நாடு**

நிர்வாகம்

கை. வாமதேவக்குருக்கள்

வா. கைலாசநாதசர்மா

– சுபம் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

இப்புவியிலே பெறற்கரிய பேறான மனிதப் பிறவியினை பெற்ற நாம் நல்ல வழியிலே செல்வதற்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலே கேரளாவில் சபரிப் பதியிலே ஐயப்பனுக்கு பதினெட்டுப் படிகளுடன் கூடிய ஆலயம் அமைந்துள்ளது. சபரிச் செல்வமான ஐயப்பனை தரிசனஞ் செய்யப் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருடா வருடம் பல தேசங்களிலிருந்தும் சென்று தரிசித்து வருகிறார்கள். அதே போல் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்பபாண நகரிலே கோண்டாவில் பதியிலே சபரிமலையில் அமைந்திருப்பது போல பதினெட்டுப் படிகளுடன் கூடிய ஆலயம் ஒன்றினை சபரீச ஐயப்பனுக்கு அமைத்து ஐயப்பனுக்கு நடைபெற வேண்டிய சகல விழாக்களையும் நடாத்தி ஐயப்ப பக்தர்கள் வழிபட வழிவகுத்த குருஸ்வாமி. பிரம்மஸ்ரீ.கி. அரிகரசுதசர்மாவின் பணி போற்றுதற்குரியது ஆலயம் அமைத்ததோடு மட்டுமல்லாது ஐயப்பனை வழிபடும் முறைகள், விரத அனுட்டான முறைகள், பஜனைப் பாடல்கள் போன்ற விடயங்களைத் தொகுத்து "சபரீச கானம்" என்னும் மலராக வெளியீடும் அவரது அரும் பணியினைப் போற்றி அவர் இது போன்ற அரிய பல நூல்களை இனிவரும் காலங்களில் வெளியிட வேண்டும் என ஆசி கூறி கண்கண்ட தெய்வமாம் ஐயப்பன் அருளால் சகல பேறுகளும் பெற்று நீடூழி காலம் பூரணமான ஆனந்தமான வாழ்வு வாழ ஐயப்பனைப் பிரார்த்திக்கிறேன்.

**பிரம்மஸ்ரீ ஞானசம்பந்த-ஜோதிநாதக்குருக்கள்,**<br>**பிரதமகுரு**<br>**சிவபூதவராயர் தேவஸ்தானம்,**<br>**கோண்டாவில் வடக்கு,**<br>**கோண்டாவில்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



இசையால் உருவாகியவன் இறைவன். இசைக்கு இசைந்து வசமாகாத இதயம் எதுவும் இல்லை. அலைபாயும் மனத்தை ஒருமைப்படுத்தி அமைதி அடையச் செய்கிறது. இறைவனிடம் வரம் பெற்றோர், பல அடியார்கள் வேதங்கள் யாவும் இசை மூலமாக ஓதப்படுகின்றது. ஆலயத்தில் நாதரூபமாகவே இறைவன் துதி செய்யப்படுகின்றான். சமயத்தைப் பரப்பும் வகையில் தேவாரங்கள், பாசுரங்கள், பக்திப் பாடல்கள் இறைவன் புகழைப்பாடி வைக்கப்பட்டன. அதிலும் சுவாமி ஐயப்பன் வழிபாட்டில் முக்கியத்துவம் வாய்ந்தது பஜனைப் பாடல் ஆகும். ஐயப்பசுவாமி மீது பாடப்பட்ட பாடல்கள் ராக தாளத்துடன் பக்திப் பரவசமூட்டுபவையாக உள்ளன. ஐயப்பன் விரத காலம் ஆகிய கார்த்திகை, மார்கழி மாத குளிரைக்கூட உணரமுடியாமல் செய்யக்கூடிய பரவசத் தன்மையைத் தருவன ஐயப்பன் பஜனைப் பாடலாகும். இந்த வகையில் "சபரீச கானம்" எனும் பக்திப் பாமாலை எனும் பெயரில் வெளியிடப்படும் பஜனைப் பாடல்கள் தேவஸ்தான வெளியீடாக ஆலயத்தின் அறங்காவலரும், குருசாமியும், பிரதமகுருவும் ஆகிய பிரம்மஸ்ரீ.கி. அரிகரசுதசர்மா அவர்களின் தலைமையின் கீழ் அவரின் அயராத உழைப்பினாலும் ஐயப்ப பக்தர்களின் நலன் கருதி சிறப்பாக தொகுத்து ஐயன் திருவருளோடு இந்தப் பக்திப் பரவசம் ஊட்டும் பாடல்கள் நூலாக வெளிவருகின்றது. இதுபோன்று தத்துவங்கள் அடங்கிய பல நூல்கள் வெளியிடப்பட இருக்கின்றன. அறங்காவலர் ஆலய வளர்ச்சியில் மட்டுமல்லாது பக்தர்களின் உள்ளங்களிலும் ஐயப்பன் நிறைந்து நிற்கவேண்டுமென்ற அவாவில் இவ் முயற்சியை எடுத்துள்ளார். அவரது முயற்சி மேன்மேலும் பெருக இவ் நூல் வெளியீடானது நல்ல பயனைத் தரவேண்டும் என்று அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், பாரியாருக்கும் நல்லாசிகளைக் கூறுவதோடு இந்த நூல் பக்தர்களின் கைகளில் தவழ்ந்து அவனது புகழ்பாடிச் சபரீச ஐயப்பனின் பேரருள் சகலருக்கும் கிடைக்கப் பாதாரவிந்தங்களை வாழ்த்துகின்றேன்.

**வேதசிவாகம ஞானபானு**
**க. மு. சோமசுந்தரக்குருக்கள்**
**பர்வதபத்தினி அம்மன் தேவஸ்தான பிரதமகுரு**
**உரும்பிராய்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சாமியே சரணம் ஐயப்பா"



# வாழ்த்துச் செய்தி

இலங்கையின் ஈழம் என்னும் பெயர் விளங்கும் யாழ்ப்பாணம் கோண்டாவில் பதியில் 18 படிகளோடு கோவில் கொண்டு எழுந்தருளி இருக்கும் எமது குலதெய்வமாக விளங்கும் சபரீச ஐயப்பன் தேவஸ்தானத்தில் ஐயப்பன் சுவாமிமார்கள் நலன் கருதி சபரீசகானம் எனும் பக்திப் பாமாலை என்னும் புத்தகம் பஜனை வரலாறு தத்துவங்கள் நிறைந்த இந்த நூல் குருசாமி அவர்களின் சொந்த முயற்சியினால் இந்த நூல் தேவஸ்தான வெளியீடாக வெளிவந்துள்ளது. எல்லா அபிமானிகளும், பக்தர்களும் இந்த நூலை திருப்பணிக்காக பணம் கொடுத்து வாங்கி ஐயப்பனின் மகிமையை எல்லோரும் அறிந்து அருளைப் பெறுவீர்கள் என நல்லாசி வழங்குகின்றேன்.

**இங்ஙனம்**
**சிவஸ்ரீ. இ. கிருஸ்ணமூர்த்திக் குருக்கள்,**
**வட்டுக்கோட்டை**
**தேவஸ்தான திருப்பணிச் சபை,**
**செயலாளர்.**

T.P : 060 22212468

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

சபரீச ஐயப்ப தேவஸ்தானம்
கோண்டாவில்.

சபரீசகானம் பக்திப் பாமாலை
நூல் வெளியீடு

"என்னன்றி கொண்டார்க்கும்
உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகர்க்கு"

யாழ்ப்பாணம் கோண்டாவில் பதியில் வீற்றிருந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கும் சபரீச ஐயப்பன் தேவஸ்தானத்திலே இவ் ஆண்டிலே சபரீசகானம் பக்திப் பாமாலை நூலை வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சியடைகிறோம். இந் நூல் வெளிவர இரவு பகல் பாராது சரீரத் தொண்டுகள், உதவிகள் புரிந்த நண்பர்கள், சுவாமிமார்கள், சிவாச்சாரியார்கள், மங்கள வாத்திய கலைஞர்கள் மற்றும் தொண்டர்கள், பக்தர்கள், குருசாமிமார்கள், இசைச் கலைஞர்கள் மற்றும் கீர்த்தனை, திருவூஞ்சல் பாடல் ஆக்கங்களைத் தந்த மகாவித்துவான் அமரர். வீரமணிஐயா அவர்கட்கும் மற்றும் ஆசிச்செய்து, வாழ்த்துச் செய்தி தந்த அடியவர்கட்கும் மற்றும் பல்வேறு வகையில் உதவி வழங்கிய உள்நாட்டு, வெளிநாட்டு அன்பர்களுக்கும் இந் நூல் வெளிவர சிரமத்துக்கு மத்தியில் குறுகிய காலத்திற்குள் மிக அழகாக அச்சிட்டுத் தந்த சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ், பலாலி வீதி, கோண்டாவில் உரிமையாளர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் எமது நாட்டில் வாழ்கின்ற அனைத்து ஜீவராசிகளுக்கும் ஐயன் அருள் கிடைக்கவேண்டும். எல்லோரும் இன்நூல் படித்துப் பயன்பெற வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்து மனம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம். இன்நூலில் சொற்பிழை, பொருட்பிழை இருப்பின் பெருமனதோடு மன்னிக்க வேண்டுகிறோம்.

**சபரீச ஐயப்ப தேவஸ்தானம்,**
**சபரிமலை யாத்திரைக்குழு**
**சாமிமார்களும், குருசாமியும்.**
**கோண்டாவில்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| 108 சரணக்கோவை | 01 – 15 |
| ஸ்ரீ சாஸ்தா அஷ்டகம் | 16 – 17 |
| ஸ்ரீ ஐயப்பன் கவசம் | 18 – 22 |
| விநாயகர் | 23 – 25 |
| ஜெயகணேச | |
| பிள்ளையார் பிள்ளையார் | |
| கன்னிமூல கணபதியை | |
| முருகன் | 26 – 28 |
| அன்பருக்கு அன்பனே | |
| வேல் முருகா | |
| வேல் வேல் வேலவனே | |
| காவடியாம் காவடி | |
| சிவன் | 29 |
| நடராஜா நர்த்தன சுந்தர | |
| ஓம் சிவாய சங்கரா | |
| நாகராஜா | 30 |
| அம்பாள் | 31 – 33 |
| ஜெயஜெய தேவி | |
| ஓசைமணிக் காளியம்மா | |
| அம்மா முத்துமாரி | |
| சுத்தசக்தி சுத்தசக்தி | |
| கிருஷ்ணர் | 34 – 37 |
| கோவிந்த கிருஷ்ணா | |
| கோவிந்தா கோவிந்தா | |
| அமர ஜீவிதம் | |
| ஆஞ்சனேயர் | 38 – 40 |
| ஆஞ்சனேயனே | |
| வெத்தலையில மாலைகட்டி | |
| வில்லெடுத்த ராமன் | |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயம் என்றும் உனக்காக
பொய் இன்றி மெய்யோடு
சாமி சாமி சாமி
அந்தமலை இந்தமலை
சாமியே சரணம் ஐயப்பா
என்ன மணக்குது எங்கே
சன்னதியில் கட்டும் கட்டி
ஸ்ரீ சபரிவாச பாஹிமாம
மணிகண்ட நாயகனே
ஐயப்பனே ஐயப்பனே
ஐயப்ப தேவா
தள்ளாடித் தள்ளாடி
பந்தளம் தந்திட்ட நேசன்
பச்சைபுள்ளை பவளபுள்ளை
கல்லும் முள்ளும்
பள்ளிக்கட்டு சபரிமலைக்கு
நல்முத்து மணியோடு
பகவான் சரணம்
சரணம் சரணம் என்று
காடு மலை கடந்து வந்தோம்
பம்பை நதிக்கரையே
ஓம் ஓம் ஐயப்பா
மாமலை வாசா மணிகண்டா
துளசி மணி மாலை கட்டி
சபரிமலை சந்தனம்
வந்தோமய்யா சபரி
சரணம் சரணம் ஐயப்பா
ஹரிஹரசுதனே ஐயப்பா
ஜீவன் என்பது உள்ளவரை
சரணம் சொல்லி
பம்பா நதிக்கரையின் சாமி
சந்தனம் என்ன சந்தனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தனத்தோம் பாடுங்க
மறக்க முடியல
சரணம் ஐயப்பா
கன்னிசாமி நீ
பூலோகம் நந்தவனம்
சரணம் சரணம் சரணம் ஐயப்பா
பள்ளிக்கூடம் சபரிமலை
காத்து ரக்ஷிக்கணும்
திம்தகத்தோம்
ஐயப்ப நாமம் சொல்லு
கருப்பன் வாரான்
பதினெட்டாம் படிப்பாடல்
ஸாஸ்தா ஆராத்தி
மங்களம்
ஆராத்தி மங்களம்
மன்னிப்பு
ஹரிவராஸனம்
வழிநடைச் சரணம்

| | |
|---|---|
| கீர்த்தனைகள் | 89 – 100 |
| திருஊஞ்சல் | 101 – 104 |
| விஷேட உற்சவங்கள் | 105 – 106 |
| ஆலயத்தில் இருக்கின்ற சன்னிதானங்கள் | 107 – 108 |
| நாதஸ்வரமும், நாட்டியமும், ஆலயமும் | 109 – 110 |
| அர்ச்சனைத்தட்டு எதற்காக? | 111 |
| விசேஷ யாக திரவியங்கள் – பலன்கள் | 112 – 116 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபரிமலை யாத்திரை விதிமுறைகள்

பக்தர்களுக்கு எல்லா நலன்களையும் அருளும் வள்ளலாக ஸ்ரீ ஐயப்ப சுவாமியின் கோயில் இந்தியாவில் கேரள மாநிலத்தில் மலைப் பகுதியில் உள்ளது. வருடந் தோறும் கார்த்திகை முதலாந்தேதி முதல் மகரஜோதி வரை ஐயப்ப பக்தர்கள் மாலை அணிந்து விரதம் அனுஷ்டிப்பார்கள். பல நாடுகளில் இருந்து ஐயனைக் காண பக்தர்கள் கூட்டமாக வருவார்கள். எங்கள் இலங்கை நாட்டில் ஐயப்ப பக்தர்கள் கொழும்பில் பல ஆலயம் அமைத்து பஜனைகள், பூசைகள் மிக சிறப்பாக நடாத்தி யாத்திரையை மேற்கொள்கிறார்கள். அது போல் யாழ்ப்பாணத்தில் பல ஆலயங்களிலும் சுவாமிகள் இல்லங்களிலும் ஐயப்ப சுவாமியை வைத்து விரதம் அனுஷ்டித்து படிப் பூசைகள், கன்னி பூசைகள், அன்னதானம் போன்ற பூசைகளையும் பஜனைகளையும் நடாத்தி பல முறைகள் யாத்திரை சென்று வந்த குருசாமிகளும் இங்கு இருக்கிறார்கள். ஒவ்வொரு வருடமும் இந்த ஐயப்பனைக் காண ஆவலுடன் அவர் பக்தர்கள் இருக்கிறார்கள். ஐயப்ப சுவாமி ஆனவர் எங்கள் குறைகளைத் தீர்த்தருள வேண்டும் என்று நாங்கள் ஒவ்வொரு காரியம் நிறைவேற வேண்டும் என்று விரதம் இருந்தால் அருள் பாலிப்பார் விரதம் இருப்பது மிக இலகுவான காரியமல்ல அதற்கு சில முறைகள் கட்டுப்பாடுகள் இருக்கின்றன. என்னவென்றால் ஐயப்ப விரதம் இருக்க விரும்புவர்கள் கார்த்திகை மாதம் முதல் நாளோ அல்லது 19ம் திகதிக்குள்ளோ ஒரு நாளில் மாலை அணிய வேண்டும். முதல் முதலாக மாலை அணியும் கன்னி சுவாமிகள் கார்த்திகை முதலாம் நாளே மாலை அணிவது சிறந்தது.

1. முதல் முதலாக மாலை அணியும் சுவாமிகளை கன்னி சுவாமி என அழைப்பர்.
2. சிறுவர் ஆண்களாக இருந்தால் மணிகண்டன் என்று அழைப்பர். அதுவே சிறு பெண்களாக இருந்தால் மஞ்சமாதா என்றும் அழைத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. நீங்கள் அணிய வேண்டிய மாலை, துளசி, மணி நூற்றெட்டு கொண்டதாக இருத்தல் வேண்டும் or உருத்திராக்கம் 54 உள்ளதாகவோ வாங்கி அதில் ஐயப்பன் திருவருட் பதக்கம் ஒன்றை வாங்கி மாலையுடன் இணைத்து அணிய வேண்டும்.
4. தங்கள் தாய் தந்தையின் நல்ஆசியுடன் ஐயப்ப பக்தி நிறைந்தவரும் ஐயனின் அவதார ஸ்தல மகிமைகளை நன்கு அறிந்து ஒழுகும் குருசாமி ஒருவரின் கையால் ஆலயத்திலோ or இல்லங்களிலோ ஐயன் முன்பாக மாலை அணிந்து கொள்ளுதல் வேண்டும்.
5. காலையும் மாலையும் குளிர்ந்த நீரில் நீராடுதல் வேண்டும். ஐயப்பனின் திருவருட் திருப்படத்தை வைத்தோ விக்கிரத்தை வைத்தோ பூசைகள், பஜனைகள் 108 சரண கோவைகள் முதலியன மிக சத்தமாக பாடுதல் அவசியம்.
6. படுக்கை தலையணையை நீக்கி தன் சால்வைத் துண்டை விரித்து துயில வேண்டும். பகலில் தூங்குவதை மிக தவிர்த்தல் வேண்டும்.
7. களவு சூதாடுதல், பொய், திரைப்படங்கள் பார்த்தல், பிறரை கேலிசெய்தல், புகை பிடித்தல், கோவப்படுதல், வெற்றிலை பாக்கு போடுதல் இவைகள் இந்த விரதத்தில் தவிர்க்கப்பட வேண்டியவை.
8. பெண்களை ஆசையுடன் பார்த்தல் , நினைத்தல் ஆகியவை தவிர்த்தல் வேண்டும்.

மாலை அணிந்து விரதம் அனுஷ்டிக்கும் ஐயப்ப பக்தர்கள் அணிய வேண்டிய ஆடை நிறம் கறுப்பு, மிகச் சிறந்தது or நீலம், பச்சை, காவி, மஞ்சள் போன்ற நிற ஆடைகளையே அணிய வேண்டும்.

மற்றவர்களிடம் பேசும் போது சாமி சரணம் என்று தொடங்கி விடை பெறும் பொழுது சாமி சரணம் எனக் கூற வேண்டும்.

மாலை அணிந்தவர்கள் தங்களது வசதிக்கு ஏற்ப வீடுகளில் பஜனை நடாத்தியும் பூசை செய்தும் ஐயப்பன்மார்களுக்கும் எழைகளுக்கும் அன்னதானம், பிரசாதம் செய்விக்கலாம். கன்னிச்சாமிகள் இவ்வாறு செய்வது மிகவும் பலன் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாலை தரிக்கும் போது ஜெபிக்க வேண்டிய மந்திரம்

ஞான முத்ராம் சாஸ்த்ர முத்ராம் குருமுத்ராம் நமாம்மிஹம்
வனமுத்ராம் சுத்தமுத்ராம் ருத்ர முத்ராம் நமாம்மிஹம்
சாந்த முத்ராம் சாஸ்த்ர முத்ராம் விரத முத்ராம் நமாம்பிஹம்
சபர்யாச்ரமஸத்யேன் முத்ராம் பாது ஸதரபிதே
குரு தக்ஷிணயா பூர்வம் தஸ்யாணுக்ரஹகாரினே
சரணாகத முத்ராக்யம் தவம் முத்ராம் தாரயாம்யஹம்
சின் முத்ராம் கேசரீ முத்ராம் பத்ர முத்ராம் நமாம்யஹம்
சபர்யாசல முத்ராயை நமஸ்துப்யம் நமோநம.

## மாலை கழற்றுவதற்கான மந்திரம்

அபூர்வ மசலா ரோஹி - திவ்யதர்சன காரண
சாஸ்த்ரு முத்ராம் யஹதேவ - தேஹிமேவிரத மோசனம்.

## கற்பூர தீபம் காட்டும் பொழுது ஜெபிக்க வேண்டிய மந்திரம்

தீப மங்கள ஜோதி நமோ நமோ
தூய சபரிகிரிஷா நமோ நமோ
பூரணை புஷ்களை நாதா நமோ நமோ
அருள் தாராய்.

## இருமுடி கட்டும் பூசை

இருமுடி கட்டுப் பூசையை குருசாமி வீட்டிலோ or கோயிலிலோ or குருநாதர் வீட்டில் நடாத்தலாம். கன்னிச்சாமி தனித்து இருமுடியைக் கட்டுதல், தானே மாலை அணிதல் தவிர்க்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினெட்டுப் படியின் தத்துவம்

புனித பதினெண்படிகட்கு பல விளக்கங்கள் தரப்படும் அவையாவன. இந்து சனாதனதர்மத்தின் பதினெட்டுத் தத்துவங்கள். பதினெண் படிகளை அடைய முன்னுள்ள 18 மலைகள் ஐயப்பசுவாமி பயன்படுத்திய 18 அஸ்திரங்கள் என்பவற்றுடன் மனித வாழ்க்கையின் 18 காரணிகளும் சொல்லப்படுகின்றன.

மனித வாழ்க்கையின் 18 காரணிகளும் மோட்ஷத்தை அடையவே உள்ளன. அவையாவன.

01. காதுகள்
02. தோல்
03. கண்கள்
04. நாக்கு
05. மூக்கு
06. கைகள்
07. கால்கள்
08. வாய்
09. விசர்ஜன இந்திரியம்
10. விசர்ஜன இந்திரியம்
11. மனம்
12. புத்தி
13. ஆகாசம்
14. வாயு
15. அக்னி
16. நீர்
17. நிலம்
18. தன்னுணர்வு

இதைத்தவிர வேறொரு விளக்கமும் தரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 1 - 5 படிகள் | : | புலனங்கங்கள் (5 இந்திரிகங்கள்) |
| 6 - 13 படிகள் | : | காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சர்யம், டம்ப, அஷ்யா ஆகிய அஷ்ட பாசங்கள் |
| 14 - 16 படிகள் | : | முக்குணங்கள் (சாத்வீகம், ராஜஸ்சிகம், தாமஸ்சிகம்) |
| 17 வது படி | : | வித்தியா (சிருஷ்டிக்கப்பட்டது) |
| 18 வது படி | : | சுவித்தியா (சிருஷ்டிக்கப்படாதது) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெய்யபிஷேகம்

பிரபஞ்சமானது ஏழு வியாக் நதிகளாகப் பார்க்கப்படுகிறது அவையாவன.

1. பூ
2. பூவ
3. சுவ
4. மகா
5. ஜன
6. தப
7. சத்யம்

என்பவை இவற்றில் முதன் மூன்றும் அக்னி, சூரியன், சோமன் என்பவற்றைக் குறிக்கிறது. சூரியனைக் குறிப்பது நெய்யாகும். நெய்யபிஷேகம் ஐயப்ப சுவாமிக்கு விசேடமானதாயுள்ளது. நெய்யபிஷேகமானது அகஒளியைக் குறிக்கின்றது.

பூமியானது ஐந்து பூதங்களால் ஆக்கப்பட்டுள்ளது. இப்பூமியில் இவ் ஐந்து பூதங்களையும் தனித்தனியாக தூய்மைப்படுத்தும் ஒரே விலங்கு பசுவாகும். அதாவது பாலிலிருந்து தயிரும், தயிரிலிருந்து மோரும், மோரிலிருந்து வெண்ணையும், வெண்ணையிலிருந்து நெய்யும் பெறப்படும். எனவே நெய்யானது ஐம்பூதங்களிலிருந்து தூய்மைப்படுத்தப்பட்டு உருவாகும் ஒரு பொருளாகிறது. எனவே இதன் மூலம் "பூத நாதா" என ஐயப்ப சுவாமி அழைக்கப்படுகிறார். ஆகையால் ஐயப்ப சுவாமிக்கு நெய்யபிஷேகம் செய்வது மிகவும் சிறப்பாகும்.

# இருமுடிக் கட்டு

சபரிமலை யாத்திரை செல்லும் யாத்திரிகர்கள் "இருமுடிக் கட்டு" என்ற பொதியை பொருளை தலையில் வைத்துக் கொண்டு செல்வார்கள். தலையானது உடலின் உயிர் தன்மையை உணர்த்தும் அங்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமுடியை ஆக்கும் துணியானது பக்தரின் கையால் மூன்று முழத்தில் அளந்து பெறப்படும். மூன்று முழமானது ஓம்காரமாகிய பிரணவ மந்திரத்திலுள்ள மாத்திரைகளைக் குறிக்கின்றது. (அகாரம், உகாரம், மகாரம்) ஓம் என்ற பிரணவ மந்திரமானது, அதர்வ வேத்திலிருந்து வந்த மாண்டுக்ய உபநிடதத்திலிருக்கிறது._

இருமுடியிலே முன் முடியில் ஐயப்ப சுவாமிகளுக்கான பூசைப் பொருட்களான அவல், நெற்பொரி, கற்பூரம், ஊதுபத்திகள், வெற்றிலை, பாக்கு, காணிக்கை, கறுப்புப்பட்டு, சிவப்புபட்டு, காசோலை, கரகமணி, கற்கண்டு, தேங்காய், முந்திரி, குறுமிளகு, மஞ்சள் பொடி, பன்னீர், வீபூதி, குங்குமம், என்ற 18 பொருட்கள் காணப்படும்.

பின் முடியில் பக்தர் தம் உணவுகளையும், பல தலங்களில் உடைப்பதற்காக தேங்காய்களையும் கொண்டிருக்கும். பின் முடி நிரப்பப்பட்ட பின் முன் முடிவுடன் சேர்த்துக் கட்டப்படும். இது ஜீவாத்மா பரமாத்மாவுடன் சேர்வதைக் குறித்து நிற்கின்றது.

சபரிமலையின் குறிக்கோளானது ஜீவனின் பாவமானது பரமாத்மாவுடன் கட்டுப்படுவதாகும். எனவே இருமுடிக் கட்டானது இந்த யாத்திரைக்கு மிக முக்கியமானதொன்றாகும். இருமுடிக்கட்டு இல்லாமல் ஒருவரும் புனிதமான பதினெண்படிகளை ஏற முடியாது. சபரிமலை யாத்திரீகர்கள் அணியும் ஆடைகள், வெண்ணிறம், செந்நிறம் மற்றும் நீலம், கருமை நிறமுடையதாக இருக்கும். இவை மனிதனின் முக்குணங்களான சத்துவம் ரஜஸ், தமஸ் என்பவற்றைக் காட்டுகிறது.

பிரபஞ்சமானது முக்குணங்களின் வடிவமாகவும் இருக்கிறது. இதனை தேங்காயானது தனது கட்டமைப்பில் காட்டுகின்றது. ஓடானது (சிரட்டை) தமஸ் குணமாகவும், வெண்ணிற உள்ளீடானது ரஜஸ் குணமாகவும், திரவமானது சாத்விக குணமாகவும் கருதப்படுகிறது.

தேங்காயின் மூன்றாவது கண்ணானது மோக்ஷத்தைக் குறிக்கின்றது. இதன் காரணமாகவே இதனூடு திரவத்தை அகற்றி நெய்யால் நிரப்பி மூடப்பட்டு அபிஷேகத்திற்கென கொண்டு செல்லப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பனின் வாகனம்

தர்மசாஸ்தா எனப்படும் ஐயப்ப சுவாமிகளின் வாகனமாக குதிரை கருதப்படுகின்றது. அனைத்து ஸ்தலங்களிலும் உள்ளதைப் போலவே சபரிமலையிலும் கொடிமரத்தில் மூலமூர்த்தியின் வாகனமாகிய குதிரை பதிக்கப்பட்டுள்ளது. இதனை பக்தர்கள் அனேகமாகக் கவனிக்கத் தவறுவார்கள்.

தனது சிற்றன்னையான "பந்தள" இராணிக்காக பாதயாத்திரை மூலம் புறப்பட்ட ஐயப்ப சுவாமி இடையில் வந்த எருமையின் முகம் படைத்த தீய சக்தியாகிய மகிஷியை அழித்த பின் புலி மேலமர்ந்து நாடு ஏகியதை பக்தர்கள் பிழையான கருத்தொன்றை அவரின் வாகனத்தைப் பற்றி எடுத்துக் கொள்ள ஏதுவாகியுள்ளது. ஆனால் உண்மையில் அவரின் வாகனம் குதிரையாகும்.

# மகரஜோதி

உத்தராயணம் எனப்படும் ஜனவரி மாதம் 14ம் திகதியில் சூரியன் வடதிசை நோக்கி பயணத்தை ஆரம்பிக்கின்றார். அப்போது மகரசம் கிரமமானது மூலையொன்றில் ஒரு புதிய நட்சத்திரத்தினை காந்த மலைக்கும் பொன்னம்பல மேட்டுக்குமிடையில் காட்டும். இது தென்படும் நேரம் பி.ப 6.40 - 6.50 க்கு இடையில் ஆகும். இதனை மகரஜோதி என அழைப்பர். இந்த மகரஜோதியினை பரப்பிரம்மம் என வழிபடும் பக்தர்கள் இதனைக் காண்பதற்காக இலட்சக்கணக்கில் வந்து நாள் கணக்கில் காத்திருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு ஆபரணம்

ஐயப்ப சுவாமிக்காக பந்தளராஜா வழங்கிய ஆபரணங்கள் மூலமூர்த்திக்கு அணிவிக்கப்படும். இந்த அணிகலங்களை திரு ஆபரணம் என்று அழைப்பர். இந்த ஆபரணம் எடுத்து வரும் வழியில் தெய்வீகத் தன்மையுடன் கிருஸ்ண கழுகுகளால் தொடரப்படுகின்றது. இது மஹாவிஷ்ணுவானவர் ஐயப்ப சுவாமிகளுடன் தனது வாகனத்தின் மூலம் தொடர்பு கொண்டுள்ளதைக் குறிக்கின்றது. அன்று பந்தளராஜாவும், பக்தராக அந்த உற்சவத்தில் கலந்து கொள்வார். இந்த உலகத்திலே அவருக்கு மாத்திரமே இருமுடி இல்லாமல் சபரிமலைமூர்த்தி ஒருவரே 18 படி ஏறக் கூடிய அனுமதி உண்டு. சாதி, மத, தர மற்றும் நாடு சம்பந்தமான வேறுபாடற்ற வழிபாட்டுக்கு ஏற்ற தெய்வமாயுள்ளார். சபரிமலையின் கொள்கைகளாவன மனிதத்தின் ஒன்று சேர்ப்பு மனிதத் தன்மையே சமயம் என்பதுமாகும்.

# கன்னி சுவாமிகள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறை

நாளுக்கு இருமுறை ஸ்நானம் செய்தல், சரண கோஷம் செய்தல், கற்பூரஆரத்தி, நாளில் இருமுறை ஸ்தலத்துக்குச் செல்லுதல், அதர்மக் காரியங்களில் பங்கெடுக்காமை, தேனீர், கோப்பி முதலான பானங்களை தவிர்த்தல், நாளுக்கு ஒரு தடவை மட்டும் வீட்டில் தயாரிக்கும் உணவை உண்ணல் அத்துடன் உடலில் உரோமத்தை வழிக்கவோ, வெட்டவோ கூடாது, மேலும் பாதணிகளையும் அணிதல் கூடாது.

மாலையணியும் தினத்தில் இருந்து கன்னி சுவாமியானவர் நீலம் or கருமை நிற உடைகளை அணிவர் அவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடைகளை அவரே கழுவிக் கொள்ள வேண்டும். இவையனைத்தும் சேர்த்து மாதவமாகின்றன. இத்தவமானது காட்டினூடாக பயணத்தினை பக்தனுக்கு இலகுவாக்கித் தருகின்றது. இதுவே பிரமச்சரியமாகும். இங்கு காடானது புலன்கட்கு பின்னேயுள்ள எண்ணத்தை குறிக்கின்றது. இதுவே மோட்சத்தை அடையும் வழி, இத் தவத்தைப் புரிபவரே புனிதமான பதினெண்படிகளை அடைய முடியும்.

சபரிமலையில் குறிக்காட்டப்படும் வேதத்தின் வெளியீடு எனப்படுவது தத்துவம் மதி என்பதாகும். அதாவது "நீயே அது" அல்லது "அதுவே நீ" (தது + துவம் + அசி) இவ்வாக்கியம் சாந்தோக்கிய உபநிஷதத்திலிருந்து பெறப்பட்டது. இவ்உபநிடதம் சாம வேதத்திலிருந்து எடுக்கப்பட்டது. இதன் உட்பொருளானது ஜீவாத்மாவானது பரமாத்மாவுடன் ஐக்கியப்படுகிறவர்க்கும் காட்டுகின்றது.

பிரபஞ்சத்தில் மிகவும் தீமையைத் தரும் கதிர்வீச்சுக்களை வீசுபவர் சனிக்கிரகமாகும். இதுவே மனிதர்களுக்கு பிரச்சினைகளைத் தருகின்றது. சனிக்கிரகத்தினால் வரும் தோஷத்தினை கன்னி சுவாமிகள் அணியும் நீலம் அல்லது கறுப்பு ஆடை நீக்குகின்றது. ஐயப்ப சுவாமிகளும் ஆஞ்சநேய சுவாமிகளுமே சனிதோஷத்தை நீக்குகின்றனர். இவர்கள் இருவரும் பிரமச்சாரிகளாகக் கருதப்படுகின்றனர்கள்.

கன்னி சுவாமிகளின் 41 நாள் விரதமானது, 10 வயதிற்கு மேற்பட்ட பெண்களாலும், 50 வயதிற்குட்பட்ட பெண்களாலும் கைக்கொள்ள முடியாது. ஏனெனில், அவர்கள் 41 நாட்கள் தொடர்ச்சியாக விரதம் அனுஷ்டிக்க முடியாது. இதுவே பெண்கள் ஐயப்ப சுவாமி தரிசனம் செய்ய முடியாததற்கான காரணம். அத்துடன் அடர்ந்த காடு, மலைகளும் துணைக் காரணங்களாகின்றன. மற்றைய ஐயப்ப சுவாமி கோவில்களில் பெண்களும் அனுமதிக்கப்படுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏன் ஒரு மண்டலம் நோன்பு அனுஷ்டிக்க வேண்டும்?

மனிதனை ஆட்டிப்படைக்கும் பஞ்சேந்திரியங்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றை தன் இஷ்டம் போல் அலையவிடாமல் கட்டுப்படுத்தவே ஒரு மண்டல நோன்பு. கடும் சுகவீனமுற்றவரக்கு வைத்தியர் தொடர்ந்து மருந்து கொடுத்து சுகப்படுத்துவார். அதுபோலவே இந்த நீண்ட விரதமும் அமைகிறது.

இந்த பஞ்சேந்திரியங்கள் நல்லவற்றையே செய்ய இறைவன் படைத்திருக்கிறான். ஆனால் அவை தன்னிஷ்டப்படி உண்ண வேண்டாத உணவுகளை உண்டு, மனம் பார்க்கத் தகாத காட்சிகளைப் பார்த்து, முகரத்தகாத மணங்களை முகர்ந்து, அளவிலா சப்தங்களைக் கிரகித்து, கடும் சொற்களைப் பேசி மனதைச் சஞ்சலப்படுத்துகிறது. அதுமட்டுமன்றி ஆணவத்தால் மற்றவர்களுக்கு தீங்கு விளைவிக்கும் சொற்களையும் பிரயோகிக்கின்றான். இவை எல்லாவற்றையும் வயப்படுத்தி இந்த நோன்பு அனுஷ்டிக்கப்படுகிறது.

ஐயனைக் காண வேண்டுமாயின் தேகபலம், பாதபலம் மட்டுமன்றி மனோபலத்தையும் பெறவேண்டும். தேகஆரோக்கியத்திற்கு பிரம்மச்சர்யம் இன்றியமையாதது. மேற்கூறியவற்றை செவ்வனே கடைப்பிடித்தால் ஐயன் பரிபூரண பலத்தையும் தந்திடுவான் என்பதில் ஐயமில்லை.

## துளசி மாலை எதற்காக அணிய வேண்டும்?

வீட்டில் துளசிச் செடியை பக்குவப்படுத்தி வளர்க்கிறோம். வசதி உள்ளவர்கள் வீட்டில் துளசி மாடத்தை அமைத்துப் பூஜிப்பார்கள். அதற்கு ஒரு தத்துவம் உண்டு.

எம்மை ஈன்றெடுத்தவள் தாய். துளசி என்பது மஹாலட்சுமியின் மறுவடிவமே. துளசித் தாய் இருக்குமிடத்து நாராயணன் முதல் சகல தேவர்களும் குடிகொண்டிருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டு துடக்குகள் விலக்கப்பட்டுள்ளது. எனவே ஐயப்பமார்கள் இத்துளசி மாலையை அணிவதே சாலச் சிறந்தது. அதுமட்டுமன்றி துளசி நீரை தினம் எம்மை அறியாமலேயே ஒரு புத்துணர்ச்சிப் பெறுவோம். அதுமட்டுமன்றி காட்டு மிருகங்களிலிருந்தும் கொடிய விஷ ஜந்துக்களிடமிருந்தும் காப்பாற்றப்படுகிறோம். என்பதையும் மறக்கலாகாது. துளசித் தாயானவள் துணையிருக்கும் போது மனக் கலக்கம் எதற்கு?

## ஏன் புலால் மச்ச, மாமிசம் உண்ணக் கூடாது?

புனிதத் தாயின் மாலை கழுத்தில் இருக்கிறது. வருடத்தில் 300 நாட்கள் நாம் விரும்பியதை செய்கிறோம். மிகுதி 65 நாட்களே! அடுத்து வரும் 300 நாட்களை எப்படி வாழப்போகிறோம் என்பதன் பரீட்சையே விரதம்.

தாவர போசனம் சாத்வீகம் உணவு, புலால் காம உணர்ச்சிகளைத் தூண்டக் கூடியது. இத்துடன் வெங்காயம், பூடு, காரம் என்பவற்றையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் இந்திரியங்களின் சேஷ்டையினால் விரத பங்கம் ஏற்பட வாய்ப்பு உண்டு. எனவே புலால் உண்பது ஐயப்ப விரதத்தில் முக்கியமாக கடைப்பிடிக்கப்படும். பிரம்மச்சர்ய விரதத்திற்கு ஊறு விளைவிக்கும். ஆதலால் புலால் உணவை தவிர்க்க வேண்டியது ஐயப்பமார்களின் கடமைகளில் ஒன்றாகும்.

## இருவேளை எதற்காக நீராட வேண்டும்?

காலையில் சூரியஉதயத்திற்கு முன்பும் மாலையில் சூரிய அஸ்தமனத்திற்கு பின்பும் நீராடுவது சாலச் சிறந்தது. உடலில் உள்ள உஷ்ணம் கட்டுப்படுத்தப்படுகிறது. தேகம் பக்குவப்படுகிறது. மார்கழி மாதத்தில் பனியும், குளிரும் காட்டில் சற்று அதிகமாகவே இருக்கும். எனவே இருவேளை நீராடி பழகிக் கொண்டால் எக்குளிரையும் எம்மால் தாங்கிக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏன் கறுப்பு ஆடை அணிய வேண்டும்?

கறுப்பு ஆடை மங்களகரமற்றது என்றும், துக்க காரியங்களுக்கும் சிலர் அணிகின்றனர் என சிலர் அவலட்சணமாக கருதுகின்றனர். ஐயப்பனுக்கு உகந்தது கறுப்பு நிறமே! கொடிய மிரகங்கள் வாழும் காட்டில் கறுப்பு உடையணிந்த ஐயப்பமார்கள் பளிச்சென்று தெரிவதில்லை. இருள் சூழ்ந்த வேளையில் நாமும் இருளாகவே இருப்போம். அடுத்ததாக கறுப்பு நிற ஆடை அணிந்தவர்கள் ஐயப்பமார்கள் என்று வீட்டுக்கு விலக்கான பெண்கள் தாமாகவே ஒதுங்கிக் கொள்வார்கள்.

## ஏன் படுக்கை தலையணையை நீக்கி சிறு துண்டை மட்டுமே தரையில் விரித்து துயில வேண்டும்?

மலைக்கு இவற்றைக் கொண்டு செல்ல முடியாது. அத்துடன் தலையணையும், படுக்கையில் சிந்தனையை திசைதிருப்பி மனக்கிலேசம் ஏற்பட்டு விரதபங்கம் ஏற்பட வாய்ப்புண்டு நம் முன்னோர்கள் படுக்கையிலா உறங்கினார்கள்?

## பாதணி ஏன் அணியக் கூடாது?

காடு மலைகளைக் கடக்கும் போது பாதணி நல்ல பலனைக் கொடுக்காது. சிலவேளைகளில் சறுக்கவும் வாய்ப்புண்டு. அதுமட்டுமன்றி ஐயப்ப பக்தர்களுக்கு ஒரே நியதி ஏழை - பணக்காரன், உயர்ந்தோர் - தாழ்ந்தோர், பெரியோர் - சிறியோர் என்பவை ஐயன் சன்னதியில் கிடையாது.

ஆம், கலியுகவரதன் அவதரித்து நமது கவலை, கஷ்டங்களை நீக்கி கருணை வடிவமாக சபரிமலையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஐயப்ப சுவாமியை தரிசிக்க கடுமையான விரதமிருந்து, இருமுடிதாங்கி காடு மலைகளையெல்லாம் கடந்து தரிசன வெற்கையை தவிர வேறு ஏதுவுமின்றி, நாவிற்கினிய சரணங்களை முழங்கி அவன் திரவடியை சரணடைவோரை தெய்வமாக்கவல்ல சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் விரத மஹத்துவம் இன்றிமையாததாகும்.

மனிதனை தெய்வமாக்கும் தெய்வம் சுவாமியே சரணம் ஐயப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் மிகு ஐயப்பன்
# நூற்றெட்டு சரணக் கோவை

ஓம் கன்னி மூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா
ஓம் காந்த மலை ஜோதியே சரணம் ஐயப்பா
ஓம் ஹரி ஹர சுதனே சரணம் ஐயப்பா
ஓம் அன்னதானப் பிரபுவே சரணம் ஐயப்பா
ஓம் ஆறுமுகன் சோதரனே சரணம் ஐயப்பா
ஓம் ஆபத்தில் காப்போனே சரணம் ஐயப்பா
ஓம் இன்தமிழ்ச் சுவையே சரணம் ஐயப்பா
ஓம் இச்சை தவிர்ப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் ஈசனின் திருமகனே சரணம் ஐயப்பா
ஓம் ஈடில்லாத் தெய்வமே சரணம் ஐயப்பா
ஓம் உண்மைப் பரம் பொருளே சரணம் ஐயப்பா
ஓம் உலகாளும் காவலனே சரணம் ஐயப்பா
ஓம் ஊமைக்கருள் புரிந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் ஊழ்வினை அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் எளியோர்க்கு அருள்பவனே சரணம் ஐயப்பா
ஓம் எங்கள் குல தெய்வமே சரணம் ஐயப்பா
ஓம் ஏழைப் பங்காளனே சரணம் ஐயப்பா
ஓம் ஏகாந்த மூர்த்தியே சரணம் ஐயப்பா
ஓம் ஐங்கரன் தம்பியே சரணம் ஐயப்பா
ஓம் ஐயமெல்லாம் தீர்ப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் ஒப்பில்லாத் திருமணியே சரணம் ஐயப்பா
ஓம் ஒளிரும் விளக்கே சரணம் ஐயப்பா
ஓம் ஓங்காரப் பரம் பொருளே சரணம் ஐயப்பா
ஓம் ஓதும் மறை பொருளே சரணம் ஐயப்பா
ஓம் ஒளடதங்கள் அருள்பவனே சரணம் ஐயப்பா
ஓம் கலியுக வரதனே சரணம் ஐயப்பா
ஓம் சபரிமலை சாஸ்தாவே சரணம் ஐயப்பா
ஓம் சிவன் மால் திருமகனே சரணம் ஐயப்பா
ஓம் சிவ வைணவ ஐக்கியமே சரணம் ஐயப்பா
ஓம் அச்சங் கோவில் அரசே சரணம் ஐயப்பா
ஓம் ஆரியங்காவு ஐயாவே சரணம் ஐயப்பா
ஓம் குளத்துப் புழைப் பாலனே சரணம் ஐயப்பா
ஓம் பொன்னம்பல வாசனே சரணம் ஐயப்பா
ஓம் வில்லாளி வீரனே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஓம் வீரமணி கண்டனே | சரணம் ஐயப்பா |
| ஓம் உத்திரத்தில் உதித்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் உத்தமனே சத்தியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் பம்பையிலே பிறந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் பந்தள மாமணியே | சரணம் ஐயப்பா |
| ஓம் சகல கலை வல்லோனே | சரணம் ஐயப்பா |
| ஓம் சாந்தம் நிறை மெய்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் குரு மகனின் குறைதீர்த்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் குரு தட்சணை அளித்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் புலிப்பாலைக் கொணர்ந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் வன்புலியின் வாகனனே | சரணம் ஐயப்பா |
| ஓம் தாயின் நோய் தீர்த்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் குருவின் குருவே | சரணம் ஐயப்பா |
| ஓம் வாபரின் தோழனே | சரணம் ஐயப்பா |
| ஓம் துளசி மணி மார்பனே | சரணம் ஐயப்பா |
| ஓம் தூயவுள்ளம் அளிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் இருமுடிப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் எருமேலி சாஸ்தாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் நித்திய பிரம்மச்சாரியே | சரணம் ஐயப்பா |
| ஓம் நீலவஸ்திர தாரியே | சரணம் ஐயப்பா |
| ஓம் பேட்டை துள்ளும் பேரருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் பெரும் ஆணவத்தை அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் சாஸ்தாவின் நந்தவனமே | சரணம் ஐயப்பா |
| ஓம் சாந்தி தரும் பேரழகே | சரணம் ஐயப்பா |
| ஓம் பேருத்தோடு தரிசனமே | சரணம் ஐயப்பா |
| ஓம் பேதமையை ஒழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் காளை கட்டி நிலையமே | சரணம் ஐயப்பா |
| ஓம் அதிர் வேட்டுப்பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் அமுதா நதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் அழுதை மலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஆனந்தமிகு பஜனைப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் கல்லிடும் குன்றே | சரணம் ஐயப்பா |
| ஓம் உடும்பாறைக் கோட்டையே | சரணம் ஐயப்பா |
| ஓம் இஞ்சிப் பாறைக் கோட்டையே | சரணம் ஐயப்பா |
| ஓம் கரியிலந் தோடே | சரணம் ஐயப்பா |
| ஓம் கரிமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் கரிமலை இறக்கமே | சரணம் ஐயப்பா |
| ஓம் பெரியானை வட்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் சிறியானை வட்டமே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் பம்பா நதி தீர்த்தமே சரணம் ஐயப்பா
ஓம் பாவமெல்லாம் அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் திருவேணி சங்கமமே சரணம் ஐயப்பா
ஓம் ஸ்ரீ இராமர் பாதமே சரணம் ஐயப்பா
ஓம் சக்தி பூஜை கொண்டவனே சரணம் ஐயப்பா
ஓம் சபரிக்கு அருள் செய்தவனே சரணம் ஐயப்பா
ஓம் தீப ஜோதித் திரு ஒளியே சரணம் ஐயப்பா
ஓம் தீராத நோய் தீர்ப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் பம்பா விளக்கே சரணம் ஐயப்பா
ஓம் பழவினைகள் ஒழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் தென்புலத்தார் வழிபாடே சரணம் ஐயப்பா
ஓம் திருபம்பையின் புண்ணியமே சரணம் ஐயப்பா
ஓம் நீலிமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் நிறைவுள்ளம் தருபவனே சரணம் ஐயப்பா
ஓம் அப்பாச்சி மேடே சரணம் ஐயப்பா
ஓம் இப்பாச்சிக் குழியே சரணம் ஐயப்பா
ஓம் சபரிபீடமே சரணம் ஐயப்பா
ஓம் சரங்குத்தியாலே சரணம் ஐயப்பா
ஓம் உரல் குழி தீர்த்தமே சரணம் ஐயப்பா
ஓம் கருப்பண்ண சாமியே சரணம் ஐயப்பா
ஓம் கடுத்த சாமியே சரணம் ஐயப்பா
ஓம் பதினெட்டாம் படியே சரணம் ஐயப்பா
ஓம் பகவானின் சந்நிதியே சரணம் ஐயப்பா
ஓம் பரவசப் பேருணர்வே சரணம் ஐயப்பா
ஓம் பசுவின் நெய் அபிஷேகமே சரணம் ஐயப்பா
ஓம் கற்பூரப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் நாகராசப் பிரபுவே சரணம் ஐயப்பா
ஓம் மாளிகைப் புறத்தம்மனே சரணம் ஐயப்பா
ஓம் மஞ்சமாதா திருவருளே சரணம் ஐயப்பா
ஓம் அக்கினிக் குண்டமே சரணம் ஐயப்பா
ஓம் அலங்காரப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் பஸ்மக் குளமே சரணம் ஐயப்பா
ஓம் சற்குரு நாதனே சரணம் ஐயப்பா
ஓம் மகர ஜோதியே சரணம் ஐயப்பா
ஓம் மங்கள மூர்த்தியே சரணம் ஐயப்பா

ஓம் பூதநாதாய வித்மஹே
பவநந்தனாய தீமஹி
தந்நோ சாஸ்தா பிரசோதயாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சாஸ்தா அஷ்டகம்

மூஷிக வாகன மோதக ஹஸ்த
சாமரகர்ண விளம்பித ஸீத்ர
வாமனரூப மஹேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே
ஓம் கன்னி மூல கணபதி
பகவானே சரணம் ஐயப்பா.

லோக வீரம் மஹா பூஜ்யம்
ஸர்வ ரஷாகரம் விபும்
பார்வதீ ஹ்ரதயானந்தம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா.

விப்ர பூஜ்யம் விஸ்வ வந்த்யம்
விஷ்ணு சம்போ ப்ரியம் ஸீதம்
ஷிப்ர ப்ரசா "த நிரதம்"
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா.

மத்த மாதங்க கமனம்
காருண்யாம்ருத பூரிதம்
ஸர்வ விக்ன ஹரம்தேவம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸ்மத் குலேச்வரம் தேவம்
அஸ்மத் சத்ரு விநாசனம்
அஸ்மத் இஷ்ட ப்ரதா தாரம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா.

பாண்யேச வம்ச திலகம்
கேரளே கேளி விக்ரஹம்
ஆர்த்த த்ராண பரம்தேவம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா.

பஞ்சரத்னாத்யம் ஏதத்யோ
நித்ய சுத்தப்படேன் நரஹோ!
தஸ்யப் பிரசன்னோ பகவான்
சாஸ்தா வசதிமானசே!!
சுவாமியே சரணம் ஐயப்பா.

ஸ்ரீ பூத நாத சதானந்த
ஸர்வ பூத தயாபரா
ரட்சரட்ச மஹோ பாகு
சாஸ்த்ரே துப்யம் நமோ நமஹ!
சுவாமியே சரணம் ஐயப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஐயப்பன் கவசம்

## காப்பு

அரிஹர புத்ரனை ஆனந்த ரூபனை
இரு மூர்த்தி மைந்தனை அறுமுகன் தம்பியை
சபரிகிரீசனை சாந்த சொரூபனை
தினம் தினம் போற்றி பணிந்திடுவோமே
ஐயப்ப தேவன் கவசமிதனை
அனுதினம் சொல்ல அல்லல்கள் ஒழியும்
தினம் தினம் துதிக்கத் தீரும் வினையெல்லாம்
நாடிய பொருளும் நலமும் வருமே.

## நூல்

மண்ணுல கெல்லாம் காத்தருள் செய்ய
மணிகண்ட தேவா வருக வருக
மாயோன் மைந்தா வருக வருக
ஐங்கரன் சோதரா ஐயப்பா வருக. 1

புலிவாகனனே வருக வருக
புவியெல்லாம் காத்திட வருக வருக
பூரணை நாதனே வருக வருக
புண்ணிய மூர்த்தியே வருக வருக. 2

பூத நாயகா வருக வருக
புஷ்களைபதியே வருக வருக
பொன்னம்பலத்துறை ஈசா வருக
அடியாரைக் காக்க அன்புடன் வருக. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக வருக வாசவன் மைந்தா
வருக வருக வீரமணிகண்டா
வஞ்சனை நீக்கிட வருக வருக
வல்வினை போக்கிட வருக வருக. 4

—

ஐயம் தவிர்த்திட ஐயப்பா வருக
அச்சம் அகற்றிட அன்பனே வருக
இரு வினை களைந்தே எனையாட்கொள்ள
இரு மூர்த்தி மைந்த வருக வருக. 5

பதினென்படியை மனதில் நினைக்க
பண்ணிய பாவம் பொடிப் பொடியாகும்
ஐயப்பா சரணம் என்றே கூறிட
ஐம்பூதங்களும் அடி பணிந்திடுமே. 6

சபரிகிரீசனை நினைத்தே நீறிட
துன்பங்கள் எல்லாம் தூள் தூளாகும்
சரணம் சரணம் என்றே சொல்லிட
சித்திகள் யாவும் வந்தடைந்திடுமே. 7

பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பகைவர் களெல்லாம் பணிந்தே வணங்குவர்
ஐயப்பன் பாதம் அனுதினம் 'நினைக்க
அவனியிலுள்ளோர் அடிபணிந்தேத்துவர். 8

சரணம் சரணம் ஐயப்பா சரணம்
சரணம் சரணம் சபரிகிரீசா
சரணம் சரணம் சத்குருநாதா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம். 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேண்டுதல்

சிவனார் மகன் என் சிரசினைக் காக்க
நெடுமால் மைந்தன் நெற்றியைக் காக்க
கஜமுகன் தம்பி என் கண்ணினைக் காக்க
நாரணன் பாலன் நாசியைக் காக்க. 10

இரு மூர்த்தி மைந்தனன் என் இரு செவிகாக்க
வாபரின் தோழன் வாயினைக் காக்க
பம்பையின் பாலன் பற்களைக் காக்க
நான் முகன் பூஜ்யன் நாவினைக் காக்க. 11

கலியுக வரதன் என் கழுத்தினைக் காக்க
குமரன் தம்பி என் குரல் வளை காக்க
புஷ்களை நாதன் புஜங்களைக் காக்க
முக்கண்ணன் பாலன் முழங்கையைக் காக்க. 12

வீரமணி கண்டன் விரல்களைக் காக்க
கயிலை மைந்தன் கைகளைக் காக்க
மணிகண்ட தேவன் மார்பினைக் காக்க
வன்புலி வாகனன் வயிற்றினைக் காக்க. 13

முழு முதற் கடவுள் என்முதுகினைக் காக்க
இரு முடிப்பிரியன் என் இடுப்பினைக் காக்க
பிரம்பாயுதன் என் பிட்டங்கள் காக்க
தர்ம ஸாஸ்தா துடைதனைக் காக்க. 14

முருகன் சோதரன் முழங்கால் காக்க
கற்பூர ஜோதி என்கணைக்கால் காக்க
பந்தள பாலன் பாதத்தினைக் காக்க
விஜய குமாரன் விரல்களைக் காக்க. 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னதானப் பிரபு அங்கமெல்லாம் காக்க
ஆரியங்கா ஜோதி அன்புடன் காக்க
காட்டாள ரூபி காலையில் காக்க
நவக்ரஹநாதன் நடுப்பகல் காக்க. 16

மாலின் மகனார் மாலையில் காக்க
அரிஹர சுதனார் அந்தியில் காக்க
இன்பமய ஜோதி இரவினில் காக்க
எருமேலி சாஸ்தா என்றுமே காக்க. 17

அரியின் மகனார் அனுதினம் காக்க
நடராஜன் பாலன் நாள் தோறும் காக்க
வாசவன் செல்வன் வலப்புறம் காக்க
இருமுடி ஈசன் இடப்புறம் காக்க. 18

காக்க காக்க கருணையால் காக்க
பார்க்க பார்க்க என் பாவம் பொடிபட
இம்மையும் மறுமையும் இல்லாதொழிந்திட
ஈசன் மகன் எனை என்றுமே காக்க. 19

கொடிய விஷங்களும் கொள்ளை நோய்களும்
குருதியைக் குடிக்கும் துஷ்டப் பேய்களும்
காந்த மலைதனை கருத்தில் கொண்டிட
கலங்கி மறைந்திட கருணை புரிவாய். 20

பில்லி சூனியம் பலவித வஞ்சனை
பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பஞ்சாய் பறக்க வரமெனக் கருள்வாய்
பயங்களைப் போக்கி அபயம் அளிப்பாய். 21

வாதம் பித்தம் சிலேட்சுமத்துடனே
வாந்தியும் பேதியும் வலிப்பும் சுளுக்கும்
எவ்வித நோயும் எனையணுகாமல்
என்றுமே காப்பாய் எருமேலி தேவா. 22




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியும் செல்வமும் கள்ளமில்லா மனமும்
நல்லோர் உறவும் நாளும் அருள்வாய்
நல்ல மனதுடன் உனை நான் துதிக்க
நித்யமும் அருள்வாய் சபரிகிரீசா. 23

காமம் குரோதம் லோபம் மோஹம்
மதமாச் சர்யமெனும் ஐம்பெரும் பேய்களும்
என்றுமே என்னை அணுகி விடாமல்
ஐயப்ப தேவா வரமெனக் கருள்வாய். 24

சூது, பொறாமை, பொய், கோபமில்லாமல்
சோரம் லோபம் துன்மார்க்கம் கல்லாமல்
வேத நெறிதனை விலகி நில்லாமல்
வீரமணி கண்டா வரமெனக் கருள்வாய். 25

மூப்பும் பிணியும் வறுமையும் பசியும்
வந்தெனை வாட்டி வதை செய்யாமல்
உள்ளன் புடனே உன் திருநாமம்
அனுதினம் சொல்ல அருள் தருவாயே. 26

## நமஸ்காரம்

அரிஹர புத்ரா அன்பா நமோ நமோ
சபரிகிரீசா சாஸ்தா நமோ நமோ
பதினென் படிவாழ் பரமா நமோ நமோ
ஐங்கரன் சோதரா ஐயப்பா நமோ நமோ. 27

பொன்னம் பலத்துறை புண்யா நமோ நமோ
புலிப்பால் ஈந்த புண்யா நமோ நமோ
சுரிகா யுதமுடைய சுந்தர நமோ நமோ
மகிஷி மர்தனா மணிகண்டா நமோ நமோ. 28

சரணம் சரணம் சபரிகிரீசா
சரணம் சரணம் சத்ய ஸ்வரூபா
சரணம் சரணம் சர்வ தயாளா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம். 29

- சுபம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர்



ஸ்ரீ கணேசாய நம
சுவாமியே சரணம் ஐயப்பா

கணேச சரணம் சரணம் கணேச
கணேச சரணம் சரணம் கணேச
கணேச சரணம் சரணம் கணேச
கணேச சரணம் சரணம் கணேச.

மூக்ஷிக வாகன சரணம் கணேச
மோதகஹஸ்தா சரணம் கணேச
வாமன ரூபா சரணம் கணேச
மஹேஸ்வர புத்ரா சரணம் கணேச.

சங்கர சுதனே சரணம் கணேச
சக்தியின் மைந்தா சரணம் கணேச
சாமரகர்ணா சரணம் கணேச
விளம்பித சூத்ரா சரணம் கணேச.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெய கணேச

ஜெய கணேச ஜெய கணேச ஜெய கணேச பாஹிமாம்
ஸ்ரீ கணேச ஸ்ரீ கணேச ஸ்ரீ கணேச ரக்ஷமாம்
சரவணபவ சரவணபவ சரவணபவ பாஹிமாம்
சுப்ரமண்ய சுப்ரமண்ய சுப்ரமண்ய ரஷமாம்
வேல் முருகா வேல் முருகா வேல்முருகா பாஹிமாம்
வேலாயுதா வோயுதா வேலாயுதா ரக்ஷமாம்
கலாவல்லி கலாவல்லி கலாவல்லி பாஹிமாம்
கலைவாணி கலைவாணி கலைவாணி ரக்ஷமாம்
ஜெய சரஸ்வதி ஜெயசரஸ்வதி ஜெயசரஸ்வதி பாஹிமாம்
ஸ்ரீ சரஸ்வதி ஸ்ரீ சரஸ்வதி ஸ்ரீ சரஸ்வதி ரக்ஷமாம்
மஹாலக்ஷ்மி மஹாலக்ஷ்மி மஹாலக்ஷ்மி பாஹிமாம்
ஸ்ரீ லக்ஷ்மி மஹா லக்ஷ்மி ஸ்ரீ லக்ஷ்மி ரக்ஷமாம்
ஓம் சிவாய ஓம் சிவாய ஓம் சிவாய பாஹிமாம்
ஸ்ரீ சிவாய ஸ்ரீ சிவாய ஸ்ரீ சிவாய ரக்ஷமாம்
ஜெயராம ஜெயராம ஜெயராம பாஹிமாம்
ஸ்ரீராம ஸ்ரீராம ஸ்ரீராம ரக்ஷமாம்
ஆஞ்சனேய ஆஞ்சனேய ஆஞ்சனேய பாஹிமாம்
அனுமந்த அனுமந்த அனுமந்த ரக்ஷமாம்
சம்புகுமார சம்புகுமார சம்புகுமார பாஹிமாம்
சபரிகிரீஸ சபரிகிரீஸ சபரிகிரீஸ ரக்ஷமாம்.

# பிள்ளையார் பிள்ளையார்

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
ஆற்றங்கரை ஓரத்திலே அரசமரத்து நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார்.
(பிள்ளையார்)
ஆறுமுக வேலவனின் அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையும் தீர்த்து வைக்கும் பிள்ளையார்
(பிள்ளையார்)
மஞ்சளிலே செய்திடினும் மண்ணினாலே செய்திடினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்
(பிள்ளையார்)
அவல் பொரி கடலையும் அரிசி கொழுக்கட்டையும்
கவலையின்றி தின்னுவார் கண்ணை மூடித் தூங்குவார்
(பிள்ளையார்)
கலியுகத்தின் விந்தைகளை காணவே அனுதினம்
எலியின் மீது ஏறியே இஷ்டம் போல சுற்றுவார்
(பிள்ளையார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னி மூல கணபதியை வேண்டிக்கிட்டு

கன்னிமூல கணபதியை வேண்டிக்கிட்டு - நாங்கள்
கார்த்திகை மொததேதி மாலை இட்டோம் - நாங்க
அய்யப்பா அய்யப்பா என்றே சொல்லி - நாங்க
ஆறு வாரம் தானே நோம்பிருந்தோம் - நாங்க. (கன்னி)

எங்க குருசாமி துணை கொண்டு அவர்பாதம் நம்பிக்கிட்டு
இருமுடியை சொமந்துக்கிட்டு வந்தோமய்யா
ஆறுபடை வீடு சென்று கந்தனையே வேண்டிக்கிட்டு
யாத்திரையாய் நடந்து வந்தோமய்யா. (கன்னி)

குருவாயூர் கோயில் முதல் கன்னியாகுமாரிவரை
தரிசனமே செய்துவிட்டு வந்தோமய்யா
எருமேலி பேட்டைத் துள்ளி வாவரையே வேண்டிக்கிட்டு
பேரூர் தோட்டில் பொரி போட்டு வந்தோமய்யா. (கன்னி)

காளைகட்டி அஞ்சல் வந்து அழுதமலை ஏறிகிட்டு
கரி மலையின் உச்சியிலே வந்தோமய்யா
பம்பையிலே குளச்சிப்புட்டு பாவங்களைத் தொலச்சுப்புட்டு
நீலிமலை ஏறிகிட்டு வந்தோமய்யா. (கன்னி)

பதினெட்டாம் படிதாண்டி பகவானே உனை வேண்டி
கற்பூர ஜோதிதனைக் கண்டோமய்யா
மகர ஜோதியைக் கண்டு மனமாரச் சரணம்போட்டு
மணிகண்டா உன் மகிமை அறிந்தோமய்யா. (கன்னி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன்



## அன்பருக்கு அன்பனே

அன்பருக்கு அன்பனே நீ வாவா முருகா
ஆறுபடை வீடுடையாய் வாவா முருகா
இன்பமய ஜோதியே நீ வாவா முருகா
ஈசனுமை பாலகனே வாவா முருகா
உலகநாதன் மருமகனே நீ வாவா முருகா
ஊமைக்கருள் புரிந்தவனே நீ வாவா முருகா
எட்டிக்குடி வேலவனே வாவா முருகா
ஏறுமயில் ஏறியே நீ வாவா முருகா
ஒய்யாரி வள்ளிலோலா வாவா முருகா
ஓங்காரதத்துவமே வாவா முருகா
ஔவைக் குபதேசித்தவா வாவா முருகா
அகில லோக நாயகனே வாவா முருகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேல் முருகா

வேல்முருகா மால்மருகா வாவா ஷண்முகா
கால்பிடித்தேன் காத்தருள வாவா ஷண்முகா

நால்வேதப் பொருளான நாதா ஷண்முகா
நல்லதெல்லாம் உன்பால் கொண்டாய் நாதா ஷண்முகா
செல்லமாக சிவை அணைக்கும் சேயே ஷண்முகா
செங்கதிர்வேல் தாங்கிய என் தேவா ஷண்முகா

ஆறுபடை வீடுடைய ஆண்டவா ஷண்முகா
ஆனந்தமே அற்புதமே ஆண்டவா ஷண்முகா
தேறுதலை தருபவனே தேவா ஷண்முகா
சிங்கார ஓங்கார சீலனே ஷண்முகா

நாறு மாலை யணிமார்பா நாயகா ஷண்முகா
நாதவிந்து கலாதீத நாயகா ஷண்முகா
ஏறுமயில் வாஹனனே ஏந்தலே ஷண்முகா
நீறணிந்தார் வினைபோக்கும் நீதமே ஷண்முகா

பாடும்பணி தந்திடுவாய் பண்டிதா ஷண்முகா
பக்தருடன் கூட்டிடுவான் முக்தனே ஷண்முகா
ஆடும் சேவற் கொடியழகா ஆண்டவா ஷண்முகா
அடியார் உள்ளக் குஹையமர்ந்த ஆனந்தா ஷண்முகா

வீடும் நாடும் நின் திருத்தாள் வேண்டினேன் ஷண்முகா
வீரன் சூரன் உடல் கிழித்த வேலனே ஷண்முகா
ஓடும் மனம் உன்னை நாட ஆடிவா ஷண்முகா
ஒருவனே என் வினையழித்த உத்தமா ஷண்முகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேல் வேல் வேலவனே வேலாயுதா

வேல் வேல் வேலவனே வேலாயுதா - எங்கள்
வினைகள் எல்லாம் தீர்த்திடுவாய் வேலாயுதா (வேல் வேல்)
கந்தா கடம்பா வேலாயுதா - எங்கள்
கதிர்காம வேலவனே வேலாயுதா (வேல் வேல்)
திருச்செந்தூர் வேலவனே வேலாயுதா - எங்கள்
திருப்பரங்கீத்தீரனே வேலாயுதா - (வேல் வேல்)
சோலமலை கிழவனே வேலாயுதா - எங்கள்
சொகுசுகார குமரனே வேலாயுதா - (வேல் வேல்)
பழநிமலை முருகனே வேலாயுதா - எங்கள்
பலவினையை நீக்கிடுவாய் வேலாயுதா - (வேல் வேல்)
சுவாமிமலை நாதனே வேலாயுதா - எங்கள்
சுப்பிரமண்ய சுவாமியே வேலாயுதா (வேல் வேல்)
திருத்தணிகை முருகனே வேலாயுதா - எங்கள்
திருமுருக வேலவனே வேலாயுதா (வேல் வேல்)

# காவடியாம் காவடி

காவடியாம் காவடி கந்த வேலன் காவடி//
காவடியாம் காவடி காண வேண்டும் கண் கோடி //
வேல்முருகன் நானத்திலே வித விதமாய் காவடி //
வெற்றி வேலன் காவடி வீரவேலன் காவடி //
சிங்கார வேலனுக்கு சின்ன சின்ன காவடி //
சுவாமிமலை நாதனுக்கு சந்தனத்தில் காவடி //
பழனிமலை பாலனுக்கு பால் குடத்தால் காவடி //
தென் பழநி வேலனுக்கு தேன் குடத்தால் காவடி //
ஆறுமுக வேலனுக்கு அழகு மயில் காவடி //
வண்ண வண்ண காவடி கந்த வேலன் காவடி //
(காவடியாம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவன்



## நடராஜா நரத்தன சுந்தர

நடராஜா நடராஜா நர்த்தன சுந்தர நடராஜா

சிவராஜா சிவராஜா சிவகாமிப்ரிய சிவராஜா

பரமேசா பரமேசா பார்வதி நாயக பரமேசா

கங்கேச கங்கேச கிரிஜா ரமண கங்கேசா

## ஓம் சிவாய சங்கரா

ஓம் சிவாய ஓம் சிவாய சங்கரா

சசிதரரே சுந்தரரே ஓம் சிவாய சங்கரா

ஆடும் பாம்பை அணிந்தவரே ஓம் சிவாய சங்கரா

கங்கையை முடிமீது அணிந்தவனே ஓம் சிவாய சங்கரா

ஓம் சிவாய ஓம் சிவாய சங்காரா

சசிதரரே சுந்தரரே ஓம் சிவாய சங்கரரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகராஜா



## ஆடுராஜா எங்கள் நாகராஜா

ஆடுராஜா பிரபு நாகராஜா - எங்கள்
ஐயப்பன் பேரை சொல்லி ஆடுராஜா
பாடுராஜா பிரபு நாகராஜா - எங்கள்
ஐயப்பன் பேரை சொல்லி பாடுராஜா

குழு : (ஆடுராஜா)

சரண கோஷம் போட்டு வரும் பக்தர் பாரு
சன்னிதியை நாடிவரும் கூட்டத்த பாரு
ஐயப்பன் பாடும் கன்னி சாமியப் பாரு
காட்டில் கருணையுடன் வழி நமக்கு கொடுத்திடு பாரு

- தர்மத்தை காப்பாற்று அது உன்னை காப்பாற்றும்.
- ஒப்புயர்வற்ற உண்மைப் பொருள் கடவுள் ஒன்றுதான்.
- சுழலும் சக்கரம் போன்றிராதே.
  சக்கரத்தின் அச்சாணி போன்று அசையாதிரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்கா தேவி

ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி
துர்க்கா தேவி சரணம்

துர்க்கை அம்மனைத் துதித்தால் - என்றும்
துன்பம் பறந்தோடும்
தர்மம் காக்கும் தாயும்அவளை
தரிசனம் கண்டால் போதும்
கர்ம வினைகளும் ஓடும்
சர்வ மங்களம் கூடும்

பொற்கரங்கள் பதினெட்டும் - நம்மைச்
சுற்றி வரும் பகை விரட்டும்
நெற்றியிலே குங்குமப் பொட்டும்
வெற்றிப் பாதையைக் காட்டும்
ஆயிரம் கண்கள் உடையவளே
ஆதி சக்தி அவள் பெரியவளே
அயிரம் நாமங்கள் கொண்டவளே
தாய் போல் நம்மைக் காப்பவளே

சங்கு சக்கரம் வில்லும் அம்பும்
அங்குசம் வாளும் வேலும் சூலமும்
தங்கக் கைகளில் தாங்கி நிற்பாள்
சிங்கத்தின் மேலவள் வீற்றிருப்பாள்
திங்களை முடிமேல் சூடி நின்றாள்
மங்கள வாழ்வும் தந்திடுவாள்
மங்கையற் கரசியும் அவளே
அங்கயற் கண்ணியும் அவளே
கனக துர்க்கா தேவி சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காளியம்மா



ஓசை மணி காளியம்மா ஓடிவாம்மா
ஓடி வந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
சலங்கை ஒலி சலசலக்க ஓடிவாம்மா
ஓடி வந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
பட்டாடை பளபளக்க ஓடிவாம்மா
ஓடி வந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
மஞ்சள் முகம் மினுமினுக்க ஓடிவாம்மா
ஓடி வந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
தங்க முகம் தளதளக்க ஓடிவாம்மா
ஓடி வந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
செங்கை நீரும் கிலுகிலுக்க ஓடிவாம்மா
ஓடி வந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
மகிழ்ச்சியுடன் சிலுசிலுக்க ஓடிவாமம்மா
ஓடி வந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
வேதங்கள் முழங்கிடவே ஓடிவாம்மா
வேதனைகள் தீர்த்திடவே ஆடிவாம்மா
செம்பவளப் பேரழகி ஓடிவாம்மா
செல்வ மழை பொழிந்திடவே ஆடிவாம்மா
அருளமுது பருகுவதற்கு ஓடிவாம்மா
ஆசிகளைத் தந்திடவே ஆடிவாம்மா
அருளமுது பருகுவதற்கு ஓடிவாம்மா
ஆசிகளைத் தந்திடவே ஆடிவாம்மா
ஓசை மணிக் காளியம்மா ஓடிவாம்மா
ஓடி வந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா முத்துமாரி

அம்மா முத்துமாரி எங்கள் அழகு முத்துமாரி
ஆனந்தமாய் வீற்றிருப்பாள் அன்னை முத்துமாரி
(அம்மா)

எங்கும் நிறைந்திருப்பாள் எங்கள் முத்துமாரி
இதயச் சுமையை குறைத்திடுவாள் எங்கள் முத்துமாரி
(அம்மா)

மஞ்சள் முகத்தழகி எங்கள் முத்துமாரி
மங்காத தீபமவள் எங்கள் முத்துமாரி
(அம்மா)

வேப்பிலைக் காரியவள் எங்கள் முத்துமாரி
வேடிக்கை காட்டிடுவாள் எங்கள் முத்துமாரி
(அம்மா)

உலகனைத்தும் காப்பவளே எங்கள் முத்துமாரி
உன்பாதம் சரணடைந்தோம் எங்கள் முத்துமாரி
(அம்மா)

# சுத்தசக்தி சுத்த சக்தி

சுத்தசக்தி சுத்தசக்தி சுத்த சக்தி ஓம்சிவம்
சுத்தசக்தி சுத்த சக்தி சுத்த சக்தி ஓம்சிவம்
சத்தியஞானதர்மசக்தி சாந்தசக்தி ஓம்சிவம்
சச்சிதானந் தாத்மசக்தி சர்வசக்தி ஓம்சிவம் (சுத்த)
வேதசாஸ்த்ர சகலகலா வித்யாசக்தி ஓம்சிவம்
வீரதீர தைர்யசக்தி விஜயசக்தி ஓம்சிவம் (சுத்த)
நாதகீத கானகலா நடனசக்தி ஓம்சிவம்
மஹாமந்ர யந்த்ரதந்ர வச்யசக்தி ஓம்சிவம் (சுத்த)
யோக போக த்யாகசக்தி லோகசக்தி ஓம்சிவம்
தாகமோஹ சோகரஹித தபோசக்தி ஓம்சிவம் (சுத்த)
துஷ்டசத்துரு நாசசக்தி துர்க்காசக்தி ஓம்சிவம்
அஷ்டலஷ்மி ஞானவாணி அமரசக்தி ஓம்சிவம் (சுத்த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருஷ்ணன் பாடல்



கோவிந்த கிருஷ்ண ஜெய்
கோபால கிருஷ்ண ஜெய்
கோபால பால பால ராதா
கிருஷ்ண ஜெய்

கிருஷ்ண ஜெய் கிருஷ்ண ஜெய்
கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஜெய்
கிருஷ்ண ஜெய் ராதா கிருஷ்ண ஜெய்
ராமா கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஜெய்

கோபிக மாலா ஹாரி பியாரி
மாயி மீரா மன விஹாரி
மதன மோகன முரளி தாரி
கிருஷ்ண ஜெய்

ஹே கிரிதர கோபாலா ஹேகிரிதர கோபாலா
ஹே கிரிதர கோபாலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதவ முரஹர மதுர மனோகர கிரிதர
நந்த குமார சுந்தரகாரா
பிருந்தாவன சஞ்சாரா முரளீ லோலா
முனிஜன பாலா கிரிதர கோபாலா

கோபரி பாலா கோபி லோலா
ராதா ஹ்ருதய விஹாரா
பக்தோத்தாரா பல கோபாலா

கௌஸ்துப ஹாரா மௌக்திகா தாரா
வேணு கான லோலா
நல்னி பாலா நவநீத சோரா

கோவிந்த கிருஷ்ண விட்டலே - வேணு
கோபால கிருஷ்ண விட்டலே - ஸ்ரீ
ரங்க ரங்க விட்டலே - ஸ்ரீ
பாண்டு ரங்க விட்டலே

மதுர மதுர முரளி சுனஸ்யாமா
மதுராதி பதே ராதே ஸ்யாமா
சூரதாச பிரபு ஹேகிரதாரி
மீராகே பிரபு ஹ்ருதய விஹாரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவிந்தா

கோவிந்தா கோவிந்தா கோகுல ரமணா கோவிந்தா
ஜெய்ஹிந்தா ஜெய்ஹிந்தா ஜெய் ஜெய்ராம ஜெய்ஹிந்தா

குழலிசையாலே கோவிந்தா மாடுகள் தன்னை கோவிந்தா
மேய்த்தவன் நீயே கோவிந்தா மாதவ ராஜா கோவிந்தா

வெண்ணெய் திருடிய கோவிந்தா மண்ணை உண்ட கோவிந்தா
கோபியருடனே கோவிந்தா கொஞ்சிடும் ரமணா கோவிந்தா

நச்சுப் பாம்பில் கோவிந்தா நடனம் புரியும் கோவிந்தா
நல்லவர் யார்க்கும் கோவிந்தா நலமே அருள்வாய் கோவிந்தா

பாண்டவர் துயரம் கோவிந்தா தீர்த்தவன் நீயே கோவிந்தா
திரௌபதை மானம் கோவிந்தா காத்தவன் நீயே கோவிந்தா

பாரதப் போரில் கோவிந்தா தர்மத்தை வளர்த்தாய் கோவிந்தா
சீதை கொடுத்த கோவிந்தா சிந்தை நிறைந்த கோவிந்தா

ராதா கிருஷ்ணா கோவிந்தா ரகுபதி ராகவ கோவிந்தா
மாயக் கண்ணா கோவிந்தா மலரடி தொழுதோம் கோவிந்தா

பாமா ருக்மணி கோவிந்தா பரந்தாமனே கோவிந்தா
சங்கு சக்கரம் கோவிந்தா சங்கடம் தீர்க்கும் கோவிந்தா.

தேவகி மைந்தா கோவிந்தா திருவடி சரணம் கோவிந்தா
மீரா பாடிடும் கோவிந்தா கிருஷ்ணா முகுந்தா கோவிந்தா

நீலநிறமே கோவிந்தா நின் திருமேனி கோவிந்தா
நாராயணனே கோவிந்தா பாராயணமே கோவிந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருஷ்ண மந்திரம்

ஓம்..... ஓம்..... ஓம்..... ஓம்.....
அமர ஜீவிதம் ஸ்வாமி அமுதவாசகம்
பதித பாவனம் ஸ்வாமி பக்த சாதகம் ஓம்
முரளி மோஹனம் ஸ்வாமி அசுர மர்த்தனம்
கீத போதகம் ஸ்வாமி ஸ்ரீ கிருஷ்ண மந்திரம் ஓம்......
நளின தைவதம் ஸ்வாமி மதனரூபகம்

நாக நர்த்தனம் ஸ்வாமி மானவஸ்தகம்
பஞ்ச சேவகம் ஸ்வாமி பாண்ட்டிய சாயகம்
கீத போதகம் ஸ்வாமி ஸ்ரீ கிருஷ்ண மந்திரம் ஓம்......
சந்திய பங்கஜம் ஸ்வாமி அந்திய புஷ்பகம்
சர்வ ரக்ஷகம் ஸ்வாமி தர்மதத்துவம்
நாக பந்த ணம் ஸ்வாமி நாகல்லகம்
கீத போதகம் ஸ்வாமி ஸ்ரீ கிருஷ்ண மந்திரம்
ஓம்....... ஓம்........ ஓம்........ ஓம்.......






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஞ்சநேயர்



## ஆஞ்சநேய எங்கள்

ஆஞ்சநேயனே எங்கள் ஆஞ்சனேயனே
மருதனார்மடம் வந்தமர்ந்த ஆஞ்சநேயனே
வாயு தேவனே எங்கள் வாயு தேவனே
மக்கள் குறை தீர்த்தருளும்வாயு தேவனே
(ஆஞ்சநேயனே)

வெற்றிலையில் மாலை கட்டி போடட்டுமா - நல்ல
வெண்ணையுடன் சந்தனமும் பூசட்டுமா
மெட்டெடுத்து பாட்டு ஒன்று பாடட்டுமா - வண்ணம்
பொட்டு ஒன்று வாலத் தொட்டு சூடட்டுமா
(ஆஞ்சநேயனே)

பச்சை நிறப் பட்டுடுத்தும் தோட்டம் - இங்கு
பொன் விளைய மேகம் தரும் பூமழை தான்
விண்ணளந்து நிற்கும் எங்கள் மாமலை தான் - இன்று
பார்த்ததையா உன்னழகு கோயிலைத்தான்
(ஆஞ்சநேயனே)

மருதனார்மடம் கண்டதுந்தான் கோயிலய்யா - இனி
எட்டுத்திக்கும் உந்தன் அருள் காவல் ஐய்யா
சின்னமணி ஓசையுடன் வாருமய்யா - எங்கள்
சிந்தை எல்லாம் வாழ்பவனே ஆஞ்சநேயனே
(ஆஞ்சநேயனே)

சிவனொளிபாதமலை ஒளியினிலே - நல்ல
அழகிய சுவாமிமலை அருகினிலே
நீயும் வந்து கோயில் கொண்டு காட்சி தந்தாய் - எங்கள்
நெஞ்சமெங்கும் வீற்றிருந்து ஆட்சி செய்தாய்
(ஆஞ்சநேயனே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெத்தலயில மாலை

வெத்தலையில் மாலகட்டுங்களே - ஓங்க
வேதனைய சொல்லி சொல்லி மாலகட்டுங்களே
தொளசி இல கொழுந்தெடுத்து கோர்த்து கட்டுங் களே - ராம
தோத்திரத்த சொல்லி சொல்லி மாலகட்டுங்களே
(வெத்தலையில)

கோடி பணம் கேட்பதில்லை மாருதி ராஜா - அவன்
கொட்டும் பனி நேரத்திலும் பூத்திடும் ரோஜா
ராம ஜெயம் சொன்னிங்கன்னா வந்து நிற்பானே - தினம்
ராம நாம சாமி பேர பாடி நிற்பானே
(வெத்தலையில)

ஆசையெல்லாம் வேரறுத்த அற்புத சாமி - அவன்
ஓசை தரும் மணி இருக்கும் வால் கொண்ட சாமி
காத்தடிச்சா புயலடிச்சா கலங்கிடலாமா - அந்த
கட்டித்தங்க மனசிருக்க தவிப்பது ஏம்மா
(வெத்தலையில)

பொட்டுவச்சி பொட்டுவச்சி பூச செஞ்சாலே - அவன்
எட்டுவச்சி வாசல் கதவ தட்டிடுவானே
மெட்டெடுத்து ராமனுக்கு பாட்டெடுத்தாலே - அவன்
மெல்ல வந்து தாளமிட்டு கேட்டிருப்பானே
(வெத்தலையில)

கும்மி கொட்டி கும்மி கொட்டி கும்மி போடு - எங்க
கோமகனாம் மாருதிக்கு சரணங்கள் பாடு
நம்பி வந்து நம்பி நின்று நல்லதக் கேளு - மனம்
வெம்பி வெடிக்க தேவயில்ல நன்மை கையோடு
(வெத்தலையில)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லொடித்த ராமனெங்கள்

ராம ராம ராம ராம ராம ராம் - ஸ்ரீ
ராம ராம ராம ராம ராம ராம்
வில்லொடித்த ராமனெங்கள் ராமபிரானே - அந்த
ராமனுக்குத் தூதன் ஆஞ்சநேயனே
சீதை உள்ளம் வென்ற எங்கள் ராமபிரானே - அந்த
சீதை தன்னை மீட்டு வந்த ஆஞ்சநேயனே
(வில்லொடித்த)


காடு சென்ற ராமன் எங்கள் ராமபிரானே - அந்த
காடும் மேடும் தாண்டும் ஆஞ்சநேயனே
தீக்குளிக்க சொன்ன எங்கள் ராமபிரானே - அந்ந
தீயைக்கூட ஆளும் ஆஞ்சநேயனே
(வில்லொடித்த)

நீல வண்ண ராமன் எங்கள் ராமபிரானே - அந்த
நீலக் கடலை ஆளும் ஆஞ்சநேயனே
ஆளவந்த ராமன் எங்கள் ராமபிரானே - என்னை
ஆளுகின்ற தெய்வம் ஆஞ்சநேயனே
(வில்லொடித்த)

மூவருக்கும் அண்ணன் எங்கள் ராமபிரானே - பஞ்ச
பாண்டவர்க்கு தோழன் ஆஞ்சநேயனே
வில்லொடித்து போர் ஜெயித்த ராமபிரானே - தீயின்
வாலெடுத்து வென்ற ஆஞ்சநேயனே
(வில்லொடித்த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சபரீச ஐயப்பன் ஆலய பதினெட்டுப் படிகளோடுள்ள
முன் தோற்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எமது ஆலயத்தில் இருந்து 2003ஆம் ஆண்டு சபரிமலைக்குச் சென்ற சில சுவாமிமார்கள்.



குருசுவாமிகள் உட்பட பல சாமிமார்களும் காணப்படுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருகோணமலையில் இருந்து எமது ஆலயத்திற்கு வருகைதந்த
தந்திரதேவானந்தா சாமியார் அவர்களுடன்
பக்தர்கள் பஜனை செய்த போது



கொழும்பு அளுத்மாவத்தை ஐயப்பன் கோவில் குருசாமி ரவீந்திரகுமார்
அவர்கள் மற்றும் சாமிமார்கள்எமது ஆலயத்திற்கு வருகைதந்து
எங்கள் சாமிமார்களோடு சேர்ந்து பஜனை செய்தபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எமது தேவஸ்தானத்திற்கு விழாவின் போது வருகைதந்த திருகோணமலை
பத்திரகாளியம்மன் கோவில் குருக்கள் சோ. ரவிச்சந்திரக்குருக்கள்
அவர்களுக்கு குருசாமி காளாஞ்சி வழங்கியபோது



ஐயப்பனின் கும்பாபிஷேகப் பெருவிழாவின் போது குருசாமிக்கு
இந்துமதகுரு பீடாதிபதி அவர்கள் பாராட்டு பத்திரம்
வழங்கிய போது அருகில் ஒன்றியத் தலைவர்
மற்றும் சிவாச்சாரியார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்திய கேரள மாநில குருஜி அகில உலக ஐயப்ப மிஷன் ஸ்தாபகர்
சுவாமி பிரபாகரானந்தா அவர்கள் ஆலயத்திற்கு வருகைதந்த
போது குருசாமி குடும்பத்தினர் தீபாராதனை காட்டி
குருவழிபாடு செய்தபோது



குருசுவாமி பெரும்பாதையில் சபரிமலை காட்டுவழியில்
இருமுடியுடன் சென்ற போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எமது தேவஸ்தானத்தில் நடைபெறுகின்ற கைலாசநாத
வேதசிவாகம கலாசாலை ஆசிரிய மாணவர்கள்
மாலை சந்தியாவந்தனம் செய்தபோது.



கொழும்பிலிருந்து வருகை தந்த சுவாமிமார்களும்
எமது ஆலய சுவாமிமார்களும் ஆலய முன்வாசலில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பன்



## இதயம் என்றும் உனக்காக

இதயம் என்றும் உனக்காக ஐயப்பா
உன் பாதமலரே துணை எனக்கு

நிதமும் நாமும் சொல்வேன் ஐயப்பா
உன்னை நினைத்து உருகிடவே ஐயப்பா

கேரள பாண்டிய ராஜ குமாரா சரணம் ஐயப்பா
நாரண சங்கரன் மகிழும் செல்வா சரணம் ஐயப்பா

ஆரமுதம் நீ பேரழகன் நீ
ஆரியங்காவில் வாழ்பவன் நீ

அபயம் தந்திட சபரி மலை உண்டு ஐயப்பா
ஆறுதல் கூறிட உன் அருள் உண்டு ஐயப்பா

வேதமும் நாடும் வினைகள் ஓடும்
எங்கள் நாவும் பாடும் ஞானமும் கூடும்

பண்ணமுதம் தந்தவனே சரணம் ஐயப்பா
கண்ணழகு கொண்டவனே சரணம் ஐயப்பா

பின்னவரின் கண்மணியே சரணம் ஐயப்பா
அண்ணமதில் வந்திடுவாய் சரணம் ஐயப்பா

உன் பாதமலரே துணை எனக்கு ஐயப்பா
ஹரிகர சுதனே ஐயப்பா
சுவாமியே சரணம் ஐயப்பா
ஹரிகர சுதனே ஐயப்பா (3தரம்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய்யின்றி மெய்யோடு

பொய்யின்றி மெய்யோடு நெய்கொண்டு போனால்
ஐயனை நீ காணலாம் சபரியில்
ஐயனை நீ காணலாம்
ஐயப்பா சுவாமி ஐயப்பா
ஐயப்பா சரணம் ஐயப்பா

அவனை நாடு அவன் புகழ் பாடு
புகழோடு வாழ வைப்பான் ஐயப்பன்
உன்னை புகழோடு வாழ வைப்பான் ஐயப்பன்

இருப்பது காடு வணங்குவது நாடு
அவனை காண தேவை பண்பாடு (ஐயப்பசாமி)
(பொய்யின்றிமெய்யோடு)
பூஜைகள் போடு தூயன்போடு
பெயரோடு வாழவைப்பான் ஐயப்பன்
நல்ல பெயரோடு வாழ வைப்பான் ஐயப்பன் (ஐயப்பசாமி)
(பொய்யின்றிமெய்யோடு)
அனைவரும் வாருங்கள் ஐயனை நாடுங்கள்
அருள் வேண்டும் அன்பரையெல்லாம் வாழவைப்பான்
(ஐயப்பசாமி)
(பெய்யின்றிமெய்யோடு)
கார்த்திகை பூங்காவை விரதம் காத்திடும் திருவேளை
மாலை அணிந்தவர் கோவிலை நாடிட ஒன்று சேரும் நேரம்
நோன்பு ஆரம்பம் நன்நேரம் (ஐயப்பசாமி)
(பொய்யின்றிமெய்யோடு)
ஜாதிபேதம் ஒன்றிமில்லை ஏற்றத்தாழ்வு ஏதுமில்லை
மாலையிட்ட மாந்தருக்கு மனம் சுத்தமாகும்
என்றும் மணிகண்டான் புகழ்பாட மகிழ்ச்சிகள் கூடும்
(கார்த்திகை)
(காமியே)
பேட்டைத்துள்ள பாட்டுப்பாடி காடுகளும் மலையும் ஏறி
கூட்டமுடன் பதினெட்டாம் படிகள் ஏறி
சுவாமியைக் கண்டு தொழுது புண்ணியம் நாட
எல்லா தீமைகளும் மறைந்து விட புனிதம் கூட
(கார்த்திகை)
(காமியே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாமி சாமி

சாமி சாமி சாமி என்று நாமம்
சொல்லிப் பாடணும்

நாவினில் வராது போனால்
நால்வரோடு சேரணும்

எண்ணி எண்ணி பார்க்கணும்
ஏகாந்தமாய் இருக்கணும்

என்றும் அவன் சொரூபத்தில்
ஈடுபட்டு இருக்கணும்

கெஞ்சி கெஞ்சி அவனிடத்தில்
தஞ்சமென்று இருக்கணும்

வஞ்சமின்றி அவன் நாமம்
வாயார உரைக்கணும்

ஐயப்பா ஐயப்பா ஐயப்பா என்று
பஜனை செய்யணும்

பஜனை செய்ய வராவிட்டால்
பக்தரோடு சேரணும்

சாமி சாமி சாமி என்று
கையைத் தட்டி பாடணும்

கையைத் தட்ட வராவிட்டால்
கூட்டத்தோடு சேரணும்

சரணங்கள் பாடணும்
சாஸ்தாவை நாடணும்

சாமி சாமி சாமி என்று
வேண்டி வேண்டி துதிக்கணும்

சாமியின் சரணங்களை
சத்தத்தோடு பாடணும்

சாமி சாமி சாமி என்று
வேண்டி வேண்டி துதிக்கணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த மலை இந்த மலை

அந்த மலை இந்த மலை சாமி நிம்மதிக்கு எந்த மலை
சந்நிதியை தாங்கும் மலை எங்க ஐயப்பனின் சபரிமலை
ஆறுதலை அள்ளித்தரும் ஐந்து மலை அந்த மலை
சாமிமாரே கன்னிமாரே சரணம் போடுங்க
அங்கே சத்தியத்தின் ஜோதி காண ஓடி வாருங்க
சாமி திந்தக்கத்தோம் ஐயப்பன் திந்தக்கத்தோம்
சாமி திந்தக்கத்தோம் ஐயப்பன் திந்தக்கத்தோம்
அந்த மலை இந்த மலை சாமி நிம்மதிக்கு எந்த மலை
சந்நிதியை தாங்கும் மலை எங்க ஐயப்பனின் சபரிமலை

அழுத மலை ஏற்றத்திலே அழுதாலும் ஆனந்தமே தொழுது
- நின்றால் தீவினை தான் தீண்டவருமா?
அந்த கரிமலை ஏற்றத்திலே கண்ணீரும் தித்திக்குதே
- காணிக்கை தான் எல்லாமே சரணகோஷம் தான்
எருமேலி பேட்டை துள்ளி சரங்குத்தி ஆலடைந்த சந்தோஷம்
- தான் நெஞ்சுக்குள்ளே சந்தம் பாடுது
பெரும் சந்தோஷம் தான் நெஞ்சுக்குள்ளே சந்தம் பாடுது
சாமி திந்தக்கத்தோம் ஐயப்பன் திந்தக்கத் தோம்
சாமி திந்தக்கத்தோம் ஐயப்பன் திந்தக்கத் தோம்

அந்த மலை இந்த மலை சாமி நிம்மதிக்கு எந்த மலை
சந்நிதியை தாங்கும் மலை எங்க ஐயப்பனின் சபரிமலை
ஆறுதலை அள்ளித்தரும் ஐந்து மலை அந்த மலை
சாமிமாரே கன்னிமாரே சரணம் போடுங்க
அங்கே சத்தியத்தின் ஜோதி காண ஓடி வாருங்கோ

நீலிமலை ஏற்றத்திலே நீண்டதூரம் நடந்தாலும் கால்களுக்கு
புயலைப் போல என்ன வேகம் தான்
அந்த சபரிமலை சந்நிதியில் வணங்கும் போது பட்ட
- துன்பமெல்லாம் இப்போ பறந்து போகும்
பம்பா நதி தீர்த்தமாட காந்தமலை ஜோதிகாண கண்ணோரம்
தான் பன்னீரைத்தான் தூறல் போடுது
என் கண்ணோரம் தான் பன்னீரைத் தான் தூறல் போடுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாமியே சரணம் ஐயா

சுவாமியே சரணம் ஐயா
தர்ம சாஸ்தாவே சரணம் ஐயா
அனுதினம் பூஜை செய்தோம்
உமக்கு அனந்த கோடி நமஸ்காரம் நமஸ்காரம் நமஸ்காரம்

வன் புலி மீதினிலே ஏறி வீரமணிகண்டனே வா
வீர விளையாடல்களை வாழ வாணிதடை கூறவில்லை

கொஞ்சி கொஞ்சி பேசி முதல் பிஞ்சு மொழி
கேட்டிடவே அந்த பந்தளத்தோர் செய்த தவம்
இந்த பாமரர் நாமம் செய்யவில்லையோ
பாலெடுக்கப் புலி எதற்கோ உன் பார்வையின்ப சக்தி அற்றதோ

உன் பார்வையொன்றே போதுமய்யா
உடனே பால் பொழிய வேண்டுமய்யா

வில்லும் அம்பும் கையில் எதற்கோ அந்த வாவரை
நீ வெற்றிக் கொள்ளவா பக்தர் வினைகளின் துயர்களை
வேட்டையாடி விரட்டிடவோ

காந்தமலை ஜோதிதனை காந்தம் என்னை இழுக்குதய்யா
அதை காமக் கோடி நாதன் உருவில்
காண அருள் வேண்டுமய்யா
சுவாமியே சரணம் ஐயா.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னமணக்குது எங்கே மணக்குது

என்ன மணக்குது எங்கே மணக்குது
எல்லாம் மணக்குது ஐயப்பன் மலையிலே

அல்லிமலர் வாசமது எங்கே மணக்குது
அரிஹர புத்திரனின் மேலே மணக்குது

மல்லிகைப் பூ வாசமது எங்கே மணக்குது
மஹிஷிமர்த்தனின் மேலே மணக்குது

முல்லை மலர் வாசமது எங்கே மணக்குது
முகுந்தனின் மைந்தனின் மேலே மணக்குது

சம்பங்கி வாசமது எங்கே மணக்குது
சபரிமலை வாசனின் மேலே மணக்குது

அத்தரும் பன்னீரும் எங்கே மணக்குது
அச்சன் கோவில் அரசனின் மேலே மணக்குது

குங்குமம் கஸ்தூரி எங்கே மணக்குது
குளத்துப்புழை பாலகனின் மேலே மணக்குது

சந்தனத்து வாசமது எங்கே மணக்குது
சண்முகன் தம்பியின் மேலே மணக்குது

சாம்பிராணி வாசமது எங்கே மணக்குது
சாஸ்தாவின் சன்னிதியில் தானே மணக்குது

கற்பூர ஜோதியது எங்கே தெரியது
காந்த மலை வாசனின் முன்னே தெரியது

வீபூதி வாசமது எங்கே மணக்குது
விநாயகனின் தம்பியின் மேலே மணக்குது

பத்தியின் வாசமது எங்கே மணக்குது
பந்தள பாலனின் மேலே மணக்குது

நெய்யபிஷேகம் எங்கே தெரியுது
சாஸ்தாவின் சன்னதியில் தானே தெரியுது

சரண கோஷ சத்தமது எங்கே ஒலிக்கிது
சாஸ்தாவின் சன்னதியில் தானே ஒலிக்குது

பதினெட்டுப் படிகளது எங்கே இருக்குது
சபரிமலை வாசனின் முன்னே இருக்குது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சன்னதியில் கட்டும் கட்டி

சன்னதியில் கட்டும் கட்டி தன்னானேனானே நாங்க
சபரிமலை பயணமுங்கோ தில்லாலெலேலோ

கார்த்திகையில் மாலை போட்டு தன்னானேனானே நாங்க
கடும் பயணம் போறேமுங்கோ தில்லாலேலேலோ

மார்கழியில் கட்டும் கட்டி தன்னானேனானே நாங்க
மணிகண்டனைப் பார்க்கப் போறோம் தில்லாலேலேலோ

எருமேலி பேட்டை துள்ளி தன்னானேனானே நாங்க
ஏறிடுவோம் சபரிமலை தில்லாலேலேலோ

பேரூர்த்தோட்டில் பொரி போட்டு தன்னானேனானே நாங்க
பெருவழியே சென்றிடுவோம் தில்லாலேலேலோ

காளைகட்டி கடந்து நாமும் தன்னானேனானே நாங்க
களைப்பாறிச் செல்வோமே தில்லாலேலேலோ

அழுதையில் ஸ்நானம் செய்து தன்னானேனானே நாங்க
அன்னதானம் பண்ணிடுவோம் தில்லாலேலேலோ

கரிமலையைக் கடந்து தன்னானேனானே நாங்க
ஹரிகரனைக் காணப் போவோம் தில்லாலேலேலோ

பம்பையிலே குளிச்சுப்புட்டு தன்னானேனானே நாங்க
பாவங்களைத் தீர்க்கப் போறோம் தில்லாலேலேலோ

நீலிமலை ஏறிநாமும் தன்னானேனானே நாங்க
நின்று ஆறிப்போவோமே தில்லாலேலேலோ

அப்பாச்சி மேடு தாண்டி நாமும் தன்னானேனானே நாங்க
இப்பாச்சிக் குழி அடைவோம் தில்லாலேலேலோ

சபரிபீடம் தாண்டி நாமும் தன்னானேனானே நாங்க
சரங்குத்தியில் சரம் இடுவோம் தில்லாலேலேலோ

பதினெட்டாம் படியேறி தன்னானேனானே நாங்க
பகவானைக் கண்டிடுவோம் தில்லாலேலேலோ

மலையாம் மலை கடந்து தன்னானேனானே நாங்க
மகரஜோதி காணப் போறோம் தில்லாலேலே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சபரிவாச பாஹிமாம்

ஸ்ரீ சபரிவாசா பாஹிமாம்
ஸ்ரீ ஆனந்த ரூபனே பாஹிமாம்
ஸ்ரீ மோகன ரூபனே பாஹிமாம்
ஸ்ரீ ஜோதீஸ்வ ரூபனே பாஹிமாம் (ஸ்ரீ சபரிவாசா)
நானிருக்க பயமேன் என்றே சொல்வார்
நாடிவந்தோரைக் காத்திடுவார்
உன்னை எண்ணியெண்ணி நெஞ்சுருகினேன்
உன்னை எங்கெங்கோ தேடி நான் ஓடினேன்
பண்ணிசைத்து உன்புகழ் பாடினேன்
பிரபோ பாராமுகம் இது நியாயமா (ஸ்ரீ சபரிவாசா)

# மணிகண்ட நாயகனே

மணிகண்ட நாயகனே ஐயப்பா ஐயப்பா
மலர்தூவி பூஜை செய்தோம் ஐயப்பா ஐயப்பா
(மணிகண்ட)
கார்த்திகையின் திங்களிலே ஐயப்பா ஐயப்பா
நோன்பிருந்து பூஜை செய்தோம் ஐயப்பா ஐயப்பா
துளசிமணி மாலை கட்டி ஐயப்பா ஐயப்பா
தோத்திரங்களை பாடி வந்தோம் ஐயப்பா ஐயப்பா
(மணிகண்ட)
பம்மைநதி நீராடி ஐயப்பா ஐயப்பா
இருமுடியை சுமந்து வந்தோம் ஐயப்பா ஐயப்பா
பதினெட்டுப் படியேறி ஐயப்பா ஐயப்பா
பதம்காண ஓடிவந்தோம் ஐயப்பா ஐயப்பா
(மணிகண்ட)
கதிர்காமன் சோதரனே ஐயப்பா ஐயப்பா
கணபதியின் சோதரனே ஐயப்பா ஐயப்பா
காடுதனில் வீடு கொண்ட ஐயப்பா ஐயப்பா
மேடுபல தாண்டி வந்தோம் ஐயப்பா ஐயப்பா
(மணிகண்ட)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெய்விளக்கு ஏற்றி வைத்தோம் ஐயப்பா ஐயப்பா
கைகொண்டு காப்பவனே ஐயப்பா ஐயப்பா
நெய்நிறைந்த தேங்காயை ஐயப்பா ஐயப்பா
மெய்யுறுகி படைத்து வைத்தோம் ஐயப்பா ஐயப்பா
(மணிகண்ட)

கோபுரத்தின் மீதினிலே ஐயப்பா ஐயப்பா
கருடன் வந்து வட்டமிட ஐயப்பா ஐயப்பா
கோயில்மணி நாதத்துடன் ஐயப்பா ஐயப்பா
கோஷம் விண்ணை மோதுதையா ஐயப்பா ஐயப்பா
(மணிகண்ட)

சபரிமலை ஆண்டவனே ஐயப்பா ஐயப்பா
சந்ததியை காத்தருள்வாய் ஐயப்பா ஐயப்பா
(மணிகண்ட)

## ஐயப்பனே ஐயப்பனே

ஐயப்பனே ஐயப்பனே ஓடிவா - எங்க
ஆதிசிவன் புத்திரனே ஆடி வா
மெய்யப்பனே மெய்யப்பனே ஓடி வா - தும்பிக்
கையப்பனின் தம்பியே நீ ஆடிவா (ஐயப்பனே)

பம்பாநதி குளிச்சு வந்தோம் ஓடிவா - எங்க
பாதையெல்லாம் காவலுக்கு கூடவா
அழுதாமல ஏறி வந்தோம் ஓடிவா - எங்க
ஐயமெல்லாம் தீர்த்து வைக்க ஆடிவா (ஐயப்பனே)

சந்தனத்த கொழச்சி வந்தோம் ஓடிவா - அத
சாத்தனுமே மேனியெல்லாம் ஆடிவா
குங்குமத்த எடுத்து வந்தோம் ஓடிவா - அதில்
கோலம் போட்டு பாக்கணுமே ஆடிவா (ஐயப்பனே)

நெய்யுருக்கி எடுத்து வந்தோம் ஓடிவா - உனக்கு
மெய்யுருகி படைக்கணுமே ஆடிவா
கற்பூரம் கொழுத்த வந்தோம் ஓடிவா - அத
கண்குளிர கண்டு ஆடஓடிவா (ஐயப்பனே)


சபரீச ஐயப்ப தேவஸ்தான வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிகண்ட நாயகனே ஓடிவா - உனக்கு
மணி தீபம் ஏற்றிவச்சோம் காணவா
ஜோதி வடிவானவனே ஓடிவா - உனக்கு
ஜாதி மத பேதமெல்லாம் தீர்க்கவா (ஐயப்பனே)

மெட்டெடுத்தோம் மெட்டெடுத்தோம் கேட்கவா - எங்க
மெட்டுக்கொரு பாட்டு கட்ட ஓடிவா
பஜனை வச்சோம் பஜனை வச்சோம் கேக்கவா - எங்க
மயூராபதியில் நீ பாட்டு பாட ஓடிவா
மாருதியின் கோயிலுக்கு ஓடிவா (ஐயப்பனே)

சரணமப்பா சரணமப்பா சாமியே - உன்தாள்
சரணமப்பா சரணமப்பா சாமியே

## ஐயப்பா தேவா

ஐயப்பா தேவா நீ எக்கட போற ஐயா
அக்கட இக்கட போற சாமி இக்கடவா ஐயா

மணிகண்ட தேவா நீ எக்கட போற ஐயா
அக்கட இக்கட போற சாமி இக்கடவா ஐயா

வில்லாளி வீரா நீ எக்கட போற ஐயா
அக்கட இக்கட போற சாமி இக்கடவா ஐயா

வீரமணி கண்டா நீ எக்கட போற ஐயா
அக்கட இக்கட போற சாமி இக்கடவா ஐயா

அச்சங்கோவில் அரசா நீ எக்கட போற ஐயா
அக்கட இக்கட போற சாமி இக்கடவா ஐயா

ராஜாதி ராஜா நீ எக்கட போற ஐயா
அக்கட இக்கட போற சாமி இக்கடவா ஐயா

தேவாதி தேவா நீ எக்கட போற ஐயா
அக்கட இக்கட போற சாமி இக்கடவா ஐயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தள்ளாடித் தள்ளாடி

தள்ளாடி தள்ளாடி நடைநடந்து நாங்கள்
சபரிமலை நோக்கி வந்தோமய்யா

கார்த்திகை நல்லநாளில் மாலையும் போட்டுக்கிட்டு
காலையிலும் மாலையிலும் சரணங்கள் சொல்லிக்கிட்டு
(சாமியே ஐயப்பா! ஐயப்பா! சாமியே)
சரணங்கள் சொல்லிக் கொண்டு வந்தோமய்யா - நாங்க
சபரிமலை நோக்கி வந்தோமய்யா

இருமுடியைக் கட்டிகிட்டு இன்பமாய் பாடிகிட்டு
ஈசன் மகனே உந்தன் இருப்பிடத்தை தேடிக்கிட்டு
பேட்டைகளும் துள்ளிக்கிட்டு வேஷங்களும் போட்டுக்கிட்டு

வேடிக்கையாக நாங்கள் ஆட்டங்களும் ஆடிக்கிட்டு
(சாமி திந்தக்கத்தோம் ஐயப்ப திந்தக்கத்தோம்)

காணாத காட்சியெல்லாம் கண்குளிரக் கண்டுக்கிட்டு
காடுமலைகளெல்லாம் கால்நடையா தாண்டிகிட்டு
பம்பையில் குளித்து விட்டு பாவமெல்லாம் போக்கிக்கிட்டு
பக்தரெல்லாம் கூடிநின்று பஜனைகள் செய்துகிட்டு
(சாமியே ஐயப்பா ஐயப்போ சாமியே)
பஜனைகள் செய்துக்கிட்டு வந்தோம் ஐயா

நீலிமலை ஏற்றத்திலே நின்று நின்று ஏறிக்கிட்டு
நெஞ்சம் உருகி உன்னை நினைச்சுமே பார்த்துக்கிட்டு
படியேறிப் போகும் போது பாங்கான காய் உடைத்து
பாலனான உன்னையே பார்த்து பார்த்து சொக்கிக்கிட்டு

நெய்யிலே குளிக்கும் போது நேரிலேயே பார்த்துக்கிட்டு
ஐயப்பா சரணம் என்று ஆர்ப்பரித்து பாடிக்கிட்டு


சபரீச ஐயப்ப தேவஸ்தான வெளியீடு
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பந்தளம் தந்திட்ட நேசன்

பந்தளம் தந்திட்ட நேசனையா - என்றும்
பக்தர்கள் உள்ளத்தில் வாசனைய்யா
விந்தைகள் செய்திடும் பிள்ளையப்பா - அவன்
செந்திலாதிபனின் தம்பியப்பா - அவன்

தேவாதி தேவரும் கூடி வந்து - எங்கள்
தேவன் ஐயப்பனை நாடி வந்து
தேவர்கள் யாவரும் பாடி வந்து - எங்கள்
தேவனாம் ஐயனை வாழ்த்துகின்றார்

முத்தொழில் நாதரும் ஓடி வந்து - எங்கள்
முத்தான பிள்ளையைக் காண வந்து
தத்துவங்கள் பதினெட்டுப் படிகளில்
சத்திய பாலனைக் கண்டு சென்றார்

எட்டு திசைகளும் கூடி வந்து ஐயன்
கூட்டம் இருமுடி தாங்கி வந்து
திட்டமிட்டபடி பம்பை நதி வந்து
கூட்டமாகப் பூஜை செய்திடுவார்

கற்பகதருவும் நாடி வந்து எங்கள்
கற்பூர நாதனைக் காண வந்து
அற்புதங்கள் பல செய்தவராம் அவன்
பொற்பாதம் கண்டு பணிவோமையா

ஜாதியும் பேதமும் இல்லையப்பா - எங்கள்
ஜோதி வடிவான பிள்ளையிடம்
பாதிபிறை தொழும் வாவர் அங்கு - அந்த
பள்ளியும் பக்கத்தில் பாருங்கய்யா

வையகம் போற்றிடும் ஐயனைக் கண்டதும்
ஐயங்கள் யாவும் மறையுதய்யா
நெய்யில் குளித்திடும் ஐயனைக் கண்டதும்
நெஞ்சங்கள் யாவும் மகிழுதய்யா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சைபுள்ளை பவளபுள்ளை

சாமி சரணம் சாமி சரணம் சாமி சரணம் ஐயப்பா
சாமி சரணம் சாமி சரணம் சாமி சரணம் ஐயப்பா

பச்சைபுள்ளை பவளபுள்ளை பாண்டு ரங்கன் பெத்தபுள்ளை
பூமியாள வந்தபுள்ளை சாமியாரா போனபுள்ளை

உண்மையான தெய்வம் நீயே நம்மை ஆளும் ஐயப்பா
பழமையான பம்பைநதியில் வந்துதித்த மெய்யப்பா
(பச்சைபுள்ளை பவளபுள்ளை)

மண்டலத்தில் பூஜை செய்ய தொண்டு செய்தோம் ஐயப்பா
தொண்டராகி ஜோதி கண்டோம் மணிகண்டனே நீ ஐயப்பா
(பச்சைபுள்ளை பவளபுள்ளை)

எருமேலி பேட்டைத்துள்ளி ஆடிவந்தோம் ஐயப்பா
பம்பை நதியில் மூழ்கியல்லோ பாவம் தீர்ந்தோம் ஐயப்பா
(பச்சைபுள்ளை பவளபுள்ளை)

பந்தளத்தை ஆளுகின்ற பாண்டியனான் தன் மகனே
அஞ்சு முகம் ஆறுமுகம் தம்பியாக வந்தவனே.
(2 தடவை)
(பச்சைபுள்ளை பவளபுள்ளை)

## கணபதிக்கு உரிய சிறப்பு ஹோம திரவியங்கள்

அறுகு, மோதகம், அவல், நெற்பொறி, சத்துமா, கரும்பு, தேங்காய்க்கீற்று, சுத்தமானஎள், வாழைப்பழம், அப்பம், வெள்ளெருக்கு தேன், நெய், பால், வெல்லம் இவைகளைச் சேர்த்து ஹோமம் செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லும் முள்ளும்

கல்லும் முள்ளும் நிறைந்த காடு சபரியின்று சொன்னாங்க
சபரிமலை என்னாங்க
கால்வச்ச இட மெல்லாம் பஞ்சாயிருக்கு என்னாங்க

கள்ளங்கபடம் இல்லாத உள்ளத்தோடு வந்தாலே
மலையில் உள்ள எல்லாமே மாறும் பாருதன்னாலே

கொல்லும் வேங்கை திரியும் காடும் சபரியின்று சொன்னாங்க
சபரிக்காடு என்னாங்க
அவை எல்லாம் சிலை போல அமர்ந்திருக்கும் என்னாங்க
விரதம் இருந்து வந்தாலே விலகும் யாவும் தன்னாலே
ஐயனைத் தியானம் செய்தாலே அவன் இருப்பான் முன்னாலே

ஆனைக் கூட்டம் உலவும் காடு சபரிமலை என்னாங்க
அந்த சபரிமலை என்னாங்க கணபதியே முன்னாலே காட்சி
தந்தது என்னாங்க

தினமும் பூஜை செய்தாலே தெய்வ பலம் தன்னாலே
வணங்கும் தெய்வம் எல்லாமே வந்து நிற்கும் முன்னாலே

கரிமலையை கடப்பதெல்லாம் கடினமுன்னு சொன்னாங்க ஆமா
கடினமுன்னு சொன்னாங்க
மனசுக்குள்ளே அவனிருந்தான் காற்றுப் போல வந்தேங்க

அவனை நம்பி நின்றாலே கை கொடுப்பான் தன்னாலே
பக்தியோடு வந்தாலே காத்திருப்பான் முன்னாலே

பணி பெய்யும் இரவினிலே பாதையெல்லாம் கோஷம் தான்
பெரிய பாதையெல்லாம் கோஷம் தான்
மணி கண்டன் அதைக் கேட்டு ஓடி வரும் நேரம் தான்

குரலைக் கேட்ட பின்னாலே குதித்திடுவான் முன்னாலே
தஞ்சமுனு நின்னாலே தாங்கிடுவான் தன்னாலே

மகர ஜோதி எல்லோருக்கும் தெரியுமான்னு கேட்டாங்க
ஆமா தெரியுமான்னு கேட்டாங்க

மனசுக்குள்ளே இருட்டில்லே விண்ணில் ஜோதி கண்டோங்க
சரணம் சொல்லி நின்னாலே ஜோதி ரூபம் முன்னாலே
வாஞ்கையோடு வந்தாலே வாழ்த்திடுவான் மெய்யாலே.

(கல்லும் முள்ளும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிக்கட்டு சபரிமலைக்கு

இருமுடி தாங்கி ஒரு மனதாகி குருவெனவே வந்தோம்
இருவினை தீர்ககும் எமனையும் வெல்லும்
திருவடியைக் காண வந்தோம்
பள்ளிக் கட்டு சபரிமலைக்கு
கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை
சாமியே ஐயப்போ ஐயப்போ சாமியே
நெய்யபிஷேகம் சுவாமிக்கே
கற்பூர தீபம் சுவாமிக்கே
ஐயப்ப மார்களும் கூடிக் கொண்டு
ஐயனை நாடிச் சென்றிடுவார்
சபரிமலைக்குச் சென்றிடுவார்
கார்த்திகை மாதம் மாலையணிந்து
நேர்த்தியாகவே விரதமிருந்து
பார்த்த சாரதியின் மைந்தனே உனைப்
பார்க்க வேண்டியே தவமிருந்து
இரு முடி எடுத்து எருமேலி வந்து
ஒரு மனதாகிப் பேட்டைத் துள்ளி
அருமை நண்பராம் வாபரைத் தொழுது
ஐயனின் அருள்மலை ஏறிடுவார்
அழுதை ஏற்றம் ஏறும் போது
அரிகரன் மகனைத் துதித்துச் செல்வார்
வழிகாட்டிடவே வந்திடுவார்
வன்புலி ஏறி வந்திடுவார்
கரிமலை ஏற்றம் கடினம் கடினம்
கருணைக் கடலும் துணைவருவான்
கரிமலை இறக்கம் வந்தவுடன்
திருநதி பம்பை கண்டிடுவார்
கங்கை நதிபோல் புண்ணிய நதியாம்
பம்பையில் நீராடி
சங்கரன் மகனைக் கும்பிடுவார்
சங்கடமின்றி ஏறிடுவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்முத்து மணியோடு

நல்முத்து மணியோடு
ஒளி சிந்தும் மாலை
நவரெத்தின ஒளியோடு
சுடர் விடும் மாலை
கற்பூர ஜோதியில் கலந்திடும் மாலை
கனக மணி கண்டனின் துளசி மணிமாலை
ஆயிரம் சரணங்கள் சொல்லிடும் மாலை
ஐயனின் கடைக்கண்ணில்
அன்பெனும் மாலை
அடுதையில் குளித்திடும் அழகு மணிமாலை
பம்பையில் பாலனின்
பவள மணி மாலை
ஐந்து மலை வாசனின்
அழகு மணி மாலை ஐயப்ப சுவாமியின்
அருள் கொஞ்சும் மாலை
ஆனந்த ரூபனின் அன்பென்னும் மாலை
கன்னியின் கழுத்தினில் அரங்கேறும் மாலை
முத்தோடும் மணியோடும் முழங்கிடும் மாலை
முக்கண்ணன் மகனான
மணிகண்டன் மாலை
கழுத்தோடு உறவாடும்
காந்த மணி மாலை
காண வரும் பக்தருக்கு காட்சி தரும் மாலை
நல்முத்து மணியோடு
ஒளி சிந்தும் மாலை
நவரெத்தின ஒளியோடு
சுடர் விடும் மாலை
கற்பூர ஜோதியில் கவர்ந்திடும் மாலை
கனக மணிகண்டனின் துளசி மணி மாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவான் சரணம்

பகவான் சரணம் பகவதி சரணம்
சரணம் சரணம் ஐயப்பா
பகவதி சரணம் பகவான் சரணம்
சரணம் சரணம் ஐயப்பா
அகமும் குளிரவே அழைத்திடுவோமே
சரணம் சரணம் ஐயப்பா
பகலும் இரவும் உன்நாமமே வரணும் வரணும் ஐயப்பா
பொன்னம்பல மேடையிலே - ஐயப்பா
ஒரு புனிதநிலை கனிந்ததப்பா ஐயப்பா - ஒரு
புனித நிலை கனிந்ததப்பா ஐயப்பா ஐயப்பா
அருள் மணக்கும் ஆண்டவனே ஐயப்பா
ஆதியான ஜோதியப்பா ஐயப்பா
இருக்கும் வாழ்வை சிறக்க வைக்கும் ஐயப்பா
ஈர்க்கும் காந்தமலையப்பா - ஐயப்பா
உன் ஒளியை தோற்றுவிக்கும் ஐயப்பா
ஊறிவரும் உணர்வடக்கம் ஐயப்பா
என்னை உன்னுள் நெருங்க வைக்கும் ஐயப்பா
ஐந்துமலை ஏற வைத்தாய் ஐயப்பா
ஐம்புலனால் புலியை வெல்லும் ஐயப்பா
ஐயம் தீர்க்கும் தெய்வம் அப்பா ஐயப்பா
ஒருமை உள்ளம் குடி இருக்கும ஐயப்பா
ஓங்கும் மலை வேந்தனப்பா ஐயப்பா
ஔவைக் குறள் யோகம் கொண்ட ஐயப்பா
செவ்வேளின் மணிகண்டா ஐயப்பா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரணம் சரணம் என்று சொல்லி பாருங்க

சரணம் சரணம் என்று சொல்லிப் பாருங்க - அந்த
சபரிலைக்கு நீங்க வந்து பாருங்க

அச்சன் கோயில் அரசனையும் வந்து பாருங்க - அந்த
ஹரிஹர புத்ரனின் அழகை பாருங்க

ஆரியங்கா ஐயாவையும் வந்து பாருங்க - அந்த
ஆனந்த ரூபன் அவன் அழகைப் பாருங்க

குழத்து புழ பாலனையும் வந்து பாருங்க - அந்த
குலம் காக்கும் குழந்தை அவன் அழகைப் பாருங்க

பந்தளத்து வேந்தனையும் வந்து பாருங்க - அந்த
பால்வடியும் பாலகனின் அழகைப் பாருங்க

எருமேலி சாஸ்த்தாவை வந்து பாருங்க - அந்த
சாந்தஸ்வ ரூபன் அவன் அழகைப் பாருங்க

(சரணம் சரணம் என்று)

ஏதாவது ஒரு தெய்வத்தின் மீது மனதை முழுமையாகச் செலுத்தி விடு. நீ எதிர்பாராத நேரத்தில் அது கை கொடுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காடுமலை கடந்து வந்தோம்

காடு மலை கடந்து வந்தோம் ஐயப்பா
உன்னை காண நாங்கள் ஓடி வந்தோம் ஐயப்பா
மாய வீதி தனை மறந்து வந்தோம் ஐயப்பா
சபரி வீடு தனை தேடி வந்தோம் ஐயப்பா

நெய் அபிஷேகம் பால்அபிஷேகம் தேனபிஷேகம் சாமிக்கே
சந்தனம் பன்னீர் அபிஷேகம் என்றும் எங்கள் ஐயப்ப சாமிக்கே

காடு மலை கடந்து வந்தோம் ஐயப்பா
உன்னை காண நாங்கள் ஓடி வந்தோம் ஐயப்பா

ஐயப்பா சாமி ஐயப்பா சரணம் ஐயப்பா
சாமி ஐயப்பா

ஏட்டினிலே எழுதிவைத்தாய் ஐயப்பா
எங்கள் பாட்டினிலே எழுந்து வந்தாய் ஐயப்பா

நாங்கள் பேட்டை துள்ளி ஆடும் போது ஐயப்பா
நீ ஆட்டம் ஆடி வந்திடுவாய் ஐயப்பா (காடு)

நீல விழிக் கண்ணனுக்கும் நீறணிந்த ஈசனுக்கும்
பாலகனாய் அவதரித்த ஐயப்பா (2 தடவை)

வேலவனின் அருமைத் தம்பி காலமெல்லாம் உனை வேண்டி
நீலிமலை சபரிலை ஏறிவந்தோம் - ஐயப்பா (காடு மலை)

மணிகண்டா உன் கருணை அமுதமப்பா
உன் புன்னகையில் புலனமெல்லாம் மயங்குதப்பா

மின்னும் காந்த மலையில் ஜோதி தெரியுதப்பா
மின்னும் காந்த மலையில் ஜோதி தெரியுதப்பா (2 தடவை)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பம்பை நதிக்கரையே உந்தன்

பம்பை நதிக்கரையே உந்தன்
பெருமைக்கு இணை இல்லையே
அரிஹரன் திருவருளே நீதான்
அறிந்தாய் முதன் முதலே
ஆயிரம் கோடி பக்தர்கள் பாடி
தொழுவர் ஐயப்பன் திருவடியில்
அந்த ஐயப்பனே ஒரு குழந்தையின் வடிவில்
அருள் மழை பொழிந்து உன் மடியில்
அருள் மழை பொழிந்து உன் மடியில்

அடைக்கலம் என்று இருமுடி ஏந்தி
அனுதினம் வருவார் கோயிலிலே
அவரவர் மனதில் அருளாய் இறங்கி
கருணையைப் பொழிவான் வாழ்வினிலே
கருணையைப் பொழிவான் வாழ்வினிலே

சரணம் பாடி வருவோர்க்கெல்லாம்
சாந்தியைக் கொடுக்கும் சபரிமலை
ஒருமுறை தரிசனம் கண்டால் போதும்
பிறவியின் பயனே தெய்வ நிலை
பிறவியின் பயனே தெய்வ நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் குருநாதா ஐயப்பா

ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா
ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா
அரனார் பாலா ஐயப்பா அம்பிகை பாலா ஐயப்பா
ஆபத்பாந்தவா ஐயப்பா ஆதிபராபரா ஐயப்பா
ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா
இரு முடிப்பிரியா ஐயப்பா இரக்கம் மிகுந்தவா ஐயப்பா
ஈசன் மகனே ஐயப்பா ஈஸ்வரி மைந்தா ஐயப்பா
ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா
உமையாள் பாலா ஐயப்பா உறுதுணை நீயே ஐயப்பா
ஊக்கம் தருபவா ஐயப்பா ஊழ்வினை அறுப்பவா ஐயப்பா
ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா
எங்கும் நிறைந்தவா ஐயப்பா - எங்கள் நாயகா ஐயப்பா
பம்பையின் பாலா ஐயப்பா பந்தள வேந்தே ஐயப்பா
ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா
வன்புலி வாகனா ஐயப்பா வனத்திலிருப்பவா ஐயப்பா
சபரி கிரீசா ஐயப்பா சாந்தசொரூபா ஐயப்பா
ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா
சபரி கிரீசா ஐயப்பா சாஸ்வத ரூபா ஐயப்பா
ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா
ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமலை வாசா மணிகண்டா

மணிகண்டா மணிகண்டா
மாமலை வாசா மணிகண்டா
வில்லாளி வீரனே மணிகண்டா
வீர மணிகண்டா மணிகண்டா

அரிகர சுதனே மணிகண்டா
அருளைத் தருவாய் மணிகண்டா
ஆனந்த ரூபனே மணிகண்டா
ஆனந்த மளிப்பாய் மணிகண்டா
இருமுடிப் பிரியனே மணிகண்டா
இன்பமே தருவாய் மணிகண்டா
ஈடில்லாத் தெய்வமே மணிகண்டா
நீ வருவாயே மணிகண்டா

உத்தமனே சத்தியனே மணிகண்டா
உண்மை உணர்த்திய மணிகண்டா
ஊமைக்கருளிய மணிகண்டா
ஊழ்வினை அளிப்பாய் மணிகண்டா
எங்கும் நிறைந்தவனே மணிகண்டா
எங்கள் குறை தீர்ப்பாய் மணிகண்டா
ஏகாந்த மானவனே மணிகண்டா
ஏற்றமே தருவாய் மணிகண்டா

ஐயப்ப தெய்வமே மணிகண்டா
ஐயமெல்லாம் தீர்ப்பாய் மணிகண்டா
ஒப்பற்ற தெய்வமே மணிகண்டா
உலகம் தழைக்கச் செய் மணிகண்டா
காந்தமலை ஜோதியே மணிகண்டா
காக்க வேணும் ஐயனே மணிகண்டா
தலை வலி தீர்த்தவனே மணிகண்டா
தனம் குணம் தருவாய் மணிகண்டா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளசி மணி மாலை கட்டி

துளசி மணி மாலை கட்டி இருமுடியும் தலையில் ஏந்தி
சபரி நோக்கி நடையைப் போடு கன்னிச்சாமி அங்கே
சாஸ்தாவின் அருள் கிடைக்கும் கன்னிச்சாமி

எருமேலிப் பேட்டையிலே கரிமலையில் நடக்கயிலே
எத்தனையோ இன்பமுண்டு கன்னிச்சாமி - நீயும்
வந்து பார்த்து வரத்தை கேளு கன்னிச்சாமி

பாட்டு பாடி பஜனை பாடி பம்பா நதி தீர்த்தமாடி
காட்டுக்குள்ளே குடியிருப்போம் கன்னிச்சாமி அதில்
வேட்டுவச்சு வழி நடப்போம் கன்னிச்சாமி

மலையதிரச் சரணம் போட்டு மனமுருகப் பாட்டுக் கேட்டு
அலையலையாய் நடந்து வந்தோம் கன்னிச்சாமி - அங்கே
ஆனந்த ஜோதி பார்ப்போம் கன்னிச்சாமி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபரிமலை சந்தணம்

சந்தண முண்ணா சந்தணம் சபரிமலை சந்தணம்
சந்தணத்தைப் பூசிக்கிட்டு சந்தோஷமாய் பாடுவோம்
சந்தணத்தைப் பூசிக்கிட்டு சந்தோஷமாய் பாடுவோம்
குங்கும முணா குங்குமம் மஞ்சமாதா குங்குமம்
குங்குமத்தை வைச்சுக்கிட்டு குணமுடனே பாடுவோம்
சந்தண முண்ணா சந்தணம் சபரிமலை சந்தணம்
சந்தண முண்ணா சந்தணம் சபரிமலை சந்தணம்
பன்னீருண்ணா பன்னீரு பம்பா நதி பன்னீரு
பன்னீரைத் தான் தெளிச்சுக்கிட்டு பாவங்களை போக்கிடுவோம்

சந்தண முண்ணா சந்தணம் சபரிமலை சந்தணம்
அத்தருன்னா அத்தரு அழுதமலை அத்தரு
அத்தரைத்தான் பூசிக்கிட்டு ஆனந்தமாய் ஆடுவோம்
சந்தணமுண்ணா சந்தணம் சபரிமலை சந்தணம்
சந்தண முண்ணா சந்தணம் சபரிமலை சந்தணம்
சத்தியமான படியுங்க பதினெட்டுப் படியுங்க
படியில் தேங்காய் உடையுங்க பகவானை வேண்டுங்க
சந்தண முண்ணா சந்தணம் சபரிமலை சந்தணம்
சந்தண முண்ணா சந்தணம் சபரிமலை சந்தணம்
நெய் அபிஷேகம் செய்திடுவோம் நெஞ்சுருக வேண்டுவோம்
நெனச்ச தெல்லாம் தருவான் அந்த சபரிமலை வாசனுங்க
கேட்ட தெல்லாம் தருவான் அந்த சபரிமலை வாசனுங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்தோமையா சபரி வாறோமையா

வாறோமையா சபரி வாறோம் ஐயா
கட்டேந்தி சபரிக்கு வாறோம் ஐயா
வாறோமையா சபரி வாறோமையா
கட்டேந்தி சபரிக்கு வாறோமையா

கார்த்திகை நல்ல நாளில் மாலையிட்டு
மார்கழி நல்ல நாளில் கட்டும் கட்டி
சந்தணப் பொட்டு குங்குமப் பொட்டு வைச்சுக்கிட்டு
சாமி சரண நாம மந்திரம் பாடிக்கிட்டு

வாறோமையா சபரீ வாறோமையா
கட்டேந்தி சபரிக்கு வாறோமையா
ஜிகு தாளம் போட்டுக்கிட்டு பேட்டை துள்ளி ஆடிக்கிட்டு
கட்டேந்தி உனைக் காண வாறோமையா

பம்பையிலே குளித்து விட்டு
பாவங்களைப் போக்கிவிட்டு
பக்தியுடன் உனைக் காண
வாறோமையா

வாறோமையா சபரி வாறோமையா
கட்டேந்திச் சபரிக்கு வாறோமையா
வந்தோமையா சபரி வந்தோமையா
கட்டேந்தி சபரிக்கு வந்தோமையா

ஜிகு தாளம் போட்டிக்கிட்டு பேட்டை துள்ளி ஆடிக்கிட்டு
கட்டேந்தி உனைக் காண வாறோமையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரணம் சரணம் ஐயப்பா

சரணம் சரணம் ஐயப்பா - நீ
ஆளும் மலையே சபரியப்பா
நித்தமும் பூஜை செய்யும் பக்தர்க்
கருளும் அரசே சரணப்பா

சரணம் சரணம் ஐயப்பா
சாமி சரணம் ஐயப்பா
பந்தள ராஜா ஐயப்பா
தொழுதோம் உனை நாம் ஐயப்பா

அரிகர சுதனாய்ப் பிறந்தவனே
சாந்த வடிவாய் அமர்ந்தவனே
திங்களை ஒத்த திருமுகத்தோடு
திருவாய் நெஞ்சில் நிறைந்தவனே

சரணம் சரணம் ஐயப்பா
சாமி சரணம் ஐயப்பா
பந்தள ராஜா ஐயப்பா
தொழுதோம் உனை நாம் ஐயப்பா

பாதம் பணிந்தோம் பக்தர்கள் நாம்
உனைப் பாடி மகிழ்ந்தோம் வித்தகர் நாம்
இருமுடி தரித்து உனைக் காண வந்தோம்
பெருஒளி நீயே சரணமப்பா

சரணம் சரணம் ஐயப்பா
சாமி சரணம் ஐயப்பா
பந்தள ராஜா ஐயப்பா
தொழுதோம் உனை நாம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹரிஹரசுதனே ஐயப்பா

ஹரிஹரசுதனே ஐயப்பா
நம் கவலையெல்லாம் தீர்த்தாய் ஐயப்பா
பூரணை நாதா ஐயப்பா
புண்ணிய மூர்த்தியே ஐயப்பா

ஓம் ஐயப்பா ஓம் ஐயப்பா ஓம் ஐயப்பா
ஹரிஹர சுதனே ஐயப்பா
சாமியே சரணம் ஐயப்பா
ஐயப்பா சரணம் ஐயப்பா

தேவகாணார்ச்சித மணிகண்டா
சர்வ ஜெனார்த்தன பாவகரா
விஜாக்கிரக வாகன திரிலோஜனா

இருவினை களைந்து எமையாட்கொள்ள நீ வா வா வா
ஓம் ஐயப்பா ஓம் ஐயப்பா ஓம் ஐயப்பா
ஹரிஹர சுதனே ஐயப்பா கவலை எல்லாம் தீர்ப்பாய் ஐயப்பா
சாமியே சரணம் ஐயப்பா ஐயப்பா சரணம் ஐயப்பா

கருணாகர மூர்த்தியே ஐயப்பா
இருமுடிப் பிரியா ஐயப்பா
வாபரின் தோழனே ஐயப்பா
புஸ்களை நாதா ஐயப்பா
எங்களைக் காப்பாய் ஐயப்பா
ஓம் ஐயப்பா ஓம் ஐயப்பா ஓம் ஐயப்பா

ஹரிஹர சுதனே ஐயப்பா
சாமியே சரணம் ஐயப்பா ஐயப்பா சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவன் என்பது உள்ளவரை

ஜீவன் என்பது உள்ளவரை - என்
நெஞ்சம் வணங்கும் சபரிமலை
அரிஹரன் புகழை பாடும் வரை
வாழ்வினில் தோன்றும் சாந்தநிலை
கார்த்திகை தோறும் மாலை அணிந்து
நாற்பது நாளும் நோன்பும் இருந்து
நாவில் ஐயன் நாமம் மொழிந்து
நடந்தே சென்று கோயிலடைந்து

இருமுடி சேர்த்தேன் அவனிடத்தில்
ஒளிமழை தந்தான் என்னிடத்தில்
நெய் விளக்காலே அலங்காரம் தன்னில்
நெஞ்சில் மறையும் அகங்காரம்
சரணம் என்னும் ஓங்காரம்
ஓங்கார ஸ்வரூபனே சரணம் ஐயப்போ
சரணம் என்னும் ஓங்காரம்
சர்வமும் அதிலே ரீங்காரம்
ஆசையில் மோதும் அலையாவும்

ஜோதியை கண்டால் தெளிவாகும் - மகர
ஜோதியை கண்டால் தெளிவாகும்
பம்பை கரையில் அவதரித்தான்
பந்தள நாட்டில் பணிமுடித்தான்
மகிஷியை வென்றே வாழ்வளித்தான்
மழலை வடிவில் அருள் கொடுத்தான்
அன்னையின் நோய்க்கும் மருந்தளித்தான்
அகிலம் வாழவும் துணை இருப்பான் - இந்த
அகிலமும் வாழவும் துணை இருப்பான்

(ஜீவன் என்பது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரணம் சொல்லி கூப்பிடுவோம்

சரணம் சொல்லிக் கூப்பிடுவோம் சபரிமலை வாசனை
அருளைத் தரும் ஆண்டவனை அன்பருக்கு மித்திரனை
சிரம் தாழ்த்தி வணங்கிடுவோம் ஹரிஹரசுதன் - ஐயப்பன்
வில்வாளி வீரனே வீரமணிகண்டனே தமிழ்
சொல்லெடுத்து பாடுவோம் சுந்தரேசன் மைந்தனே
ஸ்வாமி சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா
ஸ்வாமி சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா
சபரிமலை செல்பவர்க்கு சஞ்சலங்கள் இல்லை
பயம் தனையே போக்கிடுவான் பந்தளனின் பிள்ளை
அபயம் என்று சரணமடைந்தால் அகன்றிடும் தொல்லை
அவனின்றி அவனியிலே அணுவும் அசைவதில்லை
வீட்டை விட்டு கட்டும் கட்டி அருள்மலை புறப்படுவோம்
பூட்டு சரணம் போட்டு எருமேலி பேட்டை செல்வோம்
சுவாமி திந்த தோம் ஐயப்பன் திந்தக தோம்
சுவாமி திந்த தோம் ஐயப்பன் திந்தக தோம்
பேட்டை துள்ளி ஆடும் போது பேரின்பம் கொள்வோம்
கோட்டைக் காவலன் வாவரு சாமியை கொண்டாடி மகிழ்வோம்
ஸ்வாமி சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா
ஸ்வாமி சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா
சீர்மேவும் சபரிமலை நாதனருள் தேடு
ஈரொன்பது படியேறி ஈசன் பதம் நாடு
பாரெல்லாம் காத்து நிற்கும் பரமனின் திருவீடு
நாராயணன் சொல்லினையே நாவினிக்க பாடு
ஸ்வாமி சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா
ஸ்வாமி சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பம்பா நதிக்கரையின் சாமி

பம்பா நதிக்கரையின் சாமி
உன்னால் சுழலுதிந்த பூமி
உன்தாழ் சரணமய்யா சாமி
ஐயா திருமுகத்த காமி (பம்பா)

காந்த மலையிருக்கும் சாமி
கண்டா மனங்குளிரும் சாமி
எங்க சபரிமல சாமி
ஐயா சரணமய்யா சாமி (பம்பா)

சிங்கம் கரடி புலி காடு
தங்கும் இடத்தில் உந்தன் வீடு
வந்தோம் கடந்து பல மேடு
கொண்டோம் பலனும் கைகளோடு (பம்பா)

கந்தன் கஜமுகனின் தம்பி
உந்தன் திருவருளை நம்பி
கட்டி இருமுடியை ஏந்தி
கண்டோம் மகரமணி ஜோதி (பம்பா)

வையம் புகழுகின்ற வாசா
நெய்யால் குளிக்கும் எங்கள் நேசா
ஐயா உனது முகம் பார்த்தா
நெஞ்சில் மலருதய்யா ரோசா (பம்பா)

அல்லும் பகலும் உன்னத் தானே
ஐயா தொழுது நின்றோம் நாமே
மெய்யே உனதடிமை சாமி
ஐயம் எனக்கு இல்லை சாமி (பம்பா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தனத்தான் பாடுங்க

தந்தனத்தான் பாடுங்க தாளம் போட்டு ஆடுங்க
சபரிமலைக்கு வாருங்க சன்னிதியை பாருங்க
(தந்தனத்தான்)

எருமேலிக்கு வாருங்க பேட்டை துள்ளி ஆடுங்க
சாமி திந்தகதோம் தோம் ஐயப்பதிந்தக்க தோம் தோம்
வாவரையும் கேளுங்க வந்திடுவார் துணைக்குங்க
(தந்தனத்தான்)

அழுத மலையில் ஏறுங்க ஆனந்தமாய் இறங்குங்க
கரிமலையை கடந்து பம்பா நதிக்கரைக்கு வாருங்க
பாவம் தீர குளியுங்க தாகம் தீர குடியுங்க
மூப்பு, நோய் பிணியாவும் நொடிப் பொழுதில் மறையுங்க
ஊமைகளும் பேசுங்க ஊழ்வினையும் கலையுங்க
உத்திரத்தில் உதித்த அந்த உத்தமனை பாடுங்க
(தந்தனத்தான்)

---

## இறைவனை கும்பத்தில் பூஜிப்பது ஏன்?

இறைவன் நின்று அருள்பாலிக்கும் இடங்களில் கும்பமும் ஒன்றாகும். பிரதிட்டை, மஹோற்ஸவம், உருத்திரம், ஸ்நபனம், மற்ற சுப காரியங்களிலும், கும்பத்தில் சிவபெருமானை மந்திரம், கிரியை பாவனைகளினால் எழுந்தருளச் செய்து வழிபடலும் ஒரு வகை.

முதல் ஒன்றைப் பிண்டம்(உடம்பு) ஆகக் கொண்டு பின்காட்டப்படுவது போற் செய்து பூசித்து வழிபடுவர். அதன் விபரங்களை பின்வருமாறு காண்க.

கும்ப வஸ்திரம் - தோல்
சிவந்த நிறம் ஏறப்பூசிய மண் - இரத்தம்
கும்பமாக்கப்பட்ட பொருள் (மண்) - மாமிசம்
கும்பத்தில் நிறைக்கப்பட்ட சலம் - மேதை (நிணம்)
கூர்ச்சம் (தருப்பை) - குடுமி (எலும்பு)
சுற்றப்பட்ட நூல் - எழுபத்தீராயிரம் நரம்பு
உள்ளே இடப்பட்ட இரத்தினம், பொன், புட்பம் ஆகியன- வீரியம்
செபிக்கப்பட்ட மந்திரம் - உயிர் (பிராணன்)
ஆசனம் - நெல், அரிசி, எள்ளு, பயறு, உழுந்து, துவரை, கோதுமை
தேங்காய் - தலை
மாவிலை - மயிர்(சடை) எனவும் பொருள்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியல

ஐயப்பா உன்ன நான் மறக்க முடியல
மறந்தாலும் என்னால் இருக்க முடியல

வாபர் சாமி உன்ன நான் மறக்க முடியல
மறந்தாலும் என்னால் இருக்க முடியல

எரிமேலி பேட்டைத் துள்ளல் மறக்க முடியல
மறந்தாலும் என்னால் இருக்க முடியல

அழுதா நதி கல்லெடுத்தேன் மறக்க முடியல
மறந்தாலும் என்னால் இருக்க முடியல

கன்னிமூல கணபதியை மறக்க முடியல
மறந்தாலும் என்னால் இருக்க முடியல

கறுப்புசாமி உன்ன நான் மறக்க முடியல
மறந்தாலும் என்னால் இருக்க முடியல

பொன்னு 18 படி தொட்டத மறக்க முடியல
மறந்தாலும் என்னால் இருக்க முடியல

சந்நிதான சாஸ்தாவ மறக்க முடியல
மறந்தாலும் என்னால் இருக்க முடியல

காந்தமலை ஜோதியை மறக்க முடியல
மறந்தாலும் என்னால் இருக்க முடியல

# சரணம் ஐயப்பா

சரணம் சரணம் ஐயப்பா
சபரிமலை சாஸ்தாவே ஜோதி நீயப்பா (சரணம்)

தந்தனத்தான் பாடும் மலை
சரண கோஷம் முழங்கும் மலை
சஞ்சலங்கள் தீர்க்கும் மலை
சாமி வாழும் சபரிமலை (சரணம்)

பம்பை நதி ஓடும் மலை
பம்பா வாசன் வாழும் மலை
பாவங்கள் போக்கு மலை
சாமி வாழும் சபரிமலை (சரணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னிசாமி நீ

கன்னிச்சாமி நீ கவனம் சாமி
கார்த்திகையில் மாலை போட்ட கன்னிச்சாமி
கடும் விரதம் இருக்க வேணும் கன்னிச்சாமி
மார்கழியில் கட்டும் தாங்கி கன்னிச்சாமி
மணிகண்டனை பார்க்கப் போறோம் கன்னிச்சாமி

அச்சங்கோவில் ஆண்டவனை கன்னிச்சாமி
அச்சமின்றி தரிசிப்பாய் கன்னிச்சாமி
ஆரியங்காவு ஈசனையே கன்னிச்சாமி
ஆனந்தமாய் தரிசிப்பாய் கன்னிச்சாமி

எரிமேலி நாதனையே கன்னிச்சாமி
ஏகாந்தமாய் தரிசிப்பாய் கன்னிச்சாமி
காளைகட்டி நாதனையே கன்னிச்சாமி
கண்குளிர தரிசிப்பாய் கன்னிச்சாமி

அழுதா நதியினிலே கன்னிச்சாமி
ஆனந்தமாய் நீராடு கன்னிச்சாமி
அழுதா ஏற்றத்திலே கன்னிச்சாமி
அழுதுகொண்டு ஏறுராயே கன்னிச்சாமி

கரிமலை ஏற்றத்திலே கன்னிச்சாமி
கண்ணீர் சிந்துராயே கன்னிச்சாமி
பம்பா நதியினிலே கன்னிச்சாமி
பாவங்களை போக்கிடுவாய் கன்னிச்சாமி

நீலிமலை ஏற்றத்திலே கன்னிச்சாமி
நிற்காமல் ஏறவேண்டும் கன்னிச்சாமி
சபரி பீடத்தையே கன்னிச்சாமி
சந்தோஷமாய் காணவேண்டும் கன்னிச்சாமி

சரங்குன்றி ஆலினிலே கன்னிச்சாமி
அம்பு சரம் இடவேண்டும் கன்னிச்சாமி
பதினெட்டாம் படிதனிலே கன்னிச்சாமி
பதறாமல் ஏறவேண்டும் கன்னிச்சாமி

கருப்பசாமியையே கன்னிச்சாமி
கலங்காமல் தரிசிப்பாய் கன்னிச்சாமி
காந்தமலை ஜோதியையே கன்னிச்சாமி
கண்குளிர தரிசிப்பாய் கன்னிச்சாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூலோகம் நந்தவனம்

ஒண்ணாம்படித் தோட்டத்திலே பூப்பறிக்கும் ஐயப்பா
பூப்பறிக்க நானும் வாரேன் சேர்த்துக் கொள்ளப்பா
பூமாலையை நான் சாத்திடவே ஏற்றுக்கொள்ளப்பா
(2தடவை)

பூலோகம் நந்தவனம் ஐயன் பவனி வரணும் நாளும்
அருளைத் தரணும் நாம் அதைப் பெறணும் (2தடவை)

கண்ணன் குழலின் ஜாலங்களேயாகும் வேணுகானம்
மணிகண்டன் அவன் லீலைகள் என் மனத்திரையில் ஆடும்
(2தடவை)

வாபருக்கு தோழனவன் அந்தச் சபரிமலை வாழும் பக்தர்களின்
துயர் துடைக்கும் மனிதநேசன் ஆளும் (ஒண்ணாம்படி)

தானத்திலே சிறந்தவையில் ஒன்று அன்னதானம் மன
நிம்மதியை நான் பெறவே உந்தன் சந்நிதானம்
(2தடவை)

வேண்டுகிறேன் தந்திடு நீ என்றுமே நிதானம்
வாழ்க்கையிலே என்றும் எனக்கு ஐயன்தான் பிரதானம்
(ஒண்ணாம்படி) (2தடவை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரணம் சரணம் சரணம் ஐயப்பா

சரணம் சரணம் சரணம் ஐயப்பா
சுவாமி சரணம் ஐயப்பா சரணம் ஐயப்பா

சரணம் சரணம் சரணம் ஐயப்பா
சுவாமி சரணம் ஐயப்பா சரணம் ஐயப்பா

காடு மலை கவலையில்லை
கல்லும் முள்ளும் பஞ்சு மெத்தை
பள்ளி கட்டு சபரிமலையிலே
பந்தளத்து வேந்தன் அருளிலே

சரணம் சரணம் சரணம் ஐயப்பா
சுவாமி சரணம் ஐயப்பா சரணம் ஐயப்பா

கார்த்திகையில் மாலையிட்டு
கடும் விரதம் தவமிருந்து
காத்திருந்த ஆவல் எல்லாம்
கண் எதிரே தீரும் ஐயா

பூத்திருந்த மலர் பொழிந்து பூசையிட்ட
நேசமெல்லாம் புண்ணியத்தின் பலனாக
புன்னகையில் அருளுதையா
ஐயா உன் பாதம் சேர
ஆனந்தமே மலருதய்யா

(காடு மலை கவலையில்லை)

சரணம் சரணம் சரணம் ஐயப்பா
சுவாமி சரணம் ஐயப்பா சரணம் ஐயப்பா

காடு மலை மேடெல்லாம்
காற்று வந்து கவிதை சொல்லும்

சந்தணத்து வாசமுடன்
சந்ததிக்கு வழி சொல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமுடி தலை மீது மணி முடியாய் ஒளி மின்னும்
இருமுடி தலை மீது மணி முடியாய் ஒளி மின்னும்
பதினெட்டுப் படியேற பாதம் எங்கே தரையைத் தொடும்
பரவசம் அலை பாய கண் எதிரே ஐயன் முகம்

காடும் மலை கவலை இல்லை
கல்லு முள்ளும் பஞ்சு மெத்தை
பள்ளி கட்டு சபரிமலையிலே
பந்தளத்து வேந்தன் அருளிலே

சரணம் சரணம் சரணம் ஐயப்பா
சுவாமி சரணம் ஐயப்பா சரணம் ஐயப்பா

அகிலத்தை ஆளும் அந்த
ஐயனுக்கு அபிஷேகம்
காணுகின்ற கண்களுக்குள்
கண்ணீரின் அபிஷேகம்

மங்களத்து மகராஜன் மகரஜோதி ஒளி தீபம்
மங்களத்து மகராஜன் மகரஜோதி ஒளி தீபம்

கற்பகத்து அருள் வேண்டி
கண்களெல்லாம் சரணமிடும்
இப்பிறவி எடுத்த பலன்
இனிதாக நிறைவேறும்

காடு மலை கவலை இல்லை
கல்லும் முள்ளும் பஞ்சு மெத்தை
பள்ளி கட்டு சபரிமலையிலே
பந்தளத்து வேந்தன் அருளிலே

சரணம் சரணம் சரணம் ஐயப்பா
சுவாமி சரணம் ஐயப்பா சரணம் ஐயப்பா (5 தரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிக்கூடம் சபரிமலை

பள்ளிக்கூடம் சபரிமலையிங்க
படிக்கும் பாடமெல்லாம் சரணகோஷங்க
சொல்லித் தந்தார் குருசாமிங்க
நாமும் சொல்லச் சொல்லக் கோடி நன்மைங்க
(பள்ளிக்கூடம்)

கார்த்திகையிலே மாலை போடுங்க
மார்கழி கடைசியிலே புறப்பட்டு வாங்க
ஊர்வலம் போல் ஏறும் கூட்டமுங்க
அன்பால் ஒன்றுபட்ட ஐயப்பன் மாருங்க
(பள்ளிக்கூடம்)

பம்பை கரையில் வந்த தெய்வங்க
அந்த பந்தளத்தில் வளர்ந்த சாமிங்க
நம்பி வந்தால் இன்பம் தானுங்க
இதுவே நல்லோர்கள் சொன்னச் சொல்லுங்க
(பள்ளிக்கூடம்)

நீண்டு வரும் காடு மலையிங்க
எங்கும் நிறைந்து வரும் சாமிமாருங்க
பொன்னான ஜோதி பாருங்க
நாம கண் படைச்ச பயன் அதுதாங்க
(பள்ளிக்கூடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்து ரக்ஷிக்கணும்

காத்து ரக்ஷிக்கணும் கன்னிமார்களே
கன்னி மூல கணபதியே - நீ
பார்த்து ரக்ஷிக்கணும் பரிவு காட்டணும்
கன்னி மூல கணபதியே
காத்து ரக்ஷிக்கணும் கருணைகாட்டணும்
பொன்னு பகவதியே அம்மா பொன்னு பகவதியே
பார்த்து ரக்ஷிக்கணும் பரிவு காட்டணும்
பொன்னு பகவதியே அம்மா பொன்னு பகவதியே
மாளிகை புறத்து மஞ்சம்மா
மாணிக்க பாதம் தஞ்சம் அம்மா
நெய்மணக்குது மெய்சிலிர்க்குது சபரிமலையிலே
அய்யனே உந்தன் அழகைக் கண்டால்
பக்தி பிறக்குது உள்ளத்திலே ஞானசக்தி பிறக்குது
உள்ளத்திலே நெய்யபிஷேகம் செய்யும் போது
மெய் சிலிர்க்குது மலையிலே
தையினிலே உந்தன் ஸந்நதி காண
உள்ளத்தில் ஆவல் பொங்கிடுதே
சத்தியமான பொன்னு பதினெட்டு படிபகவானே
ஸ்வாமி பொன்னு பகவானே அய்யா பொன்னு பகவானே
ஷண்முகன் தம்பியே உந்தன் தரிசனம் கிடைக்க வேணுமே
ஸ்வாமியே சரணம் ஐயப்பா
என்று சொல்லி நாங்கள் வந்தோமே
சங்கர மோகினி பாலனே உந்தன்
தரிசனம் தனைக்காண தயைபுரிவாய் தேவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திம்தகத்தோம்

திம் தகத்தோம் திம்தகத்தோம் ஐயப்பா
தெய்வத்திலே நீ ஒருவன் மெய்யப்பா
தேடினோம் கூடினோம் கருணை செய்யப்பா
தினம் உன்னை நாடினோம் சாமி ஐயப்பா

மார்கழியில் நாங்களெள்ளம் பேட்டை துள்ளுவோம்
மலைமீது ஏறி வந்து உன்னைப்பாடுவோம்
வரிசையுடன் பம்பைநதி நீரில் ஆடுவோம்
வாவரெனும் துணைவனையும் வணங்கக் கூடுவோம்

மனதில் எமக்கு இடம் கொடுத்து உதவி செய்யப்பா
மகர ஜொாதி காண வேண்டும் சாமி ஐயப்பா
சாமி திம் தகத்தோம்
ஐயப்பா திம் தகத்தோம்
சாமியே ஐயப்பா
ஐயப்பா சாமியே

கடலும் வானும் உன்னாலே காற்றும் மழையும் உன்னாலே
உடலின் உறுதி உன்னாலே உள்ளம் செழிப்பது உன்னாலே
கன்னி புரத்து மாதேவி காவலிருப்பது உன்னாலே
கார்த்திகை மாதம் வந்தாலே ஐயப்ப பக்தர்கள் உன்னோடு

வாக்கும் வலிமையும் நீயப்பா வாழ்வைத் தருவாய் ஐயப்பா
வீரமும் செல்வமும் நீயப்பா வெற்றியைத் தருவாய் ஐயப்பா
சாமி திம் தகத்தோம் - தோம்
ஐயப்பா திம் தகத்தோம்
சாமியே ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்ப நாமம் சொல்லு

கருப்பனும் முன்னே வர கடுத்த சாமி பின்னே வர
வாபருழ் கூட வந்தோமய்யா சபரிமலை
ஐயப்பா நாமம் சொல்லு நல்ல சரண கோஷம் போடு
சந்தனக் காட்டினிலே புலிகள் எல்லாம் வழி கொடுக்க
கரிமுகன் துணைக்கு வர வந்தோம் ஐயா சபரிமலை
ஐயப்பா நாமம் சொல்லு நல்ல சரண கோஷம் போடு
நீலகண்டன் துணை புரிய நீலிமலை ஏறிவா
நாகராஜா அருள்புரிய வந்தோம் ஐயா சபரிமைலை
ஐயப்பா நாமம் சொல்லு நல்ல சரண கோஷம் போடு
சரங்குத்தி ஆவினிலே சரத்தை போட்டு வணங்கிவர
மஞ்சமாதா வரம் அருள வந்தோம் ஐயா சபரிமலை
ஐயப்பா நாமம் சொல்லு நல்ல சரண கோஷம் போடு

# கருப்பன் வாரான்

கருப்பன் வாரான் கருப்பன் வாரான் கறுப்பசாமி
அவன் கார் மேகம் போல வாரான் கறுப்பசாமி
முக்கொண்டைக்காரன் வாரான் கறுப்பசாமி
அவன் முன்கோபக்காரன் வாரான் கறுப்பசாமி
பம்பை நதி காவல்காரன் வாரான் கறுப்பசாமி
அந்த பதினெட்டு படிகாவல் கறுப்பசாமி
சந்தனப் பொட்டுக்காரன் கறுப்பசாமி
அந்த சபரிமலை காவல்காரன் கறுப்பசாமி
கச்சையைக் கட்டிவாரான் கறுப்பசாமி
அவன் கை அருவாள் கொண்டுவாரான் கறுப்பசாமி
வில்லு பாட்டு பாடிவாரான் கறுப்பசாமி
அவன் விதவிதமாய் ஆடிவாரான் கறுப்பசாமி
மீசையை முறுக்கி வாரான் கறுப்பசாமி
அவன் முச்சந்தியில் ஆடிவாரான் கறுப்பசாமி
பந்தம் கையில் பிடித்துவாரான் கறுப்பசாமி
அவன் பரிவேட்டையாடிவாரான் கறுப்பசாமி
முந்தியில் உருமாறும் கறுப்பசாமி
அவன் முகத்தழகை காட்டிவாரான் கறுப்பசாமி
சந்தணத்தை பூசிவாரான் கறுப்பசாமி
அவன் சரண கோஷம் போட்டுவாரான் கறுப்பசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினெட்டாம் படிப்பாடல்

ஒன்றாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

இரண்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

மூன்றாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

நான்காம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

ஐந்தாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

ஆறாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பன்
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

ஏழாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

ஒன்பதாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

பத்தாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

பதினொராம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

பன்னிரெண்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

பதிமூன்றாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

பதிநான்காம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினைந்தாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

பதினாறாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

பதினேழாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

பதினெட்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

சத்தியத் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

படி தொட்டு வந்தனம் சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

ஓம் சத்தியமான பொண்ணு பதினெட்டு
படிகளே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸாஸ்தா ஆராத்தி தீபமங்களம்

01. தீப மங்களா ஜோதி நமோ நமோ
தூய மங்கள லீலா நமோ நமோ
தேவகுஞ்சரி பாலா நமோ நமோ - அருள்தாராய்

02. ஆர்யவம்ஷ சுஜாதா நமோ நமோ
வீரய திவ்ய விலாசா நமோ நமோ
ஸாஸ்வ தாள்குரு தேவா நமோ நமோ - பஹுகோடி

03. பூதவந்திதா தேவா நமோ நமோ
பீதி நாளன ரூபா நமோ நமோ
மோஹனாம்புஜ பாதா நமோ நமோ - மணிகண்டா

04. ராஜசோள வீரா நமோ நமோ
வாஜவாசன வாஹா நமோ நமோ
தீத நிருத்ய வினோதா நமோ நமோ - வீராதி வீர

05. கோர ராம வினாஷா நமோ நமோ
வார நூபுரதாரி நமோ நமோ
ஜ்ஜோதி சாந்சிதிபடா நமோ நமோ - ஜயசீலா

06. த்யதன மங்கள ரூபா நமோ நமோ
தான சுந்தர சவாசா நமோ நமோ
வாச வாள் சதர தேவா நமோ நமோ - நிர்லா தாஸா

07. காந்த ஸ்துங்க நிவாஸா நமோ நமோ
காந்தியக தேவா நமோ நமோ
தேவவந்ய கிரீசா நமோ நமோ - பரதேவா

08. மூலமந்த சொரூபா நமோ நமோ
யத்ஹமூவா நமோ நமோ
புத்ரதாயக தேவா நமோ நமோ - வர பாலா

09. கேசவ சூனோ நமோ நமோ
பாஷஜன்ம வினாஸா நமோ நமோ
ஆர்த்தி நாஸனமூர்த்தே நமோ நமோ - திவ்யரூபா

சுவாமி சரணம் சரணம் பொன்னையப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம்

சபரிமலை தன்னில் வாழும் சாஸ்தாவுக்கு மங்களம்
தவ முனிவர் போற்றும் அந்த சந்நிதிக்கு மங்களம்
இபமுகவன் முருகனுக்கு இளையவனுக்கு மங்களம்
இன்பமெல்லாம் தந்தருளும் இறைவனுக்கு மங்களம்
புலிமிசையே பவனி வரும் புனிதனுக்கு மங்களம்
புவிமயங்கும் மோகினியாள் புதல்வனுக்கு மங்களம்
அன்புடனே அருள் புரியும் ஐயப்பனுக்கு மங்களம்
அழகே உருவான எங்கள் மெய்யனுக்கு மங்களம்
வெற்றி தரும் வில்லெடுத்த எங்கள் வேந்தனுக்கு மங்களம்
வித்தகனாம் வீரமணி கண்டனுக்கு மங்களம்
பம்பைநதி சேருகின்ற பக்தருக்கு மங்களம்
பந்தளன் பெயர் பாடுகின்ற அனைவருக்கும் மங்களம்

# ஆரார்த்தி மங்களம்

மணிகண்ட வாசனுக்கும் மாலையேறும் தாசருக்கு
மாளிகை புறத்து மஞ்சமாதா தேவியருக்கும்
பந்த ளத்தை ஆண்டு வந்த பார் போற்றும் மன்னனுக்கும்
மணிகண்ட கோபால கிருஷ்ணருக்கும், ஜெய மங்களம்
நித்திய சுப மங்களம் மங்களம் ஜெய மங்களம்

# மன்னிப்பு

அறிந்தும் அறியாமலும் தெரிந்தும் தெரியாமலும் செய்த சகல குற்றங்களையும் பொறுத்து காத்து ரக்ஷிக்க வேணும் ஓம் ஹரிஹர சுதன் ஆனந்த சித்தன் ஐயன் ஐயப்ப சுவாமியே சரணம் ஐயப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹரிவ ராஸனம்
## சுவாமியே சரணம் ஐயப்பா

சரணமய்யப்பா சுவாமி சரணமய்யப்பா
சரணமய்யப்பா சுவாமி சரணமய்யப்பா

ஹரிவ ராஸனம் ஸ்வாமி விஸ்வமோஹனம்
ஹரிததீஸ்வரா ஸ்வாமி ராத்யபாதுதம்
அரிவிமர்த்தனம் ஸ்வாமி நித்யநர்த்தனம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

சரணகீர்த்தனம் ஸ்வாமி சக்தமானசம்
பரணலோலுபம் ஸ்வாமி நர்த்தனாலயம்
அருணபாஸுரம் ஸ்வாமி பூதநாயகம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

ப்ரணயஸத்யகா ஸ்வாமி ப்ராணநாயகம்
ப்ரணதகல்பம் ஸ்வாமி ஸுப்ரபாஞ்சிதம்
ப்ரணவமந்திரம் ஸ்வாமி கீர்த்தனப் பிரியம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

துரவவாஹனம் ஸ்வாமி ஸுந்தரானனம்
வரகதாயுதம் ஸ்வாமி வேதவர்ணிதம்
குருக்குபாகரம் ஸ்வாமி கீர்த்தனப்பிரியம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

த்ரிபுவனார்ச்சிதம் ஸ்வாமி தேவதாத்மகம்
த்ரிணயணம்பிரபும் ஸ்வாமி திவ்யதேனகம்
த்ரித பூஜிதம் ஸ்வாமி சிந்தி தப்பிரதம்
ஹரி ஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

பவபயாவஹம் ஸ்வாமி பாபுகாவுகம்
புவன மோஹனம் ஸ்வாமி பூதிபூஷணம்
தவள வாரணம் ஸ்வாமி திவ்யவாரணம்
ஹரி ஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

களமிருதுஸ்மிதம் ஸ்வாமி சுந்தரானனம்
களப கோமளம் ஸ்வாமி காத்ர மோஹனம்
களப கேசரி ஸ்வாமி வாஜி வாஹனம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாச்சரேய

ச்ரிதஜனப்பிரியம் ஸ்வாமி சிந்திதப்ரதம்
சுருதி விபூசணம் ஸ்வாமி ஸாது ஜீவனம்
சுருதி மனோகரம் ஸ்வாமி கீதவாசகம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாச்ரயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிநடைச் சரணம்

| | |
|---|---|
| சாமியே | ஐயப்போ |
| ஐயப்போ | சாமியே |
| சாமிசரணம் | ஐயப்பசரணம் |
| ஐயப்பசரணம் | சாமிசரணம் |
| பள்ளிக்கட்டு | சபரிமலைக்கு |
| சபரிமலைக்கு | பள்ளிக்கட்டு |
| கல்லும் முள்ளும் | காலுக்கு மெத்தை |
| காலுக்கு மெத்தை | கல்லும் முள்ளும் |
| குன்றும் குழியும் | கண்ணுக்கு வெளிச்சம் |
| கண்ணுக்கு வெளிச்சம் | குன்றும் குழியும் |
| ஏத்திவிடப்பா | தூக்கிவிடப்பா |
| தூக்கிவிடப்பா | ஏத்திவிடப்பா |
| சாமியே | ஐயப்போ |
| ஐயப்போ | சாமியே |
| வில்லாளிவீரனே | வீரமணிகண்டனே |
| வீரமணிகண்டனே | வில்லாளிகண்டனே |
| ராஜாதிராஜனே | ராஜகுமாரனே |
| ராஜகுமாரனே | ராஜாதிராஜனே |
| பூலோகநாதனே | பூமிப்பிரபஞ்சனே |
| பூமிப்பிரபஞ்சனே | பூலோகநாதனே |
| யாரைக்காண | சாமியைக் காண |
| சாமியைக்கண்டால் | மோட்சம் கிட்டும் |
| தேவனே | தேவியே |
| தேவியே | தேவனே |
| தேவன் பாதம் | தேவி பாதம் |
| தேவன் சரணம் | தேவிசரணம் |
| பகவானே | பகவதியே |
| பகவதியே | பகவானே |
| பகவான் சரணம் | பகவதிசரணம் |
| பகவதி சரணம் | பகவான் சரணம் |
| ஈஸ்வரனே | ஈஸ்வரியே |
| ஈஸ்வரியே | ஈஸ்வரனே |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஈஸ்வரன் பாதம் | ஈஸ்வரிபாதம் |
| சாமியே | ஐயப்போ |
| ஐயப்போ | சாமியே |
| வாறார் | ஐயாவாறாரு |
| வாபரோடு | வாறாரு |
| வாறார் | ஐயாவாறாரு |
| பேட்டைத் | துள்ளி வாறாரு |
| சுவாமியே | ஐயப்போ |
| ஐயப்போ | சுவாமியே |
| நெய்அபிஷேகம் | சாமிக்கே |
| சாமிக்கே | நெய்அபிஷேகம் |
| பால் அபிஷேகம் | சாமிக்கே |
| சாமிக்கே | பால் அபிஷேகம் |
| தேன் அபிஷேகம் | சாமிக்கே |
| சாமிக்கே | தேன் அபிஷேகம் |
| கற்பூரதீபம் | சாமிக்கே |
| சாமிக்கே | கற்பூரதீபம் |
| மணிகண்டா | ஐயப்பா |
| மாமலை வாசா | ஐயப்பா |
| மோகினிசுதனே | ஐயப்பா |
| மோகனரூபா | ஐயப்பா |
| ஹரிஹரபுத்ரா | ஐயப்பா |
| எங்களைக்காப்பாய் | ஐயப்பா |
| முன்னும் பின்னும் | ஐயப்பா |
| பின்னும் முன்னும் | ஐயப்பா |
| இடமும் வலமும் | ஐயப்பா |
| வலமும் இடமும் | ஐயப்பா |
| ரக்ஷிகணும் | ஐயப்பா |
| காடுமலை கடினம் | ஐயப்பா |
| கடினம் கடினம் | ஐயப்பா |
| பம்பையின் பாலா | ஐயப்பா |
| பந்தள வேந்தா | ஐயப்பா |
| பாவவிநாசா | ஐயப்பா |
| ஜகத் ரக்ஷகா | ஐயப்பா |
| சாமியே | ஐயப்பா |
| ஐயப்பா | சாமியே |
| சாமியே சரணம் | ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோண்டாவில் சபரீச ஐயப்பன் கீர்த்தனைகள்

இராகம் : அமிர்தவர்ஷனி          தாளம் : ஆதி

### *பல்லவி*

மணிநாதம் கேட்குதடி - சபரீச
மணிகண்டனின் கோண்டாவில்
மன்னிடும் ஐயப்பன் கோவில்

### *அனுபல்லவி*

அணியான பதினெட்டு படியேறி பக்தியுடன்
கனியான ஐயப்பன் கழல்பாடும் பக்தர் மன

### *சரணம்*

இருமுடியேந்தியே இதய சுத்தியுடனே
பெருமானாம் ஐயப்பன் பெரும் புகழ் பாடியே
வருவாரை வரவேற்று வா வா என்றே அழைக்கும்
சபரீச ஐயப்பன் சந்ததம் வாழும் கோயில்

நெய்க்குடமேந்தியே நைந்துநைந்தே உருகி
மெய்வாய் மனசுத்தி மேவிட வலம் வந்தே
ஐயப்பன் அம்புஜ அடிகளைத் துதித்திடும்
மெய்யடியார்களின் மேலாம் இதயக் கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னிமூல கணபதிக்கு வந்தனம்

**இராகம் : காபி** **தாளம் : ஆதி**

### *பல்லவி*

கன்னிமூல கணபதிக்கு வந்தனம்
கன்னல் சபரீசனாம் ஐயப்பனுக்கும் வந்தனம்

### *அனுபல்லவி*

அன்னதானப் பிரியன் அகிலம் போற்றும் பந்தளன்
நன்னகர் கோண்டாவில் நாடி வந்துறைபவன்

### *சரணம்*

கற்பூரப் பிரியனவன் காந்தம் நிறைந்த கண்ணன்
அற்புத நர்த்தனனின் அருமைச் சகோதரன்
சர்ப்ப யோக வடம் பூணும் சபரீச ஐயப்பன்
நற்கதி தானருள்வான் நாடிப் புகழ் பாடிடுவோம்

சாந்தி தருவான் எங்கள் சபரீச ஐயப்பன்
மாந்தர் மனத்தில் என்றும் மகிழ்ந்தே உறைபவன்
வேந்தன் மணிகண்டன் விளங்கு கோண்டாவில் வாசன்
ஏந்தல் குலதெய்வம் ஏகாந்த ஐயப்பன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகரஜோதி வந்தான்

இராகம் : தேஷ் தாளம் : ஆதி

*பல்லவி*

மகரஜோதி வந்தான் - அவன்
இகமதில் புலிமீதில் இவர்ந்து அருள் தந்தான்

அனுபல்லவி

அகமதில் ஒளி ஏற்றி வைத்தான் - ஐயப்பன்
அமைதியும் சாந்தமும் அள்ளி அருளாய்த் தந்தான்

சரணம்

நாதஸ்வர கானம் நாளும் சுவைப்பான்
நளினத் துளசிமாலை நயமுடன் அணிபவன்
வேத மந்திரப் பிரியன் விளங்கும் மணிகண்டன்
பூதலத்தில் கோண்டாவில் புனித தலத்தில் எழில்

பதினெட்டுப் படியேறி பகவான் சந்நிதியிலே
அதிபக்தியுடன் நாமே அரிஹரசுதனையே
கதியெனப் பாடுவோம் கழலடி அருள்வானே
பதிகோண்டாவில் வளரும் பரம தயாநிதி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிகண்டன் வந்தான்

**இராகம் : பீம்பிளாஸ்** **தாளம் : ஆதி**

*பல்லவி*

மகிஷியை வதம் செய்த மணிகண்டனே - உந்தன்
மலரடிகள் துணையே மகரஜோதி நீயே!

*அனுபல்லவி*

அகிலம் நடு நடுங்க அரக்கர் குல மகிஷி
புகலவொணாக் கொடுமை புரிந்திடக் கோபங்கொண்டு

*சரணம்*

புலி வாகனத்திலேறி புலிப்பாலும் கொண்டு வந்து
கிலிகொள்ள அன்னைக்கே கொடுத்தனை ஐயப்பா
மலியும் கனிகுரங்கும் மன்பதி கோண்டாவில்
தனில் உறை சபரீசா தாமரைப்பதம் தாராய்

தெய்வமும் நீயன்றோ திருப்பம்பை வாசனே
உய்யும் வழிகாட்டி உயர்வாழ்வும் தந்தனை
நெய் விருப்புடைவன் நீயல்லவோ ஐயப்பா
செய்திடுவாய் அருள் சபரீச ஜோதியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகை மாதம் கருவேட்டி கட்டி

இராகம் : நாதநாமக்ரிய தாளம் : ஆதி

*பல்லவி*

கார்த்திகை திருமாதம் கருவேட்டி கட்டிக்கொண்டு
கழுத்தில் துளசிமாலை கனத்திட வந்தோமே

*அனுபல்லவி*

ஆர்த்திட சரணம் ஐயப்ப ஸ்வாமி
ஆனந்தக் கூத்தாடி அடியர் வந்தோமே!

*சரணம்*

பதினெட்டுப் படிகள் பாடியே ஏறி
பக்தர் நாம் வந்தோம் பார்த்திடுவாய் சாஸ்தா
கதியே உன் கழலடி சரணம் பொன்னையப்பா
கலியுக வரதனே காத்திடு ஐயப்பா!

மங்களமூர்த்தியே மணிகண்டப் பெருமானே
எங்கணும் இன்பமே இறைஞ்சிடும் சாஸ்தாவே
பங்கஜப் பாதமே பாரில் கதியெனவே
துஸ்கப் பதமே நாங்கள் துணை என நம்பினோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணிச் சுவாதியிலே

**இராகம் : பாகேஸ்ரீ** **தாளம் : ஆதி**

***பல்லவி***

ஆவணிவளர்ப் பஞ்சமியில் அழகுச் சுவாதியிலே
கோவில் கொண்டான் சபரீசன் கோண்டாவில்
- திருத்தலத்தில்

***அனுபல்லவி***

மேவும் சமாதானம் மேலான சாந்தியும்
பூவில் நிலைநிறுத்த புலி வாகனச் சாஸ்தா

***சரணம்***

எங்கும் கோலாகலம் எழில் மேவும் சீலமும்
தங்கிட அருள் தந்தான் தாயின் நோய் தீர்த்தவன்
பொங்கிடும் ஆனந்தம் பொலிந்திட ஐயப்பன்
பங்கஜச் சேவடி பாலித்திடுவான் பக்தளன்

அன்பொடு ஆற்றலும் அழகுறு சுபீக்ஷமும்
இன்புறவே தந்தான் இனியநெய் அபிஷேகன்
துன்பதுயர் நீக்கினான் திருவருளும் புரிந்தான்
அன்பரின் உள்ளக் கோயில் அமர்ந்தான் ஐயப்ப ஜோதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரமணி கண்டா

இராகம் : திலங் தாளம் : ஆதி

### பல்லவி

உன்னருளை நினைத்தால் உருகுதையா - உள்ளம்
அன்ன வடிவழகா வீரமணி கண்டா!

### அனுபல்லவி

பொன்னையனே சரணம் பூம்பதம் தாருமையா
என்னையனே சரணம் சாமியே ஐயப்பா!

### சரணம்

சரணம் சரணம் என்றே சந்ததமும் கதறினேன்
வரமருளி இன்ப வாழ்வருளும் சபரீசா
உரல் குழித் தீர்த்தமே உத்தமனே சத்தியனே!
கரச்சின்முத் திரையோனே கழலடி அருளாயோ!

சற்குரு நாதனே சரணம் பொன்னையனே
அற்புத நர்த்தன ஆனைமுகன் சோதரனே
பொற்புது பதம் வேண்டி பூம்பதம் நாடி வந்தேன்
நற்பதி கோண்டாவில் நயந்து உறைபவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபஜோதி

**இராகம் : பெஹாக்** **தாளம் : ஆதி**

### *பல்லவி*

தீபஜோதித் திருவொளியே - சரணம்
ஆபத்பாந்தவனே ஐய்யப்பா சபரீசா!

### *அனுபல்லவி*

தேவ தேவனே சாஸ்தா திருவடி அருளாயோ?
மூவர் போற்றும் மூர்த்தியே முண்டகப் பதம் அருள்வாய்!

### *சரணம்*

யோகவடம் பூணுவாய் யோக தண்டம் ஏந்துவாய்
நாகவடம் பூணுவாய் நறும் நெய்வாசம் மாந்துவாய்
ஏக நாயகா ஸாஸ்தா என்னைக் கண்பார் தருள்வாய்
தாகப் புலிப்பாலெடுத்து தாய்க்குத் தந்த வீரனே

காண்பாருள்ளம் இனித்திடும் கருப்பண்ண சாமியே
பூண்பாரத் துளசி மாலை பூணும் புலி வாகனா
கோண்டாவில் பதியுறையும் கலியுக வரதனே
மாண்பான பதினெட்டு மன்னுபடிக் கோவில் கொண்டாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழைப் பங்காளன்

**இராகம் : அமிர்தவர்ஷனி** **தாளம் : ஆதி**

### *பல்லவி*

ஏழை பங்காளனே ஏகாந்த மூர்த்தியே
வேளை இதுதானையா வேதனை தீர்த்திடுவாய்

### *அனுபல்லவி*

மேழி கல்விகலை மேதினியில் கொழிக்கும்
ஏழிசைக் கோண்டாவில் எழிற்பதி வாழ்பவனே

### *சரணம்*

உன்னையல்லால் எனக்கு உறுதுணை உண்டோ தேவா
பொன்னையனே எனக்குப் பூம்பதம் அருளாயோ
வள்ளப் புலியேறும் வீரமணி கண்டனே
இன்னமும் தாமதம் ஏன் ஏழைக்கிரங்காயோ?

நித்யபிரம்மச்சாரியே நெய்யபிஷேகனே
சத்திய விரதனே சந்ததம் உனைப்பணிந்தேன்
வித்தகனே யோக வடம் பூணும் பொன்னையா
உத்தமனே சரணம் உவந்தருள் புரியாயோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருமுடிப் பிரியன்

**இராகம் : பிருந்தாவன சாரங்கா தாளம் : ஆதி**

### *பல்லவி*

இருமுடிப் பிரியனே குருவின் குருவே துணை
திருவடிதாராயோ தர்மஸாஸ்தா நீயே!

### *அனுபல்லவி*

கருப்பண்ண ஸ்வாமியே கலியுக வரதனே
பெரும்பதி கோண்டாவில் புரக்கோயில் கொண்டவனே

### *சரணம்*

துளசி மணி மார்பனே தூய உள்ளம் அளிப்பவனே
இளகு மனம் அருளும் இருமுடிப் பிரியனே
அளவிலா அருளுடை ஐயப்பா சபரீசா
ஊமதிலே இன்பம் உவந்து உரைபவனே

அலங்காரப் பிரியனே ஐயப்ப சபரீசா
பலஸ்கொண்ட புலிகளின் பாலைக் கறந்தவனே
வலம் வந்து நின்கோயில் வாசலிலே தொழுதேன்
கலஸ்திடா வண்ணம் என்னைக் காத்திடும் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோகன வண்ணனே

**இராகம் : மோகனம்** **தாளம் : ஆதி**

### *பல்லவி*

மோஹன வண்ணனே மணிகண்டா - எந்தன்
தாஹத்தைத் தீர்த்திடும் சபரீச ஐயப்பா

### *அநுபல்லவி*

நாக வடயோகம் நல்லிடையில் பூண்பவனே
ஏக நாயகனே துணை ஏந்தலே ஐயப்பா

### *சரணம்*

நின்னைச் சரணடைந்தேன் பொன்னையனே அருள்வாய்
கன்னிமூலை வாசனே காத்தருள்வாய் நீயே
பன்னக ஆபரண பந்தள பம்பை வாசா
மன்னவனே ஐயப்பா மலரடிகள் சரணம்

கருணைக் கடலே உந்தன் கழலடி நான் பிடித்தேன்
அருளையே அள்ளி அள்ளி அவனியில் தருபவனே
திருவிளங்கும் கோண்டாவில் திகழும் சபரீசா
திருவடி தருவாயோ தீன தயாபரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம் பாடிடுவோம்

இராகம் : சுருட்டி தாளம் : ஆதி

### பல்லவி

மங்களம் பாடிடுவோம் - எங்கள்
மங்கள ரூபனுக்குமகரஜோதியர்க்கு

### அனுபல்லவி

பங்கஜப் பதத்தாருக்கு பந்தள வாசருக்கு
துங்க மணித் துளசி மாலையணி பவர்க்கு

### சரணம்

சங்கடம் நீக்கிடும் சாஸ்தா ஐயப்பர்க்கு
பொங்கரா வடமணி பொன்னைய ஸ்வாமிக்கு
எங்களும் இன்பமே இறைஞ்சும் சபரீசர்க்கு
தங்கத் தமிழ் கோண்டாவில் தல ஐயப்ப ஸ்வாமிக்கு

ஆக்கம்
மஹாவித்துவான்
அமரர் : வீரமணிஐயர்
இணுவில்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சபரீச ஐயப்பன்
# திருவூஞ்சல்

### காப்பு

ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஸ்துதி
பொற்பதியாம் ஈழவள யாழ்ப்பாணத்தில்
பொலிந்திலங்கு கோண்டாவில் கிழக்கில் மேவும்
சிற்பரனாம் சபரீச ஐயப் பனும்
சோபனஞ்சேர் திருவூஞ்சல் வைகி ஆடச்
சொற்பதமாம் பாரதத்தைக் கொம்பொ டித்தே
சோபிதஞ்சேர் மலை மீதில் எழுதித் தந்த
அற்புதநர்த் தனவிநா யகரின் பாதம்
ஐயப்பன் ஊஞ்சற்பாக் காப்ப தாமே!

### நூல்

01. சுருதியெனும் நால்வேதம் கால்க ளாகச்
சிவாகமமே நடுவயிர விட்ட மாகக்
கருதரிய கலைஞானம் கயிற தாகக்
கவின் நிறைந்த ஓங்காரம் பலகை யாகத்
திருதிகழும் யோகமதே பீட மாகத்
திருவூஞ்சல் தனில்வைகி இனித மர்ந்தே
பெருதலமாம் கோண்டாவில் கிழக்கில் மேவும்
சபரீச ஐயப்பா! ஆடீர் ஊஞ்சல்.

02. பூமியிலே பக்தியெனும் கால்நி றுத்திப்
புலனைந்தைச் சேர்த்தொன்றாய் விட்டமாக்கி
காமிகமாம் நாற்கரண வடங்கள் மாட்டி
கவின் நிறைந்த திருவருளாம் பீடம் தேக்கி
தாமிதய சுத்தியுடன் முத்தி யூஞ்சல்
தண்ணினிய ஜீவாத்மா ஆட ருள்செய்
பூம கிழூர் கோண்டாவில் கிழக்கில் மேவும்
சபரீச ஐயப்பா! ஆடீர் ஊஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. சென்னியிலே நவரத்னக்கிரீட மாடச்
செவிகளிலே மகரகுண் டலங்க ளாடப்
பொன்னிதழிப் பதுமவடம் மார்பி லாடப்
பூமுகத்தில் புன்னகையும் அருளும் ஆட
வன்னவெழிற் கரத்தில் சின் முத்ரை ஆட
வடிவமைந்த யோகவடம் இடையி லாட
நன்னகராம் கோண்டாவில் கிழக்கில் மேவும்
சபரீச ஐயப்பா! ஆடீர் ஊஞ்சல்.

04. தேவியராம் பூரணைபுட் கலைய ராடத்
தேவரொடு நாரியரும் மகிழ்ந்தே ஆட
ஆவியெலாம் உருகுபக்தர் விழிநீ ராட
ஐயப்பன் கரயோக தண்டம் ஆட
நாவில்சப ரீசனது நாமம் ஆட
நளினகரச் சின்முத்ரை திகழ்ந்தே ஆட
பூவில்தலக் கோண்டாவில் கிழக்கில் மேவும்
சபரீச ஐயப்பா! ஆடீர் ஊஞ்சல்.

05. பதினெட்டுப் படிகளிலே ஜோதி ஆடப்
பம்பைநதி குதித்தோடும் அருவி ஆட
அதிமதுர ஐயப்பன் அடியார் ஆட
அழகொழுகு இருமுடியும் தோளில் ஆட
கதியருளும் ஐயப்பன் கருணை ஆடக்
கனத்திடும் யோகவடம் அரையி லாடப்
பதித்தலமாம் கோண்டாவில் கிழக்கில் மேவும்
சபரீச ஐயப்பா! ஆடீர் ஊஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. கற்பூர ஹாரதியின் ஜோதி ஆடக்
கருணையருள் பொழிஸாஸ்தா விழிக ளாடப்
பொற்பூரும் இதழ்களிலே முறுக லாடப்
பூரணையும் புட்கலையும் மருகி ஆட
விற்பூண்டு அம்பெடுத்துப் புலியி லேறி
வியந்திடவே புலிப்பாலைத் தந்த தேவா!
நற்புனிதக் கோண்டாவில் கிழக்கில் மேவும்
சபரீச ஐயப்பா! ஆடீர் ஊஞ்சல்.

07. திங்கள் சேர் வதனத்தில் செவ்வாய் பூக்குத்
திகழுமணி கண்டனவன் அன்பு தன்னால்
பங்கஜச் சேவடிகள் தந்தே எம்மைப்
பாலிக்க வியாளன் வடயோகம் பூண்டு
வெங்கனற்கண் வெள்ளிப்புலி ஆச னித்தே
விளங்குகோடி ஞாயிறுவின் தேசு ரூபா!
பொங்குதமிழ்க் கோண்டாவில் கிழக்கில் மேவும்
சபரீச ஐயப்பா! ஆடீர் ஊஞ்சல்.

08. அரியவனும் மோஹினியாய் அவத ரிக்க
அரனவனும் மோஹினியைக் கலந்து தெய்வச்
சரிநிகர்ச மானமான ஸாஸ்தா நின்னை
சந்தான மாக்கினரே மகிழ்வு பொங்க
அரியாச னராஜசே கரமன் னற்கே
அருங்குழகி யாகநின்னைத் தந்தா
புரியான கோண்டாவில் கிழக்கில் மேவும்
சபரீச ஐயப்பா! ஆடீர் ஊஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. மன்னவனாம் ராஜசே கரன்ம னைவி
மனம்வெகுண்டு தன்நோய்க்குப் புலிப்பால் வேண்ட
அன்னவளின் துயர்நீக்க வனத்தில் சென்று
ஆங்குகொடும் புலிமீது ஏறி வந்தே
கன்னலினும் இனிமைமிகும் புலிப்பால் தன்னைக்
கறந்துதன் அன்னைக்கே அளித்த தேவா!
நன்னகராம் கோண்டாவில் கிழக்கில் மேவும்
சபரீச ஐயப்பா! ஆடீர் ஊஞ்சல்.

10. செண்டேந்தும் கரத்தோனே ஆடீர்
சின்முத்ரா ஹஸ்தனே ஆடீர் ஊஞ்சல்
பண்டார்க்கும் மலரணிவோய் ஆடீர் ஊஞ்சல்
பளமெல்லாம் தருபவனே ஆடீர் ஊஞ்சல்
கண்டார்க்கு அருள்பவனே ஆடீர் ஊஞ்சல்
கருணைமணி கண்டனே ஆடீர் ஊஞ்சல்
கொண்டாடும் கோண்டாவில் கிழக்கில் மேவும்
சபரீச ஐயப்பா! ஆடீர் ஊஞ்சல்.

### *வாழி*

11. அந்தணரும் வானவரும் வாழி! வாழி!!
ஆவினமும் மாரிவளம் வாழி! வாழி!!
சுந்தரஞ்சேர் நல்லரசு வாழி! வாழி!!
சோபனஞ்சேர் மகரஜோதி வாழி! வாழி!!
செந்தமிழும் மங்கையரின் கற்பும் வாழி!
சாஸ்தாவின் திருவருளும் வாழி! வாழி!!
நந்தமிழூர் கோண்டாவில் வாழி! வாழி!!
சபரீஸ ஐயப்பன் நீடு வாழி!

"சுபம்"

ஆக்கம்
மஹாவித்துவான்
அமரர்: வீரமணி ஐயர்.
இணுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடத்தில் சபரீச ஐயப்ப தேவஸ்தானத்தில் நடைபெறுகின்ற விஷேட உற்சவங்கள்

| | | |
|---|---|---|
| சித்திரை | வருடப்பிறப்பு | அபிஷேகம் சுவாமிவலம் வருதல், அன்னதானம் |
| வைகாசி | மாதப்பிறப்பு | அபிஷேகம் சுவாமிவலம் வருதல், அன்னதானம் |
| ஆனி | மாதப்பிறப்பு | அபிஷேகம் சுவாமிவலம் வருதல், அன்னதானம் |
| ஆடி | மாதப்பிறப்பு | அபிஷேகம் சுவாமிவலம் வருதல், அன்னதானம் |
| ஆவணி | மாதப்பிறப்பு கும்பாபிஷேகதினம் | விஷேட அபிஷேகம் அன்னதானம், சுவாமி தெருவீதி வருதல் |
| புரட்டாதி | மாதப்பிறப்பு | விஷேட அபிஷேகம் அன்னதானம், சுவாமி தெருவீதி வருதல் |
| ஐப்பசி | மாதப்பிறப்பு | விஷேட அபிஷேகம் அன்னதானம், சுவாமி தெருவீதி வருதல் |
| | தீபாவளி பண்டிகை | விஷேட அபிஷேகம் அன்னதானம், சுவாமி தெருவீதி வருதல் |
| கார்த்திகை | மாதப்பிறப்பு ஐயப்பன் பூஜை விரத ஆரம்பம் | அபிஷேகம் பூஜை அன்னதானம் |
| மார்கழி | மாதப்பிறப்பு | அபிஷேகம்பூஜை, அன்னதானம் |
| தை | மாதப்பிறப்பு | அபிஷேகம்பூஜை, அன்னதானம் |
| | பொங்கல் | அபிஷேகம்பூஜை, அன்னதானம் |
| மாசி | மாதப்பிறப்பு | அபிஷேகம்பூஜை, அன்னதானம் |
| | சிவராத்திரி | அபிஷேகம்பூஜை, அன்னதானம் |
| பங்குனி | மாதப்பிறப்பு | அபிஷேகம்பூஜை, அன்னதானம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. கார்த்திகை 1ஆம் திகதி தொடக்கம் தைப்பொங்கல் திருநாள் வரை தொடர்ந்து 60 தினங்கள் அபிஷேகபூஜை, படிபூஜை, பஜனை என்பன நடைபெறும்.

02. பிரதி சனிக்கிழமைகளில் மாலை 5 மணிக்கு விஷேட பூஜை அபிஷேகம், பஜனை, படிபூஜை இடம்பெறும்.

03. இந்த 60 தினங்கள் போது இடையில் பத்து நாள்கள் கொடி ஏற்றி திருவிழா நடைபெறும்.

04. இந்த விரத காலத்தில் இன்னும் ஒரு விசேடமான உற்சவம் சபரிமலை போல் இங்கும் பின்வரும் சில பூஜை சனிக்கிழமை, புதன்கிழமைகளில் நடைபெறுகின்றது.

01. கருப்பன்சாமி பூஜை
02. கடுத்தசாமி பூஜை
03. நாகராஜா பூஜை
04. மலையாளப் பூஜை
05. பால் குட பவனி
06. சாமிகள் விளக்கு பூஜை
07. வில்வ அர்ச்சனை
08. கற்பூர ஆளி
09. பேட்டை துள்ளல்
10. மகிஷி சம்காரம் (வேட்டைத் திருவிழா)
11. மஞ்சமாதா பூஜை (விளக்கு பூஜை பெண்கள்)
12. புஸ்ப அலங்காரம்
13. நீராஞ்சனம், தேங்காய்பாதியில் நெய், எள்ளுபோட்டு எரிப்பது
14. கன்னிசாமி பூஜை, சாமிகளுக்கான பூஜை
15. மணிகண்ட சாமி பூஜை, சாமிகளுக்கு மணிபோடுதல்
16. குருசாமி பூஜை, குருவானவருக்கு பூஜை செய்வது
17. இருமுடி கட்டி 18 படி ஏறுதல் எமது ஆலயத்தில்
18. மகரஜோதி அன்று திருஆபரண பெட்டி எடுத்து வருதல்

## எமது இந்த ஆலயத்தில் நித்திய, நைமித்திய பூஜை காலவிபரம்

| காலை | மாலை |
|---|---|
| நேரம் 7.00 - 8.00 | 5.00 - 6.00 |

இரண்டு நேரமும் நடைபெற்று வருகிறது.
விஷேட காலத்தில் மூன்று நேரமும் நடைபெறும்.
(காலை, மதியம், மாலை)
விரத காலத்தில் நான்கு நேரம் நடைபெறும்.
(காலை, மதியம், மாலை, இரவு அர்த்தசாமப் பூஜை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது ஆலயத்தில் இருக்கின்ற சன்னிதானங்களும் சுவாமிகள் விக்கிரகங்களும்

## சன்னிதானங்கள்

| | |
|---|---|
| 01. கன்னிமூல கணபதி, விநாயகர் | (ஆலயம்) |
| 02. நாகராஜா பிரபு, பாம்பு | (ஆலயம்) |
| 03. ஐயப்பன் மூலமூர்த்தி, ஐயப்பன் | (ஆதிமுலம்) |
| 04. மஞ்சமாதா அம்பாள், அம்பாள் | (ஐயப்பனுக்குரிய அம்மன் ஆலயம்) |
| 05. ஆஞ்சநேயர், ஆஞ்சநேயர் | (ஆலயம்) |
| 06. கருப்பன் சாமி, கருப்பன் சாமி | (ஆலயம்) |
| 07. கடுத்தசாமி, | (ஆலயம்) |
| 08. வசந்த மண்டபம் | |
| 09. கொடிக்கம்பம் | |

## விக்கிரகங்கள்

| | |
|---|---|
| விநாயகர் | சிராய் |
| எழுந்தருளி | பஞ்சலோகம் |
| ஐயப்பன் | சிராய் |
| எழுந்தருளி | பஞ்சலோகம் |
| மஞ்சமாதா | சிராய் |
| எழுந்தருளி | பஞ்சலோகம் |
| நாகராஜா | சிராய் |
| ஆஞ்சநேயா | சிராய் |
| கருப்பன்சாமி | சிராய் |
| கடுத்தசாமி | சிராய் |
| கம்பம் | பித்தளை |
| 18 படிகள் கவர் | பஞ்சலோக தகடு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் திருக்கோவில் திறக்கப்படும் மாதங்கள்

01. எல்லா மலையாள மாதம் 1ம் திகதி முதல் 5ம் திகதி வரை
02. ஆவணி மாதம் திருவோணம் நாள்
03. ஐப்பசி மாத சித்திரை நாள்
04. கார்த்திகை மாதம் 1ம் திகதி முதல் மண்டலம் 41 நாட்கள்
05. மார்கழி மாதம் 25ம் திகதி முதல் 12 நாட்கள் அன்று மகர விளக்கு
06. பங்குனி உத்தரம்
07. சித்திரை விசு
08. வைகாசி அத்தம் நாள்
09. ஆடி மாத நிறை புத்திரி


- மேற்கண்ட நாட்களில் காலை 4.30 மணி முதல் 12.00 மணி வரை திறந்திருக்கும்.

"சுபம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாதஸ்வரமும், நாட்டியமும் ஆலயமும்



நாதஸ்வரம் என்பது வாயு தத்துவத்தைக் குறிப்பதாகும். ஒவ்வொரு ராகமும் அதுக்கேற்ற தாளமும் உண்டு. அத்துடன் அந்தந்த இடத்திற்கேற்றபடி நாட்டியமும் உண்டு. மேக ராகத்துடன் பிரம்ம தாளம் வாசிக்க வேண்டும். காந்தாரப் பண்ணுடன் சமதாளம் வாசிக்க வேண்டும். கொல்லிப் பண்ணுடன் பத்தாவணம் என்னும் தாளம், கௌசிகப் பண்ணுடன் பிருங்கிணி என்னும் தாளம், நாட்டை ராகத்துடன் மல்ல தாளம், சீகா மரம் என்ற பண்ணுடன் நவதாளம், தக்கேசி என்ற பண்ணுடன் பலி தாளம், தக்க ராகத்துடன் கோடி தாளம், சாலா பாணியுடன் டக்கரி வாசிக்க வேண்டும் என்று காமிகம் கூறுகிறது.

இன்னும் சுவாமி புறப்பாடு செய்யும் போது "மல்லாரி" வாசிக்கிறார்கள். "பல்லக்கு" வரும் போது ஆனந்த பைரவி வாசிக்கும் மரபு உண்டு. இதே போல் உற்ஸவத்திற்கு ஏற்ற ராகங்களும், தாளங்களும் உள்ளன.

காலத்தக்கேற்ற ராகங்களையும், ஆகமங்கள் கூறுகின்றன. பூர்வசந்தியில் காந்தாரத்தையும் பின்னர் க்ஷாடவம் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணையும், மத்யானத்தில் கௌசிகத்தையும், சாயங்காலத்தில் இந்தோளம் என்ற பண்ணையும் அர்த்த ஜாமத்தில் பஞ்சமம் என்ற பண்ணையும் பாட வேண்டும் என சுப்பிர பேதாகமம் என்னும் நூல் கூறுகிறது.

| காலம்: | இராகம்: |
|---|---|
| விடியற் காலம் | - பூபாளம், கௌரி, மந்தரி, தேவக்கிரியா, தேவ காந்தாரி, தன்யாசி. |
| முற்பகல் | - பிலகரி, மலகரி, முகாரி, பைரவம், குறிஞ்சி. |
| மத்தியானம் | - சாரங்கா, மத்யமாதி, ஸ்ரீ, நீலாம்பரி. |
| பிற்பகல் | - மோகனம், கல்யாணி, சங்கராபரணம், வசந்தா. |
| மாலை | - தோடி, பந்துவரளி, கிந்தோளம், சௌராட்சகம். |
| முன் இரவு | - காம்போதி, சவோரி. |
| மத்திய இரவு | - நாட, புன்னாகவராளி, ஆகிரி, அசாவேரி, கேதாரம். |
| பின் இரவு | - சுருட்டி, மஞ்சரி. |

என்ற வகையில் சுரநாதம் கோயிலில் இசையாக எழுதல் வேண்டும். இது விட்டு மனம்போன போக்கில் சுரநாதம் இசைத்தல் கிரியைத் தன்மையை பயனற்ற முயற்சியாக்கி விடும்.

பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக்குருக்கள்
பத்திரகாளிஅம்மன் தேவஸ்தானம்
ஆதீனகர்த்தா
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ச்சனைத் தட்டு எதற்காக?



கோயிலுக்கு அர்ச்சனைத் தட்டு கொண்டு போகும் போது நேரே அர்ச்சகர் வாங்குகிறார். கத்தியால் தேங்காயை உடைக்கிறார். உடைத்ததையும் பழம் முதலியவைகளையும் சுவாமிக்கு நைவேத்தியம் செய்கிறார். கர்ப்பூரத்தை ஏற்றிச் சுவாமிக்கு முன் பிடித்து நம்மைத் தரிசிக்கும் படி செய்சிறார்.

அர்ச்சகர் - ஞானகுரு. கத்தி - திருவருட் சக்தி, கர்ப்பூரம் - ஞானம், மூர்த்தி - சிவம், தேங்காய் - ஆணவம், பழம் முதலிய மற்றவைகள் - கன்ம, மாயா மலங்கள் எனவே ஞானாசாரியருடைய ஞானோபதேசத்தினால் திருவருட் சத்தி தோன்றி ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களை அழித்து, அவைகளை அர்ப்பணம் செய்ய சிவஞானம் தோன்றும் அந்த ஞானப்பிரகாசத்தினாலேயே சிவத்தை தரிசிக்க வேண்டும். இவ்வாறு இவற்றின் பொருள்களைக் கூறுகின்றனர்.

பழங்கள்: தட்டில் கொண்டுபோன பழங்கள் நறுஞ்சுவைகள் உடையன. அவை பக்தனுடைய நல்வினைப் பயன்களைக் குறிப்பன அவ்வினைகளையும் இறைவனிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்பதாம்.

வெற்றிலை, பாக்கு, முகவாசம் : இவை ஆன்மாவைப் பொருந்திய இராசதம், தாமதம், சாத்விகம், என்னும் முக்குணங்களைக் குறிப்பன இக்குணங்களையும் விட வேண்டும் என்பதாம்.

பிரம்மஸ்ரீ சோ. இரவிசந்திரக்குருக்கள்
பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்
ஆதீனகர்த்தா
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேஷ யாக திரவியங்கள் – பலன்கள்

| | | |
|---|---|---|
| பலாசு | - | ப்ரஜாவிருத்தி |
| கருங்காலி | - | விஜயம் |
| அரசு | - | தனாதிக்யம் |
| இத்தி(இச்சில்) | - | சௌக்யம் |
| அத்தி | - | போகம் |
| சந்தனம் | - | சாந்தி |
| ஆல் | - | ஆரோக்கியம் |
| வன்னி | - | வசியம் |
| வில்வம் | - | இஷ்டசித்தி |
| வெள்ளெருக்கு | - | ரோகநாசம் |
| நாயுருவி | - | விஷநாசம் |
| மா | - | ஐஸ்வர்யம் |
| பாதிரி | - | சத்ருக்ஷயம் |
| மூங்கில் | - | சாந்தி |
| பலா | - | கீர்த்தி |
| அறுகம்புல் | - | தரித்ரநாசம் |
| தர்ப்பை | - | ஞானசித்தி |
| நெய் | - | ரோகநாசம் |
| ஹவிஸ்(வெண்சாதம்) | - | சுபவிருத்தி |
| பாலன்னம் | - | ஆயுள் |
| எள்ளன்னம் | - | பாபநாசம் |
| மிளகன்னம் | - | சத்ருநாசம் |
| தயிரன்னம் | - | ஆரோக்கியம் |
| பருப்பன்னம் | - | வித்யாலாபம் |
| தேன்னன்னம் | - | சந்தோஷம் |
| கடுகு அன்னம் | - | பயநாசம் |
| தேங்காய்சாதம் | - | புஷ்டி |
| எலுமிச்சை சாதம் | - | வசியம் |
| பாயாசான்னம் | - | திருப்தி |
| உளுந்தன்னம் | - | க்ரோசசமனம் |
| வெண்கடுகு | - | க்ரோதசமனம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| உளுந்து | - | பசுவிருத்தி |
| நெல்பொரி | - | சா யுஜ்யம் |
| சத்துமாவு(ரிபுநாகம்) | - | கடன்நீக்கம் |
| பால் | - | சௌபாக்கியம் |
| தயிர் | - | சுகம் |
| வெல்லம் | - | செல்வப்பேறு |
| வாழைப்பழம் | - | துக்கநாசம் |
| மாம்பழம் | - | ரோகநிவர்த்தி |
| பலாப்பழம் | - | சுபம் |
| விளாம்பழம் | - | புத்ரலாபம் |
| மாதுளம்பழம் | - | புத்ரலாபம் |
| பேரிச்சம்பழம் | - | வலிமை |
| நாரத்தம்பழம் | - | சோகநாசம் |
| எலுமிச்சம்பழம் | - | வசியம் |
| திராட்சைப்பழம் | - | இஷ்டசித்தி |
| தேங்காய் | - | சர்வானுகூலம் |
| பயறு | - | ஆயுள் |
| கொண்டக்கடலை | - | சிரேயசு |
| கோதுமை | - | ஸாதிகாரம் |
| குளச்சல்நெல் | - | வீரயம் |
| யவைநெல் | - | இராஜவசியம் |
| மூங்கில் அரிசி | - | தேக காந்தி |
| கொள்ளு | - | தேகபலம் |
| கருமொச்சை | - | வம்சவிருத்தி |
| துவரை | - | வீர்யம் |
| தினை | - | இஷ்டசித்தி |
| வெள்ளைஎள் | - | சோகநாசம் |
| அவரை | - | பந்துலாபம் |
| நெல் | - | சுபிட்சம் |

பொற்சம்பா நெல்
செம்பாளை நெல்
வால் நெல்
வெள்ளை சம்பா நெல்
சிவப்பு சம்பா நெல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனுகு சம்பா நெல்
பெருஞ் சம்பா நெல்
செம்பவள நெல்
பன்றி நெல்
கூர் நெல்
முத்துசம்பா நெல்

| | | |
|---|---|---|
| சாமை | - | மழை |
| வரகு | - | மலநாசம் |
| கரும்பு | - | பிராணிசுகம் |
| வெள்ளரிக்காய் | - | விருத்தி |
| தேன் | - | சந்தோஷம் |
| சர்க்கரை | - | சத்ருநாசம் |
| அவல் | - | இஷ்டசித்தி |
| லட்டுகம்(இட்லி) | - | சுபிட்சம் |
| மாஷாபூகம்(வடை) | - | யட்சு |
| அப்பம் | - | சந்தோஷம் |
| நீர்க்கொழுக்கட்டை | - | இஷ்டசித்தி |
| திலாபூபம் (எள்கொழுக்கட்டை) | - | பாபநாகம் |
| தில கண்டம் (எள் உருண்டை) | - | ஆயுள் |
| மோதகம் | - | ஆனந்தம் |
| அகில் | - | வலிமை |
| தேவதாரு | - | சுகம் |
| வெண்மொச்சை | - | சௌந்தர்யம் |
| கிழங்குகள் | - | பூமிலாபம் |
| வெட்டிவேர் | - | லாபம் |
| விலாமிச்சைவேர் | - | மோகம் |
| மருக்கொழுந்து | - | விருத்தி |
| குங்குலியம் | - | சாதுர்யம் |
| சிற்றேனம் | - | ப்ரீதி |
| கிராம்பு | - | பயநாசம் |
| ஜாதிக்காய் | - | விரோதசமனம் |
| ஜாதிபத்திரி | - | அனுகூலம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பன்னீர் | - | பிரியம் |
| குங்குமப்பூ | - | ப்ரீதி |
| பச்சைக்கற்பூரம் | - | ப்ரீதி |
| சந்தனக்கட்டை | - | ப்ரீதி |
| கஸ்தூரி | - | ப்ரீதி |
| புனுகு | - | ப்ரீதி |
| கோரோஜனை | - | ப்ரீதி |
| செஞ்சந்தனம் | - | ப்ரீதி |
| தாமரை முதலான புஷ்பங்கள் | - | செல்வம் |
| பத்திரங்கள்(தளிர்கள்) | - | ஆரோக்யம் |
| வில்வம் | - | பாபநாசம் |
| வாசனை திரவியங் களுடன் கூடிய தாம்பூலம் | - | இஷ்டசித்தி |

## அபிஷேகப் பலன்

| | | |
|---|---|---|
| கந்த தைலம் | - | இன்பம் |
| மாப்பொடி | - | கடன்தீரும் |
| மஞ்சட்பொடி | - | அரசுவசீயம் |
| நெல்லிப் பருப்புப்பொடி | - | பிணிநீக்கம் |
| திருமஞ்சனத் திரவியம் | - | பிணிநீக்கம் |
| பஞ்சகவ்யம் | - | சுத்தம், கலபாபநீக்கம் |
| பஞ்சாமிர்தம் | - | முக்தி |
| பழ பஞ்சாமிர்தம் | - | முக்தி |
| பால் | - | ஆயுள் விருத்தி |
| தயிர் | - | ப்ரஜாவிருத்தி (குழந்தைப்பேறு) |
| நெய், இளவெந்நீர் | - | முக்தி |
| தேன | - | சுகம், சங்கீத குரல் வளம் |
| இளநீர் | - | இராஜபோகம் |
| சர்க்கரைச் சாறு | - | சத்ரு நாசம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


| | | |
|---|---|---|
| கரும்புச் சாறு | - | ஆரோக்கியம் |
| தமரத்தம் பழச்சாறு | - | மகிழ்ச்சி |
| எலுமிச்சம் பழச்சாறு | - | பயமபயம் போக்கும் |
| நாரத்தம் பழச்சாறு | - | மந்திர சித்தி |
| கொழுஞ்சிப் பழச்சாறு | - | சோகம் போ்க்கும் |
| மாதுளம் பழச்சாறு | - | பகைமை அகற்றல் |
| அன்னாபிஷேகம் | - | விளைநிலங்கள் நலந்தரும் |
| வில்வோதகம் (வில்வம் கலந்த நீர்) | - | மகப்பேறு |
| குசோதகம் (தருப்பை கலந்த நீர்) | - | ஞானம் |
| பன்னீர | - | குளிர்ச்சி |
| விபூதி | - | சகல ஐவ்வரியம் |
| ஸ்வர்ணோதகம் | - | சகல சௌபாக்யம் |
| ரத்னோதகம் (ரத்னம் கலந்த நீர்) | - | அரசாட்சி, பெருஞ்செல்வம் |
| கோரோசனை | - | சகல ஆரோக்கியம் மிக்க புகழ் |
| சகஸ்ரதாரை | - | சகல ஆரோக்கியம் மிக்க புகழ் |
| ஜவ்வாது | - | சகல ஆரோக்கியம் மிக்க புகழ் |
| புனுகு | - | சகல ஆரோக்கியம் மிக்க புகழ் |
| குங்குமப்பூ | - | சகல ஆரோக்கியம் மிக்க புகழ் |
| சங்காபிஷேகம் | - | சகல பாபாரிஷ்டம் |
| ஸ்நபன கும்பாபிஷேகம் | - | சித்த சுத்தியடைந்து சிவ்தரிசனம் |

ஒவ்வொரு அபிஷேகத்தின் பின் வடிகட்டிய சுத்த ஜலத்தால் அபிஷேகம் செய்ய பரம சாந்தம் உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ், பலாலி வீதி, கோண்டாவில். T.P : 222 6722